தென்நெல்லை அப்போஸ்தலன்

அருள்திரு

ஜாண்தாமஸ்



Rev. JOHN THOMAS

FATHER OF MEIGNANAPURAM

Bi Centenary Year


1807 - 1870



Rev. John Thomas



உவால்ஷ்
செல்லப் பிராணிகளா
பூனைகளுடன்



உவால்ஷ்
கையெழுத்திட்ட
புகைபபடம்

" தென் நெல்லை அப்போஸ்தலன் "

அருட்திரு. ஜாண்தாமஸ்



1807 – 2007

அருட்திரு. **ஜாண்தாமஸ்** ஐயரவர்களின்

200 வது பிறந்த நாளை முன்னிட்டு

மெய்ஞானபுரம்

பொது மகமை சங்கத்தினரால்

வெளியிடப்பட்டது.

ஆசிரியர்

பேராசிரியர். குட்டி. P. ஜேஸ்கர்

பதிப்பாசிரியர்

J. பொன்ராஜ் சத்தியசீலன்

முதற்பதிப்பு

ஜனவரி 2008

பிரதிகள் கிடைக்குமிடம்

செயலாளர்,

பொது மகமைச் சங்கம்,

மெய்ஞ்ஞானபுரம் – 628210.

தூத்துக்குடி மாவட்டம்.

விலை : ரூ. 40

அச்சிட்டோர்

பிரைட் பிரிண்டர்ஸ்,

திசையன்விளை.

வெளியீடு

பொது மகமைச் சங்கம்

மெய்ஞ்ஞானபுரம்

பேராசிரியர் குட்டி.P. ஜேஸ்கர் M.Sc.,M.Phil.,B.Ed.,
விலங்கியல் துறை
போப் கல்லூரி, சாயர்புரம்



அணிந்துரை

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்வார்கள் என்பது கர்த்தரின் கட்டளை. உபாகமம். 32[7]

தலைமுறை தலைமுறையாக கர்த்தர் நமக்கு செய்திருக்கிற மகத்தான கிரியைகளைப் பற்றி அறிவது அத்தனை பெரும் பாக்கியம்! அப்பெரும் பாக்கியத்தை பெறுவது நம் சிலாக்கியம் அல்லவா !

திருநெல்வேலி திருச்சபை தேவ ஆசீர்வாதத்தைத் திரளாகப் பெற்றுள்ளது. அதற்குக் கிடைத்த பேராசீர்வாதங்களின் சிறந்த ஒன்று அப்போஸ்தலர் வரிசையில் வைத்து அந்நாளை நினைவு கூர்ந்து கடவுளுக்கு நன்றி செலுத்தத் தகும் மிஷனெரிமார் பலரைப் பெற்ற பாக்கியமாகும். திருநெல்வேலி அனைத்திற்கும் அப்போஸ்தலரை சங்கை ரேனியஸ் (RHENIUS) ஐயரைத் தந்த ஆண்டவர். அதன் வடக்கு பகுதிக்கு ராக்லாந்தையும் (REGLAND) தென்பகுதிக்கு ஜாண்தாமஸையும் (JOHN THOMAS) வடகிழக்கு பகுதிக்கு கோண்ஸையும், கீழ்ப்பகுதிக்கு தாமஸ் டக்கரையும் (THOMAS TUCKER) தென்கிழக்கு பகுதிக்கு கால்ட்வெல்லையும் (CALDWELL) மத்திய பகுதிக்கு சார்ஜென்றையும் (SARGENT) வடமேற்கு பகுதிக்கு பேரன் புருக் ஐயும், மேற்பகுதிக்கு பால் ஷாப்வற்றையும் தந்ததுமன்றி, சாயர்புரத்துக்கு ஒரு போப் (POPE) நாசரேத்துக்கு ஒரு மர்காஷிஸ் (MARGOSCHIS) கிறிஸ்டியான் நகரத்துக்கு ஒரு பெஸ்ட் (BEST) தூத்துக்குடி ஒரு ஷாராக் (SHARROCK) டோனாவூருக்கு

ஒரு உவாக்கர், சிவகாசிக்கு ஒரு மெடோஸ், கடாட்சபுரத்துக்கு ஒரு ஜாண்தேவசகாயம் என்றிவ்வாறு பல மிஷனெரிப் பெரியாரையும் தந்து ஆசீர்வதித்தார்.

திருநெல்வேலி திருச்சபையென்னும் அழகு நிறைந்த இத்திருமாளிகையில் நெடுவிளை என்னும் தேரியும், பனை மரங்களும், முட்செடிகளும் நிறைந்து பின்தங்கி காணப்பட்ட கிராமத்தை மெய்ஞானபுரம் என்னும் பாலைவனச்சோலை கிராமமாக மாற்றி, அஸ்திபாரமாகிய இயேசு ரட்சகரின் மேல் அவருக்காக, அவருடைய கிருபையினால், அவருடைய நடத்துதலுடன், அவருடைய பெலத்தைக் கொண்டு கட்டி வளர்த்த தென் நெல்லை அப்போஸ்தலன் பரிசுத்தவான் ஜாண்தாமஸ் ஐயரவர்களின் வாழ்க்கை வரலாறை எழுத்தில் வடிக்க எனக்கிருந்த நெடுநாளைய வாஞ்சை ஓரளவு நிறைவேற எம் பெருமான் அருளிச்செய்து வரும் கிருபையின் ஈவுக்காக அவரது திருப்பாதத்தில் என் நன்றிப் பெருக்கை சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை எழுத ஊக்கம் தந்து, இதை அச்சிட்டு வெளியிடவும் முன்வந்துள்ள மெய்ஞானபுரம் பொது மகமை சங்க தலைவர் திரு.J. ஜெய்பால் முத்தையா, உதவி தலைவர் திரு.J. தனசேகர், செயலர் திரு. J. பொன்ராஜ் சத்யசீலன், பொருளாளர் திரு.M. தர்மராஜ், நிர்வாகிகள் மற்றும் மெய்ஞானபுரம் பொதுமகமை சங்கத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும் என் நன்றி.

இந்நூலில் வரும் படங்களை எனக்கு சிறந்த ஒத்துழைப்புடன் எடுத்து கொடுத்த J.J. ஸ்டூடியோ திரு. பிராங்க்ளின், மெய்ஞானபுரம், ஜென்ட்லி ஸ்டூடியோ திரு. பீட்டர் நாசரேத் அவர்களுக்கும் திரு. மைக்கா ரத்தினராஜ், மெய்ஞானபுரம் அவர்களுக்கும் மற்றும் அரிய சில படங்கள் கொடுத்த நண்பர்களுக்கும் கணிணி அச்சடித்துக் கொடுத்த (COMPUTER TYPING) திரு. ஜெபசிங், நாசரேத் அவர்களுக்கும் என் நன்றி.

" தேவனே எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வ நாட்களில் நீர் நடப்பித்த கிரியைகளை அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள் அவைகளை எங்கள் காதுகளால் கேட்டோம்." சங். 44 : 1

அதற்கு மகிமையாக கனம் ஜாண்தாமஸ் ஐயரவர்களால் மெய்ஞானபுரம் சபைக்கு ஈவாகத் தரப்பட்ட ஆலயத்தையும், அதற்கு மகுடமாக அமைக்கப்பட்டுள்ள கோபுரத்தையும், அதன் புதுமையும், புகழும் மங்காது பேணிக்காத்து வரும் தலைமுறை தலைமுறையான சபை மக்களை, ஊழியர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

வானளாவி நிற்கும் பரிசுத்த பவுலின் ஆலயத்தின் கோபுரம் கிறிஸ்தவ வாழ்க்கையின் தனித்தன்மையை நமக்கு எடுத்துக் கூறிக் கொண்டேயிருக்கிறது. கற்பாறையாகிய கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரமிடப்பட்டவர்களாய் வானாதி வானங்களில் வீற்றிருக்கும் சர்வ வல்ல கடவுளுடன் தொடர்புடையவர்களாய் மேலான காரியங்களில் நாட்டத்தோடு, இயேசு கிறிஸ்துவின் அன்புக்கு சாட்சிகளாய் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்த அமைதியாய் நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் கோபுரத்தின் நிழலில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, உலக முழுவதும் வாழ்ந்து வரும் மக்களுக்காகவும், கனம் ஜாண்தாமஸ் ஐயரவர்களின் கொள்ளு பேரன் கனம் பில்கெம் (Bill Kemm) அவர்களுடைய குடும்பங்களுக்காகவும், கர்த்தரை ஸ்தோத்தரிப்போமாக.

J. பொன்ராஜ் சத்தியசீலன்
செயலாளர்
பொது மகமை சங்கம், மெய்ஞ்ஞானபுரம்



பதிப்புரை

மோசே " கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால் நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின போது வனாந்தரத்திலே உங்களுக்கு புசிக்க கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியினர் பார்க்கும் படிக்கு அவர்களுக்காக அதைக் காப்பதற்கு அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்க வேண்டும் " என்றான் (யாத். 16 : 32) இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து புறப்படப் பண்ணி, வனாந்திரத்திலே வழி நடத்திய தேவன் அவர்களை வானத்தின் மன்னாவால் போஷித்த பொழுது அவர்களுக்கு கொடுத்த கட்டளை இது : கர்த்தர் நமக்குச் செய்த உபகாரங்களை, நன்மைகளை பின்வரும் சந்ததியார் அறிந்து கொள்ளும்படியாக அவர்களுக்காக அதை காத்து வைக்க வேண்டும் என்பது பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக நாம் அறியும் பாடம்.

நம் மூதாதையர்கள் அஞ்ஞானம், அறியாமை எனும் பாவ இருளிலிருந்து ரேனியஸ் ஐயரவர்களால் வெளியே அழைத்து வரப்பட்டார்கள். தொடர்ந்த அவர்களின் ஆன்மீகப் பயணத்தில் அவர்கள் சோர்வும் களைப்பும் அடைந்தபொழுது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வானத்தின் மன்னாதான் தென்நெல்லை அப்போஸ்தலன் என அழைக்கப்படும் அருள்திரு. ஜாண்தாமஸ் ஐயரவர்களின் ஊழியமும், போதனைகளும் ஆகும்! தன்னையே இந்த மண்ணுக்காய் அர்ப்பணித்த தியாகச் சுடர்! மெய்ஞ்ஞானபுரம் திருச்சபை வளர்ந்தோங்கும் எனும் நம்பிக்கையை ஆலயத்தின் பிரம்மாண்டத்தில்

அன்று காட்டிய தீர்க்கன்! அவருடைய வாழ்க்கைச் சுவடுகள், ஊழியத்தின் ரேகைகள் பின்வரும் சந்ததியினர் மனதில் பதிந்திட வேண்டுமென்ற நோக்கினில் வெளியிடப் பட்டதுதான் இச்சிறிய வரலாற்று நூல்!

இந்நூலின் ஆக்கியோன் பேராசிரியர் குட்டி. P. ஜேஸ்கர் ஜெபராஜ் அவர்கள். காலஞ்சென்ற அவருடைய பெற்றோர் திரு. பொன்னுசாமி ஆசிரியர் திருமதி. சிவந்திபாய் ஆசிரியை ஆகியோரைப் போலவே நம்முடைய ஆலயம் மற்றும் அதனைச் சார்ந்த காரியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். நம் ஆலயப் பாடகர் குழுவில் சிறப்பான அங்கம் வகித்தவர்கள். சிறந்த இசைக் கலைஞர். தற்போது சாயர்புரம் போப் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்கள். இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் அருள்திரு. ஜாண்தாமஸ் ஐயரவர்களின் வழித்தோன்றல்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இந்நூலை எழுதுவதற்காகவும், அரிய புகைப் படங்களை சேகரிப்பதற்காகவும் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. ஜாண்தாமஸ் ஐயரவர்களின் ஊழிய காலத்தின் பதிவுகளை பல சரித்திர ஆய்வு நூல்களிலிருந்து திரட்டி நமக்கு தொகுத்து தந்துள்ள அவர்களுடைய பணிக்காக மெய்ஞானபுரம் மக்கள் என்றும் அவருக்கு கடமைப்பட்டுள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

இந்நூலில் வெளியிடப்பட்டுள்ள அரிய புகைப்படங்களில் ஒருசில படங்களை கொடுத்து உதவிய திரு.A. தாசன் மனுவேல்ராஜ், திரு. ஜாண் சந்தோஷராஜ் திரு.Y.டேனியல் மற்றும் ஆலயத்தில் பல்வேறு பரிமாணங்களை புகைப்படங்களாக நம் கண்முன்னே நிறுத்தியுள்ள திரு. மைக்கா M. ரத்தினராஜ், திரு.M. பிராங்க்ளின் மற்றும் நாசரேத்தைச் சார்ந்த திரு. பீற்றர் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களுடைய சேவையால் இந்நூல் வைரங்கள் பதிக்கப்பெற்ற ஆபரணமாகத் திகழ்வது கண்கூடான உண்மை.

இந்நூல் பதிப்பிக்கப்பட என்னோடு தோளோடு தோள் நின்று நல்ல பல ஆலோசனைகள் வழங்கி, ஊக்கமும், உற்சாகமும் அளித்த பொதுமகமை சங்கத் தலைவர் J. ஜெயபால் முத்தையா உபதலைவர் J. தனசேகர், பொருளாளர் M. தர்மராஜ் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த புத்தகம் சிறப்புற வெளியிடப்பட வேண்டும் என அதற்காக ஜெபித்த சபையின் நல்லுள்ளம் கொண்ட நல்லோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இறைமகன் இயேசுவின் இனிய நல் தூதராம் அருள் மைந்தர் ஜாண்தாமஸ் ஐயரவரின் 200 வது பிறந்த நாளை (1807 – 2007) சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்படும் இந்நூல் கற்போர் மனதில் நல்லுணர்வுகளை வளர்க்க வேண்டும் எனும் வாழ்த்துதலுடன் இச்சிறு மலரை இறைவனின் பாதங்களில் படைக்கின்றேன்.

J. பொன்ராஜ் சத்தியசீலன்

✞

Jesus, the humble suffering servant is the powerful conquering king and judge

CHURCH OF SOUTH INDIA

THOOTHUKUDI - NAZARETH DIOCESE

The Rt. Rev. Dr. J.A.D. Jebachandran, B.Sc.,M.A.,B.D.,D.D.,
Bishop in Thoothukudi - Nazareth Diocese
Chairman - TND Institutions
Chairman & Manager - TND Colleges

Bishop's House
111/32 T, State Bank Colony
Thoothukudi - 628 002

Office Ph : 0461 - 2345430
Resi Ph : 0461 - 6536555
Fax : 0461 - 2346911
Mobile : 9443615257
E.mail : bishoptnd@dataone.in

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த மெய்ஞானபுரம் சபை மக்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.



தூத்துக்குடி நாசரேத் பேராயம் மெய்ஞானபுரம் பரிசுத்த பவுலின் ஆலய நிறுவனர் மகான் அருள்திரு. ஜாண்தாமஸ் ஐயரவர்களின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்திற்கு வாழ்த்துரை எழுதி அகமகிழ்கின்றேன்.

" உங்களுக்குக் கடவுளின் வார்த்தையை எடுத்துச் சொன்ன உங்கள் தலைவர்களை நினைவு கூருங்கள் அவர்களது வாழ்வின் நிறைவை எண்ணிப் பார்த்து நீங்களும் அவர்களைப் போல நம்பிக்கையுடையவர்களாய் இருங்கள். "

எபிரேயர் 13 7

அருள்திரு. ஜாண்தாமஸ் ஐயரவர்களின் பாதம் மெய்ஞை மண்ணில் 33 ஆண்டுகளாய் அயராது இரவும் பகலும் அருட்பணி செய்ததின் பயனாய் 55 ஓலைக்குடிசைகளில் வாழ்ந்தோர் இன்று 500க்கும் அதிகமான குடும்பங்களாய் பெருகி இறைவன் இயேசுவுக்குள் நல்வாழ்வு பெற்றுள்ளது. உயரிய கோபுரத்துடன் கூடிய மகிமையான தேவாலயத்தை மக்கள் வழிபடுவதற்காக இங்கிலாந்து தேசத்தில் உள்ள சி.எம்.எஸ். சங்கத்தினரின் உதவியுடன் கட்டி எழுப்பியுள்ளார்.

நம் உள்ளங்களில் அவரது உள்ளத்தில் எழுந்த ஜெபம், ஊழிய வாஞ்சை, வேகம், துடிப்பு, சாதனை போன்றவைகளை நிலைநிறுத்தி தூர தரிசனத்துடனும் ஆன்மீக தாகத்துடனும் மக்களுக்கு தொண்டாற்றும் செயல் வீரர்களாக திகழ உளமார வாழ்த்துகிறேன்.

இவ்வரலாற்று புத்தகம் வெளியிட உதவிய மெய்ஞானபுரம் பொது மகமை சங்க நிர்வாகஸ்தர்கள் யாவரையும் பாராட்டுகிறேன். ஆண்டவரின் அருள் ஆசி உங்களோடு இருந்து அருள்திரு. ஜாண்தாமஸ் ஐயரவர்கள் கொண்டிருந்த தூர தரிசனத்தை தொடர்ந்து நிறைவேற்றும் சந்ததியாக வாழ இறை மைந்தன் இயேசு உதவி செய்வாராக. ஆமென்.


அன்பரின் பணியில்

சா.அ.த. ஜெபச்சந்திரன்
(பேராயர்)
தூத்துக்குடி நாசரேத் பேராயம்

விடுதலை நிலையில் வாழ்வதற்கென அழைக்கப்பட்டீர்கள் . . .
அனபினால் ஒருவருக்கொருவர் தொண்டு செய்யுங்கள். கலாத்தியர். 5 : 13

YOU ARE CALLED TO BE FREE . . .
LET LOVE MAKE YOU SERVE ONE ANOTHER. GALATIANS. 5 : 13

T. Joseph Athisayaraj
M.A.,M.A.,M.Ed.,M.Phil.,B.D.,D.D.,
P.G. Assistant.,
CATHEDRAL HIGHER SEC SCHOOL
PALAYAMKOTTAI - TIRUNELVELI



வாழ்த்துரை

சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி : உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. ஏசாயா 52[7]

"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்" என்ற ஏசாயா தீர்க்கனின் வாக்குப்படி இயேசு என்னும் மெய்யான ஒளி உலகில் தோன்றி ஜனங்களை இரட்சிப்புக்கு நேராக வழி நடத்திற்று. அவ்வொளியை நெடுவிளை என்ற கிராமத்திற்கு கொண்டு வந்து மக்களை பிரகாசிப்பிக்கின்ற சுவிசேஷ பணியை நிறைவேற்றி வந்தவர் ஜாண்தாமஸ் ஐயரவர்கள்.

இப் பரிசுத்தவானின் காலடி
திருமண்டலத்தின் மகுடம் – மெய்ஞை
திருச்சபையின் பேரொளி
அருளின் புது வரவு
துயர் நீக்கும் மாமருந்து
வையத்து மணி விளக்கு


கிறிஸ்துவின் தொண்டராய் இவராற்றிய பணி திருச்சபையினரின் இருளை அகற்றி, மெய்ஞானம் என்னும் ஒளியை ஏற்றி வைத்தது. இவர் அருளிய தொழுகை ஸ்தலம் தமிழ் நாட்டின்

மிக உயர்ந்த தேவாலயம். தன்னை மெய்ஞானபுரத்திற்கு அர்ப்பணித்த தியாக சீலர். அன்னவரின் பூத உடலோ இன்றும் தேவாலயத்திற்கு அருகில் நம் புனித மண்ணில் நித்திரை கொள்ளுகிறது.

இப்பெருமானின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்க வாசிக்க உள்ளம் உருகும், பாவங்கள் அகன்றிடும். தூய ஒளி அகத்தில் தங்கிடும். உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தும். இப்பரிசுத்தரின் வாழ்க்கை வரலாற்றை தன் கல்லூரி பணியின் மத்தியிலும் நமக்கு நூல் வடிவில் தந்த என் அன்பு தம்பி பேராசிரியர் " குட்டி " ஜேஸ்கருக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இறைவனின் அருட்பணி தொடரவும் அப்பணிக்கென்று இன்னும் பல நூற்களை எழுதவும் அன்னாருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன். அன்னாரது சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் ஜாண்தாமஸ் ஐயரவர்கள் வாழ்க்கை வரலாறு என்னும் நூல் அநேகரது வாழ்க்கையில் அணையா விளக்காக ஒளி வீசவும் வாழ்த்துகிறேன்.

மகிழ்ச்சியில் உங்களுடன்...

I. ஜோசப் அதிசயராஜ்.





ஜாண்தாமஸ் மனம் மாற ஏதுவாக இருந்த
லாமப்ரே ஆலயம்



பெண்கள் பள்ளி மாணவிகள்


AND TO THE BELOVED MEMORY OF
THE REV? JOHN THOMAS.
AND THE BUILDER OF THIS CHURCH
THE GOSPEL OF CHRIST.
HE BEING DEAD YET SPEAKETH.


MARY
BELOVED WIFE OF THE LATE REV? JOHN THOMAS.
SHE LABOURED IN LOVING MINISTRY


In Loving Memory Of
FRANCIS ELIZABETH
BELOVED DAUGHTER OF THE REV. JOHN THOMAS.
BORN APRIL 8 1850. ENTERED INTO REST FEB 28 1939.
FOR 57 YEARS SHE LABOURED WITH DEVOTION AND SELF SACRIFICE
AND FOUNDED THE ELLIOTT TUXFORD SCHOOL.
She spake of Him.

கனம் ஜாண் தாமஸ்

இங்கிலாந்து தேசத் திருச்சபை குருவாயிருந்து பின் வேல்ஸ் நாட்டு கால்வினிஸ் மெதடிஸ்ட் சபையைச் சேர்ந்து கொண்ட ஜாண் டேவிஸ் ஐயருக்கும் அவரது மனைவி ஜேன் அம்மாளுக்கும் பிரான்ஸஸ் (FRANCES) என்ற ஒரே மகள் தான் உண்டு. அந்த ஒரே மகளை கார்மாத் தென் வட்டத்தில் உள்ள ட்ரொலக் (TRELECH) என்ற ஊரில் பெருத்த விவசாயியாயிருந்த தாமஸ் என்பவர் மணந்தார். தாமஸ் பிரான்ஸஸ் என்ற தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக பிறந்தவர் ஜாண்தாமஸ். 1807 நவம்பர் 10 ஆம் தேதி ஜாண்தாமஸ் பிறந்தார்.

ஜாண்தாமஸ் பத்து வயதாயிருக்கும் போது கார்மாத்தென் நகரிலிருந்த பள்ளியில் படித்தார். பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு மூன்றாண்டுகள் கார்மாத்தெனிலில் ஒரு வக்கீலிடம் வேலை பார்த்தார்.

இங்கிலாந்தின் மேல்பகுதியிலுள்ள வேல்ஸ் நாட்டில் பெம்ரோக் என்ற ஊருக்கு அருகிலிருந்த லம்ப்வி என்ற கிராம சபைக் குரு பயர்ஸ் (BYERS) ஒரு சிறந்த பக்தன் 1827 ஆம் ஆண்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை ஆராதனையை முடித்துவிட்டு வந்தார். அப்போது ஜாண்தாமஸ் என்ற வாலிபன் ஐயா, நான் வக்கீல் செயலகத்தில் வேலை செய்கிறேன். இன்று மாலை நானும் என் நண்பர்கள் சிலரும் பவ்ரெஷ் வாட்டர் வரை போய்வர புறப்பட்டோம். அவர்களில் கார்மார் தென் ஊரானாகிய நண்பனொருவன், திரும்பும் வழியில் அறிமுகமான ஒருவருடைய வற்புறுத்தலின் பேரில் உங்கள் ஆலயத்திற்குள் நாங்களிருவரும் புகுந்தோம். குருவானவரை கேலி செய்வது எங்களுக்கு மிகவும் பிரியமான பொழுதுபோக்கு. ஆனால் உங்கள் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு நிம்மதியிழந்தேன். என் பாவங்கள் எனக்கு முன் மலைபோலெழும்பி என் மீது விழுந்து என்னை நசுக்குகின்றன. ஐயா நான் ஒரு மகத்தான பாவி, நீசன், என் வாழ்நாளை வீணாக்கிவிட்டேன் எனக்கு மன்னிப்பே கிடையாது என்று அழுகிறார். குருவானவர் பயர்ஸ் அழாதே என்று கூறி தனது மனைவியை அழைத்து இதோ என் இளம் நண்பன் பாவ உணர்ச்சி அடைந்து கலங்கி நிற்கும் ஜாண்தாமஸ். அவனுக்காக நீ ஜெபிக்க ஏற்பாடு செய் என்றார்.

சில நிமிடங்களுக்குள் பயர்ஸின் குடும்பம் குடும்ப ஜெபத்திற்காக கூடினர். வழக்கமாக ஞானப்பாட்டு பாடுவது வழக்கம். ஆ! அது எத்தனை உருக்கமானது. ஜாண்தாமஸ் தன் இருதயத்தை அதில் ஊற்றி பாடினார். அவருடைய இதயக் கண்ணீரில் அப்பாடலின் கருத்துக்கள் கரைந்து கலந்தன. கீதம் முடிந்தது. தாமஸ் தன்


இருதயத்தை கடவுளுக்கு அர்ப்பணித்தார். இரட்சகரின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவராக எழுந்தார்.


ஞாயிறு தோறும் லம்ப்விக்கு (LAMPHEY) சென்ற தாமஸ் ஆராதனையில் பாடகர் குழுவில் சேர்ந்து பாட்டுகள் பாடுவதிலும், பின் ஓய்வு நாள் பள்ளிக்கூடம் நடத்துவதிலும், அச்சபைக்கும், பயர்ஸ் ஐயருக்கும் வெகு உதவியாயிருந்தார்.

1830 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்து மிஷனெரி ரிஜிஸ்தர் (C.M.S.) ஒன்று அவருக்கு கிடைத்தது. அதில் உலகத்தின் பற்பல பகுதிகளில் ஊழியம் நடத்தி வந்த மிஷனெரிமார் தங்கள் பலதிறப்பட்ட சுவிசேஷத் திருப்பணிகளைப் பற்றிய விபரங்கள் தந்திருந்தனர். திருநெல்வேலி மிஷனெரிகளான, ரேனியஸ், ஸ்மிட் என்பவர்களின் 1829 ஆம் ஆண்டு ரிப்போர்ட்டும் நாட்குறிப்புகளும் அதில் அச்சாகியிருந்தது. அதிலிருந்து மிஷனெரி ஊழியம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவருள்ளத்தில் துளிர்க்கத் தொடங்கியது. தன்னை கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

1831 ஆம் ஆண்டு C.M.S. சங்கத்தாரிடமிருந்து அழைப்பு வந்தது. மே மாதம் 7ம் தேதி பெம்பரோக்கை (PEMBROKE) விட்டு புறப்பட்டு மறுநாளாகிய 8ம் தேதி ஞாயிற்றுக்கிழமை லண்டனுக்கு பிரயாணம் செய்தார். சங்கத்தார் அவரை ஏற்றுக்கொண்டார்கள். ஆயினும் அவருடைய இளமையினிமித்தம் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே அவரைத் தங்கள் மிஷனெரி பயிற்சி ஸ்தாபனமான இஸ்லிங்றன் (ISLINGTON) சர்ச் மிஷனெரி கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற அனுப்பினர் (1833 – 1835) லம்ப்வி சபையார் அவருக்கு தகுந்த முறையில் பிரிவுபசாரம் கொடுத்து அனுப்பினர். பயிற்சி முடிந்த பின் 1835 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் நாள் (14.06.1835) லண்டன் பட்டணத்து அத்தியட்சர் அவருக்கு உதவி குருபட்டம் கொடுத்தார்.


கார்மார் தென்னில் ஜாண்டேவிஸ் (JOHNDAVIS) என்னுமொரு நல்ல மனிதர் இருந்தார். எலிசபெத் ஹால் என்ற பெண்ணை மணந்து கிறிஸ்தவ இல்லறம் நடத்திவந்த அவரது வீட்டில் மகிழ்ச்சி தந்த குழந்தைச் செல்வங்களில், மேரி ஒருத்தி. தெய்வபக்தி மிகுந்தவள். திறமையும் காரிய சிந்தையுமுள்ளவள். ஆண்டவரின் அன்பால் நெருக்கி ஏவப்பட்டவள். அவள் தன் ஆண்டவரின் ஊழியனான ஜாணின் அன்புக்குரியவளானாள். ஜாணின் மிஷனெரி வாஞ்சையை மனப்பூர்வமாக வரவேற்ற அவள், உலகில் எப்பகுதியில் அவர் மிஷனெரிப் பணியில் ஈடுபட்டாலும் அவருடன் சென்று சேவையில் உதவ ஆயத்தமானாள்.







ஆல்ட்டர் கண்ணாடிகளின் அடிப்பாகத்தில்
மிஷனெரிகள் பற்றிய குறிப்பு



நாழி ஓடு வேயப்பட்ட பவுலின் ஆலயம்



பல்லக்கில் வரும் ஜாண்தாமஸ் ஐயரவர்களுக்கு
சபைமக்களின் வரவேற்பு

1836 ஆம் ஆண்டு ஜுன் 5 ஆம் நாள் (05.06.1836) ஜாண்தாமஸ் கிளாஸ்றர் நகர அத்தியட்சரிடத்தில் குருபட்டம் பெற்றார். இரண்டு மாதங்களில் அவர் இந்தியாவுக்கு மிஷனெரியாக போக வேண்டுமென்று தீர்மானமாயிற்று. 1836 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதி (13.08.1836) புறப்பட வேண்டும். பிரயாணம் நான்கரை மாத காலம் நீடிக்கும். குறிப்பிட்ட நாள் வந்தது. ஜாண்தாமஸ் கப்பலேறினார். அருமையானவர்கள் கண்ணீருடன் நல்வாழ்த்துக் கூறி, ஜெபித்து விடை கொடுத்தனுப்பினர்.

சென்னையில் கிறிஸ்மஸ் தினத்திற்காக (1836) துறைமுகம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. வெல்லிங்கற்றன் (WELLINGTON) என்ற கப்பல் துறைமுகத்துக்குள் வந்து நங்கூரம் பாய்ச்சி நின்றது.

சென்னையில் சுமார் நான்கு வாரங்களைக் கழித்து பின் அவர் மிஷனெரி ஊழியம் செய்யும்படி குறிக்கப்பட்ட திருநெல்வேலிக்கு ஜாண்தாமஸ் ஐயர் 1837 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் தேதி புறப்பட்டார் (17.01.1837) பெப்ரவரி மாதம் 5ம் நாள் பாளையங்கோட்டை வந்தடைந்தார். (05.02.1837) ஏற்கனவே அங்கு மிஷனெரியாக இருந்த ஐயர் ஜார்ஜ் பெற்றிட் (GEORGE PETTIT) மகிழ்ச்சியுடன் வரவேற்றார். ஜாண்தாமஸ் பெற்றிட்டுக்கு உதவியாக குருவன்கோட்டை சேகரத்தை மேற்பார்வை செய்வதுடன் மிஷனெரி பணியில் உதவி செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1837 வரை பத்து சேகரங்களாக இருந்த C.M.S. சபைகளை ஐந்து சேகரங்களாய் பிரித்தார்.

1. திருநெல்வேலி
2. வடசேகரம்
3. செங்குளம்
4. சாத்தான்குளம்
5. மெய்ஞானபுரம்

ஜாண்தாமஸ் ஐயரவர்கள் பெற்றிட் ஐயருக்கு உதவி செய்து வந்தார். அப்படி அவர் பல சபைகளைப் பார்த்துவிட்டு மெய்ஞானபுரத்தை அடைந்தார். அன்று கிறிஸ்மஸ் தினம் (25.12.1937) அன்று ஐயரவர்கள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்து ஒரு வருடம் முடிந்தது. அதினாலோ என்னவோ அவரை அறியாமலே மெய்ஞானபுரத்தின் மேல் அவருக்கு ஒரு பற்று உண்டாயிற்று. அன்று மெய்ஞானபுரம் என்ற மிஷன் கிராமம் ஓலைக் குடிசைகளாலானவை. ஒழுங்கான தெருக்கள் கிடையாது. வீடுகள் எவ்விதமான ஒழுங்கிலும் கட்டப்படவில்லை.

அங்கு வாழ்ந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள். ஆண்கள், பெண்கள், சிறுவர்களுமாக சேர்ந்து சுமார் 330 பேர் இருந்தனர். 1825 ஆம் ஆண்டு விக்கிரக வணக்கத்திற்குரிய புறமத கோயிலாயிருந்தது தேவாலயமாக மாற்றப்பட்டது. ஆலயம் ஓலையால் வேயப்பட்டது. அதுவே மெய்ஞானபுரத்தின் முதல் ஆலயம் 1830 ஆம் ஆண்டு அதே இடத்தில் இரண்டாவது ஆலயம் கட்டப்பட்டது. அது தாழ்ந்த கட்டிடமாகவும் ஜன்னல்கள் குறைவாகவும், வெளிச்சமும், காற்றோட்டமும் குறைவாகவும் காணப்பட்டது.

மெய்ஞானபுரம் துவக்க வரலாறு

சர்ப்பத்தின் தலை நசுங்குண்டது

சாபநிலம் என்று அந்நாளில் அறியப்பட்ட மணல் பூமியில் நிறைந்திருந்தன. பனை மரங்கள். அம்மரங்களினடியில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பற்பல குக்கிராமங்கள். தரையோடு தரையாய்க் காணப்படும் தாழ்ந்த சின்னஞ்சிறு வீடுகளும் குடிசைகளும். ஆங்காங்கே முட்புதர்களும் கள்ளிக்கூட்டங்களும் பனைகளிலேறுவோரும், இறங்குவோரும், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நடப்போருமான சில மனிதர். ஆங்காங்கே ஓலைக் குடிசைகள். அவற்றின்முன் பெருந்தாளிகளை, பனையோலைகளும் மட்டைகளும் கொளுந்துவிட்டெரியும் அடுப்புகளின் மேல் வைத்துப் பதனீர் காய்ச்சும் பெண்கள். முட்புதர்களை மேய்ந்து திரியும் வெள்ளாடுகள். அவற்றை மேய்க்கும் இளஞ்சிறார்கள். இவையே அக்காட்டில் கண்ட காட்சிகள் அவற்றைப் பார்த்துக்கொண்டே, தன் குதிரையின் மேலிருந்தவராய் அக்காட்டில் பயணம் செய்து சென்றார் ஒரு வெள்ளைக்கார மிஷனெரி. ரேனியஸ் என்பது அவர் பெயர்.

அக்கிராமங்களிலொன்றான நெடுவிளையைக் கிட்டினதும் அவர், அவ்வூரில் விக்கிரகத்திற்கான கொடை நடந்துகொண்டிருந்த இடத்தை அண்டினார். அங்கு ஒரு பெரிய இலந்தை மரம். அதனருகில் ஒரு விக்கிரக கோயில். அதன் முன்னால் சாமியாடிப் பெண்ணொருத்தியின் சாமியாட்டம். கொட்டு மேளம். கும்பலின் கூச்சல், ஆரவாரம், கிடாய்வெட்டு, எரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் எக்காளமிடும் பெருங்கூட்டம். திருவிழாக் கோலம் பூண்ட அப்பகுதியில், தற்காலிகக் குடிசைக் கடைகள். அவற்றில் முறுக்கு, பழம், கடலை, பொரியரிசி, சோளப் பொரி போன்ற திண்பண்டங்கள். வியாபார மும்முரம். இவையனைத்தையும் பார்த்துக்கொண்டே ஒரு பனை

மரத்தின் நிழலில் நின்றிருந்தார் ரேனியஸ்.

அவரது கண்களில் இரக்கம் குடிகொண்டிருந்தது. முகத்தில் உள்ளத்தின் வேதனை பளிச்சிட்டது. உதடுகள் உன்னதத்துக்கு நேராய் வேண்டுதல்களையனுப்பிக் கொண்டிருந்தன. அவரணிந்திருந்த சட்டையின் பைகளிரண்டும் விம்மிக் கிடந்தன. தோளில் தொங்கிய பெரிய பையில் சுவிசேஷப் பங்குகள், துண்டு தாள் பிரதிகள் முதலியன மண்டிக் கிடந்தன. அப்பொழுது, திடீரென்று அந்தக் கும்பலில் குழப்பமுண்டானதைக் கண்டார். கூட்டத்திலிருந்து வாலிபனொருவனின் வேதனைக் குரல் கேட்டது. என்ன, என்ன, என்ன நடந்ததென்று கேட்டுக்கொண்டே அவனைச் சுற்றிலும் மக்கள் கூடிவிட்டனர். அவனோ, ஐயோ, என் உயிர் போகிறதே, பாம்பு கடித்துவிட்டதே என்று கதறினான். அக்குரல் தன் மகனுடையதாயிருந்ததைக் கேட்டு, சாமியாடிக் கொண்டிருந்த மூதாட்டி, ஆட்டத்தை நிறுத்திக் கூட்டத்தினுள் புகுந்து ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

அதற்குள் அங்கு வந்துவிட்ட ரேனியஸ் ஐயர், அவனருகில் உட்கார்ந்து பாம்பு கடித்த இடத்தைக் காட்டச் சொன்னார். அவன் வேதனையால் முனகிக்கொண்டே அந்த இடத்தை காட்டியதும், அவர் தனது பேனாக்கத்தியை உருவி திறந்து, அந்த இடத்தை அறுத்து, இரத்தத்தை நன்றாய் வடியச் செய்தார். அவன் வலியினால் துடித்தான். சிலர் அவனைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டார்கள். இரத்தம் நன்றாய் வடிந்ததும் விஷம் இறங்கிற்று. வலி சற்று நீங்கி அவன் அமைதியானான். பின் ரேனியஸ் அக்காயத்தில் மருந்து வைத்துக் கட்டினார். சாமியாடிப் பெண்ணும் அழுகை நீங்கி மகிழ்ச்சி காட்டினாள்.

அதுவே இரட்சகரின் நற்செய்தியைக் கூறத் தகுந்த சமயம் என்றறிந்த ரேனியஸ், உடனே அவர்களுடன் பேசுபவராகி, சுவிசேஷ நற்செய்தியைச் சொல்லி, இரட்சிப்பின் வழியை அவர்களுக்கு விவரித்தார். கேட்டவர்களில் அநேகருக்குள் உணர்வுண்டாயிற்று. ஊர்த்தலைவரும், சாமியாடி பெண்ணும், அவள் மகனும், விக்கிரக கோயிலுக்குச் சொந்தக்காரரான வீட்டாரும், மேலும் சிலரும் அன்றே கிறிஸ்து நாதரை ஏற்றுக்கொண்டார்கள். (1826)

விக்கிரக வணக்கத்திற்குரிய கோவில் தேவாலயமாக்கப்பட்டது. ரேனியஸ் அச்சிறு சபையில் ஊழியஞ்செய்ய மிக்கேல், வேதநாயகம்

என்ற இரு ஊழியரை நியமித்தார். மறு ஆண்டில் தேவாலயமாக்கப்பட்ட கோயிலை இடித்துச் சற்று பெரிதாகக் கட்டியமைத்தார்கள். (1827) ஈராண்டுகளுக்குள், சபை பெருகி அவ்வாலயமும் பற்றாது போயிற்று. எனவே மூன்றாவது ஆலயத்தை அவ்விடத்திலேயே கட்டி, 1830 மார்ச் 7ம் தேதி ரேனியஸ் அதைப் பிரதிஷ்டை செய்தார். அன்றைய தினமே அவர், நெடுவிளை என்ற அவ்வூரின் பெயரை மாற்றி, அதற்கு மெய்ஞானபுரம் என்று பெயர் சூட்டினார்.

ரேனியஸ் ஐயர்

மக்களுக்கு ஆராதனைகள் நடத்திப் போதித்து, ஞானஸ்நானத்துக்கு ஆயத்தம் செய்வதற்காக மிக்கேல் என்ற பக்திமானான வாலிப உபதேசியாரொருவரை ரேனியஸ் ஐயர் நியமித்தார். திருநெல்வேலி நகரைச் சேர்ந்த இந்த மிக்கேல் உபதேசியார் வேளாள வகுப்பைச் சேர்ந்தவர். ரோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். ஹாப்வ் ஐயருடைய பள்ளிக்கூடத்தில் படித்து, அவரிடத்தில் உபதேசம் பெற்று கத்தோலிக்க மதத்தை துறந்து சுவிசேஷ சபையைச் சேர்ந்தார். ரேனியஸ் ஐயர் செமினரியை இரண்டாம் முறையாக 1822ல் துவக்கினபோது அதில் பயின்று உபதேசியாராகி, மெய்ஞானபுரத்தில் பணிவிடை செய்து, அச்சபை ஆசீர்வதிக்கப்பட்ட சபையாகவும், ஆசீர்வாதமான சபையாகவும் விளங்கப் பாடுபட்டார்.

சவரியாயி என்ற மாதை 1828, 1829 களில் மணந்து இருவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் மெய்ஞானபுரத்தில் ஊழியம் செய்தனர். மிக்கேல் உபதேசியார் 67 வயதுண்டயவராகி 1867ல் மரிக்கும் வரை மெய்ஞானபுரம் தாமஸ் ஐயரின் உத்தம நண்பனாகவும், உத்தம உதவியாளனாகவும் பணிவிடையை நிறைவேற்றினார். கர்த்தர் அவருடைய ஊழியத்தை வெகுவாய் ஆசீர்வதித்தார். இத்தகைய உத்தம உபதேசியாரின் ஊழியம் மெய்ஞானபுரம் சபைக்கு முதல் நாற்பது ஆண்டுகளாக கிடைத்தது கர்த்தரின் கிருபையுள்ள ஈவுகளிலொன்று.

மிக்கேல் உபதேசியார் ரேனியஸ் ஐயருடைய அனுமதியுடன் முதல் முதல் செய்த வேலை அன்று கொடை நடத்தப்பட்ட அவ்விக்கிரஹ கோவிலையே கிறிஸ்தவ ஜெப வீடாக மாற்றி அதிலேயே ஆராதனைகள் நடத்த ஆரம்பித்ததாகும். ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாகிறவர்கள் கற்க வேண்டிய கிறிஸ்து மார்க்க சத்தியங்களையும், பத்துக் கற்பனை, விசுவாசப்பிரமாணம், கர்த்தருடைய ஜெபம்,



ரேனியஸ் ஐயரவர்கள்




ஜாண்தாமஸ் ஐயரவர்களின் கொள்ளு பேரன்
பில்ஹெம்




மகமைக் கிணற்றில்
செல்லம்மாள் ஜேம்ஸ்
பாக்கியம் அம்மாள்
உவால்ஷ்
பங்களாவிற்காக
தண்ணீர்
இறைக்கும் காட்சி



பதுங்குக் குழியில்
அடித்த பாம்புகளுடன்
கந்தக் கோனார்



மிஷனெரி பங்களாவும் பின்னணியில் ஆலயமும்



முதலாவதாக கட்டப்பட தீர்மானிக்கப்பட்ட
ஆலயத்தின் மாதிரி



மேரிதாமஸ் திருமறை அரங்கம்



பெண்கள் பள்ளி வளாகத்தினுள்

இலந்தை மரம்

ரட்சகரின் வாழ்க்கை வரலாறு முதலியவற்றையும் ஆலயத்திலும், வீடுகளிலும் அம்மக்கள் வேலை செய்யும் இடங்களிலும் வைத்து போதித்து வந்தார்.

1826 ஆம் ஆண்டு நெடுவிளையிலும், சோலைகுடியிருப்பிலும் சுமார் 25 பேர் ஞானஸ்நானத்துக்கு தயாரானார்கள். ரேனியஸ் 7.4.1826 ஆம் ஆண்டு நெடுவிளைக்குச் சென்று ஒரு ஞானஸ்நான ஆராதனை நடத்தி கீழ்க்கண்டவர்களை திருச்சபையில் சேர்த்தார்.

1. பேதுரு வேதமுத்து	– பழைய பெயர் வேலுமூர்த்தி		45
மனைவி	: அன்னம்மை	– கருத்தக்கண்ணு	35
மகன்	: ஞானப்பூ	– மாசானம்	12
மகன்	: பாக்கியநாதன்	– ஐரவன்	10
மகள்	: பரிபூரணம்		8
	பாக்கியம்		6
	விசுவாசி		3
2. மத்தேயு ஞானக்கண்	– சுப்பிரமணியன்		50
மகன்	: தாமஸ்	– பெருமாள்	14
மகன்	: ஞானமுத்து		12
மகள்	: அன்னம்மை		4
மகன்	: ஏசுவடியான்		2
3. ஜாண் அமிர்தநாயகம்	– நீலன்		60
4. கித்தேரியாள்	– புலமாடி		45
5. பிரகாசி	– பிராட்டி		35
மகன்	: ராயப்பன்		12
மகள்	: மரியாள்		8
6. வேதநாயகம்	– போத்தி		14
7. பிலிப்பு அமிர்தநாயகம்	– அனந்தப்பன்		25

நெடுவிளைச் சபையில் ஆதி கிறிஸ்தவர்கள் வேலு மூர்த்தி நாடார் என்ற பேதுரு வேதமுத்து, சுப்பிரமணிய நாடார் என்ற மத்தேயு ஞானக்கண், நீலன் என்ற ஜாண் அமிர்தநாயகம், புலமாடி என்ற கித்தேரியாள், பிராட்டி என்ற பிரகாசி, போத்தி நாடார் என்ற வேதநாயகம், அனந்தப்பன் நாடார் என்ற பிரகாசி, போத்தி நாடார் என்ற வேதநாயகம், அனந்தப்பன் நாடார் என்ற பிலிப்பு அமிர்த நாயகம்,

பாக்கியநாதன் (சபைத்தலைவர்) வேதநூடி, ஈசாக்கு, ஏசுவடியான் முதலியவர்களும் அவர்கள் குடும்பங்களுமே.

1831 ம் ஆண்டு ரேனியஸ் ஐயர் திருநெல்வேலி சபைகளை 9 சேகரங்களாக (02.02.1831) பிரித்தார். ஒன்பதாவது சேகரமாக மெய்ஞானபுரத்தை தலைமை பீடமாகவும் மிக்கேல் உபதேசியாரைத் தலைமை உபதேசியாராகவும் நியமித்தார். மக்கள் அனைவரும் ஆராதனைகளுக்கு ஒழுங்காக போவதுண்டு. நூற்றைம்பது பேர் மட்டும் ஆராதிக்க கூடிய ஆலயத்தில் இடமில்லாமல் அநேகர் வெளியில் நிற்க வேண்டியதாயிருந்தது.

முதல் நற்கருணை

1837 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் (23.03.1837) வெரிய வியாழக்கிழமை அன்று பெற்றிற் ஐயரவர்கள் கண்காணிப்பில் மெய்ஞானபுரம் இருந்ததால் இங்கு வந்து நற்கருணை ஆயத்த ஆராதனை அங்கேயே இருந்து ஆராதனைகள் நடத்தி பரிசுத்த நற்கருணை பரிமாறினார். அன்று (24.03.1837) 11.30 மணிக்கு நடத்திய அந்த திருவிருந்து ஆராதனையே மெய்ஞானபுரத்தில் நடத்தப்பட்ட முதல் நற்கருணை ஆராதனையாகும். அதில் யோவான் 19 : 30 வசனத்தின் மீது பிரசங்கம் செய்தார். ஜனங்கள் வெகு கவனமாகக் கேட்டார்கள். பிரசங்கத்துக்குப் பின் நற்கருணைகாரரை தவிர மற்றவரனைவரும் வெளியேறினர். இன்றும் மெய்ஞானபுரத்தில் அந்நடைமுறையே பின்பற்றப்படுகிறது.

கனம் ஜாண்தாமஸ் ஐயரவர்கள் திருமணம்

1838 ம் ஆண்டு அக்டோபர் 4ம் நாள் 04.10.1838 அன்று வேப்பேரி ஆலயத்தில் ஜாண்தாமஸ் மேரி டேவிஸை திருமணம் செய்தார். சென்னை செயற்குழு காரியதரிசி ஜாண்டக்கர் ஐயர் அத்திருமண ஆராதனையை நடத்தினார். மெய்ஞானபுரத்தில் வசித்து, அச்சேகரத்தை கண்காணிக்க வேண்டுமென்று கேட்ட பொழுது, ஜாண்தாமஸ் மகிழ்வுடன் அதை ஒப்புக் கொண்டார். 1838ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று சேகர சபைகளின் மக்கள் அனைவரும் மெய்ஞானபுரத்தில் பண்டிகை கொண்டாட வந்தார்கள். ஜாண்தாமஸ் பாளையங்கோட்டையிலிருந்து வந்து ஆராதனை நடத்தி, நற்கருணை பரிமாறி 29 பேருக்கு பரிசுத்த ஞானஸ்நானம் கொடுத்தார்.

1839 ஆம் ஆண்டு மெய்ஞானபுரம் மிஷனெரி பங்களாவை கட்டி முடித்து தாமஸும் அம்மாளும் அதில் குடியேறினர். அது பெரியதாய் காணப்பட்டது. கூரை மட்டும் ஓலையாலானது. ஜூலை மாதம் ஜாண்தாமஸும் அம்மாளும் குற்றாலத்துக்கு போனார்கள். ஆகஸ்ட் 5ம் தேதி மேரி தாமஸ் அம்மாள் சுகப்பிரசவமாகித் தன் முதற் பேரான மகனைப் பெற்றார். அப்புத்திரனுக்கு ஜாண்டேவிஸ் என்று பெயரிட்டனர். ஜாண்டேவிஸ் தாமஸே அந்நாளிலே மெய்ஞானபுரத்தின் இரண்டாவது மிஷனெரியானார். (1864–1873)

பெண்கள் போர்டிங் பள்ளி

1841ம் ஆண்டு டிசம்பர் மாத துவக்கத்தில் மேரிதாமஸ் அம்மாள் ஒரு பெண்கள் போர்டிங் பள்ளியை நிறுவினார். பள்ளிக்கட்டிடம் இல்லாததால் பங்களாவை மாணவிகள் தங்கும் அறையாகவும் வகுப்பு அறையாகவும் பயன்படுத்தினர். முதலாவது 4 பேர் சேர்க்கப்பட்டனர். பின் சாத்தான்குளத்திலிருந்து சேர்ந்த 4 பெண்களையும் சேர்த்து 8 பெண்களுடன் அதை நடத்தினர்.

ஆலயக்கட்டுமான நிதி

ஜாண்தாமஸ் 1842 ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளில் சேகர ஊழியர்கள் அனைவரும் மெய்ஞானபுரத்துக்கு வந்திருந்த சமயத்தில், மெய்ஞானபுரம் சேகர ஆலயக்கட்டுமான நிதியை நிறுவினார். அதோடு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளில் ஒன்று குடும்பத் தலைவர்கள் மட்டுமல்ல. குடும்பங்களிலுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும் சிறுவரும் வருடத்தில் ஒரு நாளைய வருமானத்தை வருடந்தோறும் இந்நிதிக்கு கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தார். ஜாண்தாமஸ் ஐயர் 1835ம் ஆண்டு உண்டான ரேனியல் பிளவு 1842 ல் முடிந்ததையொட்டியும் அச்சம்பவத்தை ஞாபகப்படுத்தும் சின்னமாக மெய்ஞானபுரத்தில் கட்டவிருந்த மாபெரும் தேவாலயத்துக்கு C.M.S. ஐக்கிய ஞாபகார்த்த ஆலயம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

1842ம் ஆண்டு ஜுன் மாதம் 9ம் தேதி (09.06.1842) மேரி தாமஸ் அம்மாளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு மேரிஜேன் என்று பெயரிட்டனர். மேரிஜேன் பிற்காலத்தில் ஆஸ்றன் டிப் (Aston Dib) ஐயரை மணந்து, சிலகாலம் மெய்ஞானபுரத்தில் அவருடன் மிஷனெரியாக பணியாற்றினார். (1861 – 1864)


1843ம் ஆண்டு மெய்ஞானபுரம் வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டு. இந்தியாவுக்கு மேற்றிராணியாராகிய (METROPOLITAN BISHOP) தானியேல் வில்சன் அத்தியட்சர் மெய்ஞானபுரத்துக்கு வருகை தந்ததுவாகும். அதுவே மெய்ஞானபுரம் பெற்ற முதல் மேற்றிராணி விஜயம்.

1843 ஜனவரி 29ம் தேதி (29.01.1843) வில்சன் அத்தியட்சரும் அவருடைய சேப்ளின் J.H. ப்ராட் ஐயரும் (Rev.J.H. PRATT) மருத்துவரொருவரும் மிகுந்த கஷ்டமான பிரயாண அனுபவங்களுடன் பாளையங்கோட்டை வந்தனர். பெப்ரவரி 2ம் நாள் (02.02.1843) பிற்பகலில் அத்தியட்சரும் சகாக்களும் மெய்ஞானபுரத்துக்கு வந்தனர். ஜாண்தாமஸ் ஐயரும், அம்மாளும் அவர்களை அக மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தனர். சபை ஊழியர் சபைமக்கள், ஆசிரியர் சந்தித்த பின்பு தாமஸ் ஐயரின் பங்களாவின் முன் கூடினர். அத்தியட்சர் அத்திரள் கூட்டத்தை கண்டதும் கரையற்ற மகிழ்ச்சி கொண்டனர். அவர்கள் பணமுடிச்சு கொடுத்து மெய்ஞானபுரத்தில் கட்டப்படவிருக்கும் தேவாலய கட்டுமானத்திற்கென என்று கூறினார். அவர்கள் கொடுத்த நன்கொடையே ஆலய கட்டுமானத்திற்கான முதல் வரவாகும்.

மேலும் ஜாண்தாமஸ் ஐயரவர்களுக்கு இந்நன்கொடை ஒரு தூண்டு கோலாக மாறி இங்கிலாந்தில் கென்ற் (KENT) என்ற மாகாணத்தில் உள்ள குட்னெஸ்டோன் (GOODNESTONE) என்னும் ஊரிலுள்ள தேவாலயத்தை மெய்ஞானபுர ஆலயத்துக்கு மாதிரியாக (MODEL) கொண்டார். லண்டனின் ஒரு கட்டிட கலைஞர் அந்த மாதிரியின்படி வரைபடம் வரைந்து கொடுத்தார். சென்னைக் கமிற்றியின் செயலரான ஜாண்டக்கர் (Rev. JOHN TUCKER) இங்கிலாந்திலுள்ள அநேக நண்பர்களுக்கு எழுதி ஆலய கட்டுமானத்துக்குப் பணஉதவி செய்ய ஏவினார். மெய்ஞானபுர சபைமக்களும் பொருளுதவி செய்யத்தொடங்கினர்.

ஆலய அஸ்திபாரம்

சென்னையிலிருந்து 1844 ஜுன் மாதம் Rev. ஜாண்டக்கர் திருநெல்வேலி வந்தார். அவருடைய வருகையைப் பயன்படுத்தி மெய்ஞானபுரம் ஆலயத்துக்கு அஸ்திபாரம் அமைக்க ஜாண்தாமஸ் ஐயர் தீர்மானித்தார். 1844 ஜுன் மாதம் 20ம் தேதி (20.06.1844) அஸ்திபாரமிடும் நாளாக குறிக்கப்பட்டது. முந்திய தினமே மிஷனெரிமாரனைவரும் மெய்ஞானபுரத்தை அடைந்தனர். S.P.G.



பனையேறும் தொழிலாளி



ஜாண்தாமஸ் கல்வி கற்ற, பல மிஷனெரிகளை உருவாக்கிய
இஸ்லிங்டன் கல்லூரி



அம்புரோஸ் மேனிலைப்பள்ளி நுழைவுவாயில்



உவால்ஷ் அம்மையாரின் நினைவு கட்டிடம்



மிஷன் ஆஸ்பத்திரி கட்டிடம்

மிஷனெரிமாரில் நாசரேத் கேமரர் முதலூர் ஹேய்ன் இடையன்குடி கால்ட்வெல் ஐயர்மாரும் வந்து சேர்ந்தனர். மெய்ஞானபுரம் விழாக்கோலம் பூண்டது. பத்து மிஷனெரிமார், ஏராளமான உபதேசியார் பள்ளிக்கூட ஆசிரியர், பிரசங்கிமார், மிஷனெரி அம்மையார் உபதேசிமாரின் மனைவியர், ஆசிரியைகள், சபைமக்கள் பள்ளிக்கூட மாணவ, மாணவியர் ஆக இரண்டாயிரத்துக்கு அதிகமானவர்கள் அன்று மாலை அஸ்திபாரம் அமைக்கும் இடத்தில் கூடினர். மிஷனெரிகள் சூழ்ந்து நிற்க, கீதம் ஒன்று பாடின பின், டக்கர் ஐயர் உருக்கமாக ஜெபித்து, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் மெய்ஞானபுரம் பரிசுத்த தேவாலயத்தின் அஸ்திபாரகல் வைத்து ஆசீர்வதித்தார். பின்பு அவர் அங்கு கூடி நின்ற திரள் கூட்டத்தினரான சபையாருக்கு எழுப்புதலும் உற்சாகமுமான ஒரு பிரசங்கமும் செய்தார். ஆங்கிலத்தில் அவர் ஆற்றிய அவ்வருளுரையை இடையன்குடி கால்ட்வெல் (CALDWELL) ஐயர் மொழிபெயர்த்துச் சொன்னார். மறுபடியும் ஒரு ஸ்தோத்திர கீதம் பாடியபின் டக்கர் ஐயர் ஆசீர்வாதம் கூறினார்.

மிஷனெரிமாரும் ஊழியரும் அங்கிருந்து பவனியாக நடந்து, சற்று அப்பாலிருந்த ஒரு இலந்தை மரத்தடியில் கூடினர். இன்றும் இவ்வரலாற்று விருட்சம் எலியற் டக்ஸ்போர்டு பெண்கள் பள்ளியில் உள்ளது. அங்கு கூடிய மிஷனெரிமார் சூழ்ந்து நிற்க, டக்கர் ஐயர் பெண்கள் போர்டிங் பள்ளிக்கூடத்தின் பிரதான கட்டிடத்துக்கு அஸ்திபாரமிட்டு, அப்பள்ளிக்கு மேரி எலியற் டக்ஸ்போர்ட் (MARY ELIOTT TUXBORD) பெண்கள் பள்ளிக்கூடம் என்று பெயர்சூட்டி ஜெபித்து ஆசீர்வதித்தார். பின் மிஷனெரிமாரும் அவர்கள் மனைவியரும் பங்களாவில் விருந்துண்டனர். ஆலய அஸ்திபார வைபவத்துக்கு வந்திருந்த திரளான சபை மக்களுக்குத் திறந்த சமவெளியில் அசன விருந்து பரிமாறப்பட்டது. அன்று விருந்துண்டு களித்த ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமியர் இரண்டாயிரம் பேராயிருந்தார்கள்.

மேரிதாமஸ் அம்மாளின் வாஞ்சையும் அன்றே நிறைவேறியது. தனது பெண்கள் போர்டிங் பள்ளிக்கு ஒரு உறுதியான கட்டிடம் தேவை என்றுணர்ந்த தாமஸ் ஐயரும் அதுபற்றி இங்கிலாந்தில் பல நண்பர்களுக்கு எழுதினர். சிலர் சிறிய தொகைகளை அனுப்பினர். ஆனால் டக்ஸ்போர்ட் (TUXFORD) என்ற ஒரு கிராமச் சபையாரும் அவர்களுடைய குரு E.B. எலியற் (Rev.E.B. ELIOTT) ஐயரும் அனுப்பிய தொகை அவை அனைத்தையும் விட அதிகம். எனவே ஐயரும்,

அம்மாளும் போர்டிங் பள்ளிக்கூடத்துக்காக கட்டிடத்தைக் கட்டி அப்பள்ளிக்கு மேரி எலியற் டக்ஸ்போர்ட் பள்ளி (MARY ELIOTT TUXBORD School) என்று பெயர் வைக்கத் தீர்மானித்தனர். கடவுளின் பெரிதான கிருபையால் அன்றே நடந்தது.

1843ம் ஆண்டு ஜேம்ஸ் ஸ்ப்ராட் ஜாண்தாமஸ் ஐயருக்கு உதவியாக மெய்ஞானபுரத்தில் பணிபுரிய நியமிக்கப்பட்டார். இருவரும் உடன்பிறந்த சகோதரர் போன்று மிஷனெரி ஊழியத்தை நடத்தி வந்தனர்.

1845ம் ஆண்டு ஜேம்ஸ் ஸ்ப்ராட் (SPRATT) சென்னை அத்தியட்சரிடத்தில் உதவி குருபட்டம் பெற்றார். 1846ல் அவர் ஸோபியாவை (SOPHIA) மணந்தார். அதுமுதல் திருமதி. ஸ்ப்ராட்டும் ஒரு மிஷனெரியாக C.M.S. ஆல் ஏற்கப்பட்டு மேரிதாமஸ்க்கு உதவியாக எலியற் டக்ஸ்போர்ட் பள்ளியிலே உதவி மிஷனெரியாக பணியாற்றினார். அக்காலத்தில் எப்பொழுதெப்பொழுது சென்னை கண்காணிப்பாளர் திருநெல்வேலிக்கு வரக்கூடியதாயிருந்ததோ அச்சமயங்களில் தான் திடப்படுத்தல் ஆராதனைகள் நடத்தப்பட்டன. ஆகையினால் ஒருவரை நற்கருணைக்காரராகச் சேர்த்துக்கொள்வதும், கொள்ளாததும் மிஷனெரியின் இஷ்டத்தை பொருத்ததாகவே இருந்தது.

நற்கருணை கண்டிப்பு

நற்கருணை விஷயத்தில் ஜாண்தாமஸ் மிகவும் கண்டிப்புடன் காணப்பட்டார். ஒருவர் கிறிஸ்தவராகி, ஞானஸ்நான ஆயத்தக்காரராக ஏற்கப்பட்டு எத்தனை ஆண்டுகளாகி விட்டாலும் சரி, அவரிடத்தில் குற்றமில்லாத நடத்தை, கிறிஸ்து மார்க்க சத்தியங்களைப் பற்றிய தெளிந்த அறிவு, கர்த்தருடைய ஜெபம், பத்து கற்பனைகள், அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம் இவைகளை மனப்பாடமாக தெரிந்திருத்தல் ஆராதனைக்கு ஒழுங்காகப் போவது ஆகிய இவை ஐந்திலும் பூரண திருப்தி மிஷனெரிக்கு ஏற்படாவிட்டால் அவர் திடப்படுத்தல் பெற முடியாது. அச்சாக்ரமந்தை பெற்றபின் திருப்திகுன்றின் அவர் கடிந்து கொள்ளுதலுக்கும் எச்சரிப்புக்கும் ஆளாவார். பின்னும் நிலைமை சீரடையாதிருப்பின் அவர் சபை நீக்கமாவார். 1840 முதலே தாமஸ் இத்துனைக் கண்டிப்புடன் மெய்ஞானபுரம் சேகரத்தை வளர்த்தார்.

ஆண்கள் பள்ளி

மெய்ஞானபுரத்தில் ஆண்களுக்கென்று ஒரு போர்டிங் பள்ளிக்கூடத்தை நிறுவுவது மிகவும் தேவையான காரியம் என்று தாமஸ் எண்ணினார். ஆண்கள் போர்டிங் பள்ளியில் சேர்த்து நன்கு கற்பித்து கிராமச் சூழ்நிலையில் கிராமக் கிறிஸ்தவ ஊழியத்திற்கேற்ற பயிற்சி கொடுப்பது, மிஷனெரி ஊழியத்தில் அதிக பயன்தரும் முறையாகும் என்று தீர்க்கமாயுணர்ந்த ஜாண்தாமஸ் 1844ல் மெய்ஞானபுரம் ஆண்கள் போர்டிங் பள்ளி ஒன்றை நிறுவினார்.

குழந்தையின் மரணம்

1845ம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் பெற்றிட் குடும்பத்தாரும், தாமஸ் குடும்பத்தாரும் சில வாரங்கள் குற்றாலத்தில் தங்கியிருந்தனர். இரு குடும்பங்களும் ஒரே பங்களாவில் சீசன் அனுபவித்துக் குதூகலமாயிருந்து வந்தனர். தாமஸ் குடும்பத்தில் மூன்று குழந்தைகளும் பெற்றிட் குடும்பத்தில் மூன்று குழந்தைகளும் இருந்தன.

ஜூலை மாதத்தில் ஒரு நாள் காலையில் எல்லோரும் அருவியில் குளித்துவிட்டு பங்களாவுக்கு திரும்பிச் சென்று காலையாகாரமருந்தி மகிழ்ச்சியாய் இருந்த வேளை, பெரியவர்கள் மத்தியில் நின்று தன் புன்சிரிப்பினாலும், மழலைப் பேச்சினாலும் எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்த இரண்டு வயது நிரம்பிய சிறுபாலகன், தாமஸ் தம்பதியரின் இரண்டாவது மகன் திடீரென்று உற்சாகமிழந்தான். சிரிப்பு மறைந்தது. மழலைப் பேச்சு மறைந்தது. முகமலர்ச்சி மறைந்தது. இரவுக்குள் மகன் மறைந்து விட்டான். இருள் சூழ்ந்தது. அக்குழந்தையின் சடலம் குற்றாலத்துக்கு வெளியே தென்காசி போகும் பாதையின் ஓரமாய் நிலம் வாங்கி கட்டுவித்திருந்த அழகிய தேவாலயத்தின் அருகில் சேமிக்கப்பட்டது.

மெய்ஞானபுரம் சீரமைப்பு

1845ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் தேதி மாலை 6 மணிக்கு திடீரென்று வானம் இருண்டது. ஒரு குளிர்ந்த காற்று வீசிற்று. அது சிறிது நேரத்தில் வலுத்த ஒரு பயங்கரப் புயலாகச் சீறியது. அது வேகத்துக்கு முன் மனிதர் ஒருவரும் ஈடு கொடுக்க முடியவில்லை. நூற்றுக்கணக்கான பனைகள், தென்னைகள் மற்றும் மரங்களும் வேரோடு சரிந்து விழுந்தன. வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. சுவர்களும் சரிந்தன. சுவர்கள் இல்லாமல் பனையோலைகளால் மறைவு கொண்டிருந்த வீடுகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. அப்புயலின் கோஷ்டம் நீடித்தது. இடி

மின்னலொன்றுமில்லாமல் மழை சோனா மாரியாக ஊற்றத் தொடங்கியது. காற்றும் அமர்ந்தது. அப்பப்பா என்ன அழிமாட்டம்! தெருக்களைக் காணோம். பாதைகளைக் காணோம். தோட்டங்கள், நெல் வயல்கள், மாந்தோப்புகள் சகலமும் அழிந்தன. மெய்ஞானபுர மக்கள் அடைந்த துன்ப துயரங்கள் ஏராளம். மிஷனெரிமார் அவர்களுக்குச் சமயத்துக்கேற்ற தற்காலிக ஒத்தாசைகள் பல செய்தனர். மெய்ஞானபுரத்தைப் போன்று மற்ற மிஷன் கிராமங்களும் அழிந்தன.

ஜாண்தாமஸ் ஐயர் மெய்ஞானபுரத்தை சீரமைக்கத் தீர்மானித்தார். அப்படியே சீரமைக்கவும் செய்தார். 1846ம் ஆண்டில் அதில் வெற்றியும் பெற்றார். ஒழுங்கும் அழகும் ஒருங்கே அமையப் பெற்று, சீரான அகன்ற நேர் நேர்த் தெருக்களையும் இணைப்புச் சந்துக்களையும், ஓரத்தில் நிழல் தரும் மரங்கள், தென்னை மரங்கள் ஆகியவை ஜாண்தாமஸ் ஐயர் திட்டமிட்ட கிராமச் சீரமைப்பு முயற்சியே இன்றைய மெய்ஞானபுரம்.

1846 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஜாண்தாமஸ் ஐயர் இலங்கைக்குச் சென்று இரண்டு மாதத்துக்குப் பின் திரும்பி வந்தார். திரும்பி வந்து சில நாட்களுக்குள் ஒரு கொடிய நோய்வாய்ப்பட்டு உயிருக்கே ஆபத்து என்ற நிலைக்குள்ளானார். மெய்ஞானபுரம் சபையாரும், சேகரச் சபை மக்களும் வெகு ஊக்கமாக தங்கள் மிஷனெரிக்காக ஜெபித்தனர். கர்த்தர் இறங்கி சுகம் கொடுத்தார். தாமஸ் மேலும் இரண்டொரு மாதங்கள் ஓய்வெடுத்தார். அந்நாட்களில் ஜேம்ஸ் ஸ்ப்ராட் ஐயர் மிஷன் வேலையை வெகுதிறமையாக நடத்தி, சபை கண்காணிப்பு செய்தார்.

ஆலய பிரதிஷ்டை

1847 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மெய்ஞானபுரம் பரிசுத்த தேவாலயம் கட்டி முடிவு பெற்றது. நிரந்தரமான முகடு, இன்னும் அமைக்கப்படவில்லை. கிராதி அறையும், பக்கவாட்டிலுள்ள அறைகளும் அவ்வாறே தற்காலிகமானவைகள். ஆலயத்தினுள் தளம் இன்னமும் உறுதியான கற்களால் பாவப்படவில்லை. ஆயினும் தான் சில மாதங்களுக்குள் சொந்த நாடு சென்று திரும்புவது நல்லது என்று ஜாண்தாமஸ் தீர்மானித்து விட்டபடியால், டிசம்பர் மாதத்தில் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்துவிட தீர்மானித்தார். அம்மாதம் 9ம் நாளை (09.12.1847) அந்நாளாக குறித்தார். மக்கள் ஆர்வத்துடன் அந்நாள் எதிர்பார்த்து இருந்தனர். அந்த நாளும் வந்தது. பிரதிஷ்டை வேலையும் நெருங்கியது.

இரண்டாயிரம் கிறிஸ்தவ மக்கள் அலங்கரிக்கப்பட்ட அப்பரிசுத்த ஸ்தலத்தில் கூடினர். குருவறை, முன்மண்டபம், கோபுரத்தின் முதல் அறை இவையனைத்திலும் கூட மக்கள் குழுமியிருந்தனர்.

சுவிசேஷபுரம் மிஷனெரி எட்வர்ட் சார்ஜென்ற் ஐயர் கடாட்சபுரம் ஜான் தேவசகாயம் ஐயர் டோனாவூர் எட்வர்ட்வென்ற் ஐயர் நாசரேத் ப்வரேதெரிக் கேமரர் ஐயர், கிறிஸ்தியான் நகரம் ஜேம்ஸ் வெஸ்ற் ஐயர், சாத்தான்குளம் ஸ்தேவான் ஹாப்ஸ் ஐயர் மெய்ஞானபுரம் உதவி மிஷனெரி ஜேம்ஸ் ஸ்ப்ராட் ஐயர் முதலிய மிஷனெரி குருமாருடன் ஜாண்தாமஸ் திரியேக தேவனின் திருநாமத்தில் ஆலயத்தை பிரதிஷ்டை செய்து, பரிசுத்த நற்கருணை ஆராதனையை நடத்தினர். 408 பேர் திருவிருந்து பெற்றனர். அவர்களில் மெய்ஞானபுரத்தை சேர்ந்த சுமார் 85 பேர் திருவிருந்து பெற்றனர். மீத அனைவரும் சேகர கிராமச் சபைகளைச் சேர்ந்தவர்கள். பிரதிஷ்டை ஆராதனை முடிந்த பின் வந்திருந்தவர்கள் அனைவருக்கும் அசன விருந்து பரிமாறப்பட்டது.

அஸ்திபாரத்தின் அடிமட்டத்திலிருந்து பணி தீர்க்கப்பட்ட கற்களால் சுவர்களும் தாங்குச் சுவர்களும் எழுப்பப்பட்டன. அவைகள் கீழிருந்தே மிகவும் உறுதி பொருந்தியவைகளாக அமைந்துள்ளன. மேற்கு புறத்தில் பெரிய வாசல். அது நாய்ப்பல் சித்திர வேலைப்பாடுகளுடன் சுடி (Dog Tooth Ornamentation) அழகு பெற்றது. தூண்களும் சுவற்றின் தலைப்பு அலங்காரங்களும், பணி செய்யப்பட்ட கல்லால் ஆனவை. சுவர்களின் அடிகற்கள் ஒவ்வொன்றும் ஒரு அடி நீளம், ஒரு அடி அகலம், ஒரு அடி கனம் பரிமாணமுடையவை. கோபுரத்தின் அடிச் சுவர்க்கற்கள் ஒவ்வொன்றும் ஒன்றேகால் அடி நீளம், ஒரு அடி அகலம், ஒரு அடி கனம் கொண்டவை. பாராங்கற்களை பூமிக்குள்ளிருந்து தோண்டி, சதுரமாக வெட்டி சுவரில் வைத்து கட்டும் வரை ஒவ்வொரு கல்லுக்கும் ஆன செலவு அணா நான்கு மட்டுமே. அதாவது (25 பைசா) சுவர்கள் மேலே உயர உயர கற்களின் பரிமாணம் 12 அங்குலம் x 8 அங்குலம் x 8 அங்குலம் ஆக இருந்த அளவு 10 அங்குலம் x 6 அங்குலம் x 6 அங்குலமாகக் குறைந்தது. தளம் மட்டும் வர கட்டுவதற்கான செலவு ரூ. 450/– மட்டுமே.

ஆலய உட்புற அளவு

ஆலயத்தின் உட்புறம் ஆல்டர் (Alter) நீங்கலாக நீளம் 91 அடி அகலம் 58 1/2 அடி. வடபுற, தென்புற அங்கி அறைகளின் நீளம் 15 அடி,

அகலம் 15 அடி. முன் மண்டபத்தின் நீளம் 14 அடி, அகலம் 14 அடி. ஆல்டரின் நீளம் மகா பரிசுத்த ஸ்தலம் நீளம் 10 அடி 2 அங்குலம் அகலம் 20 அடி. பரிசுத்த ஸ்தலம் 12 1/2 அடி நீளம். அகலம் 20 அடி. மேற்கூரையின் உயரம் கிட்டதட்ட 60 அடி ஆகும்.

நமது ஆலயத்தின் உட்புறத்தில் மிகச் சிறப்பான அமைப்பை பெற்றிருப்பது எட்டுத் தூண்கள் ஒன்றாக இணைத்து, அதன் மீது அமைக்கப்பட்டிருக்கும் அழகு வாய்ந்த வளைவுகள் (ARCH) ஆகும். இவ்வளவு சிறப்பான அமைப்புகள் வேறெங்கும் நாம் காணமுடியாது. தூண்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக செதுக்கப்பட்டு கீழே உள்ள பெரிய எட்டு வளைவுக்கல்லில் முளைக்கல் அடிக்கப்பட்டு, அதில் சொறுகப்பட்டவை. 8 கற்தூண்களும் இரும்பு பட்டைகள் மூலம் வெளியே தெரியாதவாறு பொருத்தப்பட்டுள்ளன.

பிரதிஷ்டை தினம் வரை ஆலய கட்டுமானத்தில் செலவிடப்பட்ட மொத்த தொகையில் தாமஸ் ஐயரின் சொந்தப் பணம் ரூ. 100/– மெய்ஞானபுரம் சபையாரும் சேகரக் கிராமச் சபையாரும் கொடுத்தது ரூ. 915/– நண்பர்கள் முதலியோர் தந்தது ரூ. 514/– மீதத் தொகையை ஜாண் டக்கர் ஐயர் இங்கிலாந்தில் இருந்து சேகரித்து அனுப்பினார். ஆலய கின்னரம் (ORGAN) நிதிக்காக ஜாண்தாமஸ் ஐயர் நண்பர்கள் இருவர் ரூ. 200/–ம் ரூ. 100/– கொடுத்தனர்.

தேவாலயத்தின் அமைப்பு காதிக் (GOTHIC) கட்டட கலையம்சம் உடையது. டெரிக் வரைந்த திட்டத்தின்படி (Plan) கட்டப்பட்டது. முதல் முதல் வரையப்பட்ட படம் ஆதிகால ஆங்கிலக் கோவிற் கட்டக்கலை பொருந்தியது. அதன்படி கோபுரம் நடுவிலிருந்திருக்கும் பின்னால் அதை மாற்றி இப்போது நாம் பார்க்கிற திட்டத்தில் ஆலயப்பிளான் வரையப்பட்டது.

கோபுரம் ஊசி முனையுடன் சேர்த்து 175 அடி உயரமிருக்கும் என்று தாமஸ் கணக்கிட்டிருந்தார். பிரதிஷ்டை நாளில் கோபுரம் தேவாலய முகட்டு முனைக்கு சற்று குறைவான உயரமே கட்டப்பட்டிருந்தது. ஆலய கட்டுமான வேலை நடந்துவரும் நாளிலேயே அது நாடெங்கும் பிரபலமாகிப் பற்பல மக்கள் பல திசைகளிலிருந்து வந்து அதை பார்த்து வியந்தனர். முதலாவது ஆலயத்துக்கு செயின்ட் டேவிஸ் (St.DAVIS) ஆலயம் என்று வேல்ஸ் நாட்டு செயின்ட் ஞாபகமாக தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அது செயின்ட் பால்ஸ் ஆலயமாக பெயர் சூட்டப்பட்டது. ஏனென்றால் முதலாவது மிஷனெரியின்



ராய்ட்ஸ் அம்மையார்




ராய்ட்ஸ் அம்மையார், உவால்ஷ்
கார் ஓட்டுநராக ஆசீர்வாதம் நாடார்

ஆல்ட்டரில் உள்ள
பித்தளைமிலான
நினைவு பலகை







பெயரால் அது மாற்றம் பெற்றது. அக்காலத்தில் மெய்ஞானபுரம் கிராமவாசிகள் 515 பேர் அவர்களில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 446 ஆயத்தக்காரர்களும், பச்சிளங்குழந்தைகளும் 69 பேர் நற்கருணைக்காரர் 89 பேர்.

விடுதிப் பள்ளி

பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு ஆண்களுக்கொன்று பெண்களுக்கொன்றுமாக இரண்டு கிராமப் பள்ளிகளிருந்தன. ஆண்கள் பள்ளியில் 35 சிறுவர்களும் பெண்கள் பள்ளியில் 30 பெண்களும் கல்வி கற்றனர். ஆண்களுக்கு ஒரு விடுதிப் பள்ளியும், பெண்களுக்கு எலியட் டக்ஸ்போர்டு பள்ளியுமாக இரண்டு விடுதிப் பள்ளிகள் இருந்தன. பெண்கள் பள்ளி தற்போது அமைந்துள்ள வளாகத்திலேயே ஆண்களுக்கான விடுதிப் பள்ளியும் பெண்களுக்கான விடுதிப் பள்ளியும் அமைந்திருந்ததாக வரலாற்றுச் சுவடுகள் உரைக்கின்றன. ஆண்கள் விடுதி ஸ்ப்ராட் ஐயரின் மேற்பார்வையிலும், பெண்கள் விடுதி பள்ளி தாமஸ், ஸ்ப்ராய்ட் அம்மையாராலும் நடத்தப்பட்டன. கஸ்பா பள்ளிக் கூடங்களில் படித்த சிறுவர், சிறுமியர் தினந்தோறும் காலையில் பங்களா வராந்தாவில் கூடி பெரியவகுப்பு பிள்ளைகள் வேதமொன்றை வாசிக்க மிஷனெரிமாரில் யாரேனும் அல்லது ஆசிரிய, ஆசிரியைகளில் எவரேனும் அதை விளக்கி உபதேசித்து ஜெபித்தபின் தங்கள் பள்ளிகளுக்குச் செல்வர்.

ஞாயிற்றுக் கிழமைகளில் பெரிய ஆலயத்தில் காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாக இரண்டு ஆராதனைகள் நடத்தப்பட்டன. காலை ஆராதனைக்கு பக்கத்து கிராமச் சபைகளிலிருந்தும் மக்கள் வருவதுண்டு. சுமார் 800 முதல் 1000 பேர் ஆராதிப்பர். மாலை ஆராதனையில் மெய்ஞானபுரம் சபையார் மட்டுமே கலந்து கொள்வர். அதன்பின் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் தான் பெரிய ஆலயத்தில் ஆராதனையிருக்கும்.

வாரந்தோறும் அத்தினத்தில் சேகர ஊழியர்கள் மிஷனெரியிடம் உத்தரவுகளும் பெறுவதற்கு வருவர். அவர்களுக்கென்று அன்று ஒரு ஆராதனையிருக்கும். சபையாரும் கலந்து கொள்வர். காலை ஆராதனை காலை 5 மணிக்கும் மாலை ஆராதனை மாலை 7 1/2 மணிக்கும் நடத்தப்பட்டன.

தாமஸ் ஐயர் மூன்று ஆண்டுகள் விடுமுறையில் குடும்பத்தோடு தன்

சுய நாட்டுக்குப் போனார். நேராகப் பெம்ப்ரோக்குக்குப் போய் தன் மனைவியின் சுற்றத்தாருடன் தங்கினார். இரண்டொரு நாட்களில் லிம்ப்விக்குச் சென்று தம் நண்பரான பயர்ஸ் ஐயரையும் குடும்பத்தினரையும் சந்தித்து மகிழ்ந்தார்.

ஜாண்தாமஸ் விடுமுறையிலிருந்த அந்த மூன்று ஆண்டுகளிலும் ஜேம்ஸ் ஸ்ப்ராட் மெய்ஞானபுரம் சேகர மிஷனெரியாகப் பணியாற்றினார். ஸ்ப்ராட் ஐயர் தன் கையில் ஒப்புவிக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடங்களைச் சிறப்புடன் நடத்திவந்தார்.

முதியோர் கல்வி முயற்சிகளில் அதிகக் கவனம் செலுத்தினார். சேகரக் கிறிஸ்தவர்களான 4490 பேர்களில், இந்துக்களாய் இருந்த காலத்திலேயே வாசிக்கத் தெரிந்திருந்தவர்கள் 131 பேர் மட்டுமேயென்றும் கிறிஸ்தவர்களானபின் வாசிக்கக் கற்றுக் கொண்ட ஆண்கள் 241, பெண்கள் 117, சிறுவர் 177, சிறுமிகள் 124, ஆக வாசிக்கத் தெரிந்தவர்கள் 790 பேர் என்றும் பெரிய சபைகளான மெய்ஞானபுரத்தில் இந்துக்களாயிருந்த காலத்திலேயே வாசிக்கத் தெரிந்தவர்கள் 10 பேர், கிறிஸ்தவர்களான பின் கற்றுக்கொண்டவர்கள் ஆண்கள் 39, பெண்கள் 17, சிறுவர் 28, சிறுமியர் 27, ஆக மொத்தம் 121, மெய்ஞானபுரம் சேகரத்தில் 1850 ஜுன் மாதம் 30ம் தேதி கணக்குப்படி சபைகள் 62, ஆலயங்களும் ஜெப வீடுகளும் 45, உபதேசிமார் 11, உதவி உபதேசிமார் என்ற வாசகர் 14, பள்ளிக்கூட ஆசிரியர் 36, ஆசிரியைகள் 10, ஞானஸ்நானம் பெற்ற ஆண்கள் 897, பெண்கள் 928, சிறுவர் சிறுமியர் 1299, ஆக ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் 3124. ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர்கள் 506 ஆண்கள், 495 பெண்கள், 650 சிறுவர் சிறுமியர், குழந்தைகள் ஆக 1651. மொத்தக் கிறிஸ்தவர்கள் 4775, நற்கருணைக்காரரான ஆண்கள் 179, பெண்கள் 265, மொத்தம் 444. பள்ளிக்கூடங்கள் 38. மாணவர்களில் கிறிஸ்தவர்கள் 450. கிறிஸ்தவரல்லாதவர் 239. மாணவிகளில் கிறிஸ்தவர்கள் 433. அல்லாதார் 13.

ஜாண்தாமஸ் ஐயருக்கு முதலாவது வரவேற்பு

மெய்ஞானபுரத்தில் உபதேசிமாரைப் பயிற்றுவிக்கும் நிறுவனம் ஒன்றை நிறுவ ஜாண்தாமஸ் ஆசித்தார். ஆனால் ஆலயக்கட்டுமானத்தில் அவர் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருந்ததால், அதைச் செய்யக் கூடாதவரானார். ஸ்ப்ராட் ஐயர் 1849 துவக்கத்தில் அந்நிறுவனத்தை ஏற்படுத்தி நடத்திவந்தார்.

சுமார் மூன்றாண்டுகளாகத் தன் சொந்த நாட்டில் விடுமுறையிலிருந்தே ஜாண்தாமஸ் 1850ம் ஆண்டினிறுதியில் புறப்பட்டு, 1851 ஜனவரி 15ம் நாள் மெய்ஞானபுரத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். சேகரச் சபையாரும் ஊழியரும் திரண்டு வந்து அவரை வாழ்த்தி வரவேற்றனர். ஆயிரம் பேர் பல்லக்குகளைச் சூழ்ந்து கொண்டு, ஆரவாரித்து, பங்களா வரை அவரை வாழ்த்தி வரவேற்றனர். பங்களா வரை அவரை அழைத்து வந்தனர். அம்மக்களது மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடியது. தாமஸ் குடும்பத்தினர் தங்கள் மக்கள் தங்களுக்குக் காட்டிய அன்பை அறிந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். பங்களாவை அடைந்ததும் ஐயரும் அம்மாளும் வராந்தாவில் நின்று, ஸ்தோத்திர ஜெபம் செய்து, கூடி நின்ற அத்திரள் கூட்டத்தாரான சபையாருக்குத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து, அவர்களை ஆசீர்வதித்து அனுப்பினர். அதன் பின் உபதேசிமாரும், பிற ஊழியர்களும், ஆண் பெண் போர்டிங் பள்ளி மாணவ, மாணவிகளும் வரவேற்புகள் கொடுத்தனர். அந்த நாள் மெய்ஞானபுரம் கண்ட ஓர் இன்ப நாள்.

1851 ஸ்ப்ராட் ஐயர் சுவிசேஷபுரத்துக்கு மாற்றப்பட்டார். மெய்ஞானபுரத்துக்கு பட்டம் பெறாத உதவி மிஷனெரியாக ஜாண் விட்சர்ச் (JOHN WITCHURCH) நியமனமானார். இவரும் ஸ்ப்ராட் ஐப் போன்றே ஒரு சிறந்த பக்தன். தாமஸ் ஐயர் விடுமுறையிலிருந்து திரும்பியபோது அவருடன் இந்தியாவுக்கு வந்தார். அவர் இவரை ஆண்கள் போர்டிங் பள்ளித் தலைமை ஆசிரியராக நியமித்தார்.

1851ல் மெய்ஞானபுரம் சேகரம் பிரகாசபுரம், மெய்ஞானபுரம் என இரண்டு பாஸ்ற்றரேட்களாகப் பிரிக்கப்பட்டது. பிரகாசபுரம் பாஸ்ற்றரேட் குருவாக சீனிவாசகம் மதுரநாயகம் ஐயர் நியமிக்கப்பட்டார். அவர் ஏற்கனவே மெய்ஞானபுரம் சேகரத்தில் உபதேசியாராயிருந்தார். பின்னாளில் அவரைக் குறித்து தாமஸ் ஐயர் எழுதிய வாசகம் இவ்வுத்தம குருவின் மேம்பாட்டை விளக்கும். அவர் ஒரு நல்ல பிரசங்கி. தெளிவான கருத்துக்களைப் பிரசங்கித்து வந்தார். தன் குருத்துவக் கடமைகளை ஆர்வத்தோடும் முழு பெலத்தோடும் நிறைவேற்றியர் என்பதே அவ்வாசகம்.

பிரசங்க பீடம் அன்பளிப்பு

பாளையங்கோட்டையில் குருப்பட்ட ஆராதனையை நடத்துமுன் டெல்டரி அத்தியட்சர் S.P.G., C.M.S. வட்டாரச் சபைகளைப் பார்க்கப் புறப்பட்டார். அவர் ஜனவரி 18ம் நாள் கடாட்சபுரத்துக்கு வந்ததும், தாமஸ்

அங்கு சென்று அன்று மாலை அவருடன் முதலூருக்குப் போனார். அங்கு அத்தியட்சர் ஒரு திடப்படுத்தல் ஆராதனை நடத்திய பின் மறுபடியும் கடாட்சபுரம் போனார். தாமஸ்ம் கூடச்சென்று அடுத்த நாள் காலை ஒய்வு நாளாராதனையில் மத் 13 : 16, 17 ஐ எடுத்துப் பிரசங்கித்தார். மறுநாளும் கடாட்சபுரத்திலிருந்து விட்டு, அன்றுமாலை அத்தியட்சருடன் கிறிஸ்தியாநகரம் போய், 21ம் தேதியாகிய செவ்வாய்க்கிழமை காலையில் அத்தியட்சரை அழைத்துக் கொண்டு மெய்ஞானபுரம் சேர்ந்தார். ஊருக்கு வெளியில் சபையார் அனைவரும் உபதேசிமாரும் அத்தியட்சரை வரவேற்றபின், அவரும் தாமஸ்ம் பங்களாவுக்கு வந்தனர்.

சிற்றுண்டிக்குப் பின் அத்தியட்சர் தேவாலயத்தைப் பார்க்கப் புறப்பட்டார். ஆலயத்தைப் பார்த்து, அதன் அழகை வியந்து ஸ்தம்பித்து நின்றார். பின், திரும்பி தாமஸைப் பார்த்து வெகுவாய்ப் பாராட்டினார். ஆலயத்தில் பிரசங்க பீடம் இல்லாததைக் கண்ட கண்காணியார் தன்னுடைய அன்பளிப்பாக ஒரு பீடத்தைக் கொடுப்பதாக வாக்களித்தார். சென்னைக்குத் திரும்பியதும் அவ்வாக்கை நிறைவேற்றினார்.

பதினொரு மணிக்குத் திடப்படுத்தல் ஆராதனையை முடித்துவிட்டு, அத்தியட்சர் மெய்ஞானபுரம் சபையாரை அவர்களுடைய வீடுகளில் சந்தித்து ஜெபித்து ஆசீர்வதித்தார். புதன்கிழமை அத்தியட்சரும் தாமஸ் ஐயரும் பிரகாசபுரத்துக்குப் போனார்கள்.

பிரகாசபுர விஜயம் முடித்தபின், அத்தியட்சர் நாசரேத்துக்குச் சென்றார். தாமஸ்ம் ஊர் திரும்பினார். திரும்புமுன் அவருடைய கடைசிக் குழந்தை அதிக சுகவீனமாகி மரணத்துக்குள்ளாகும் தறுவாயிலிருந்த செய்தி வந்தது. குழந்தையின் உயிரற்ற சரீரத்தைத்தான் காண நேருமோ என்று அஞ்சினார். வீடு சேர்ந்ததும், குழந்தை சுகம் பெறத் தொடங்கி விட்டாளென்ற செய்தி அவரது உள்ளத்தைத் தேவனுக்கேற்கும் துதிகளால் நிரப்பியது. 1851 ஜுலை மாதம் அவர் சுகக்கேடுற்று அதிக வியாதியாயிருந்தார். விஷக் காய்ச்சல் வந்து பிழைப்பது அரிது என்ற நிலைமைக்குள்ளானார். ஆனாலும் கர்த்தருடைய கிருபையினால் சுகம் பெற்றெழுந்தார்.


அக்டோபரில் அவருடைய குழந்தைகளிலொன்று வியாதிப்பட்டு, எவ்வித மருந்துகளுக்கும் கட்டுப்படாத அந்நோயினால் நம்பிக்கை இழக்கும் நிலைக்குள்ளாயிற்று. அக்காலத்திலிருந்தே மிஷனெரிமாரில் பண்ணைவிளை J.T. டக்கர் ஐயர் (Rev.J.T. TUCKER)

அழகிய பிரசங்கபீடம்






அழகிய
வசனபீடம்



ஆலயத்தின்
தூண்கள்,
கூரையின்
அழகுத் தோற்றம்



CMS பள்ளி மாணவர்கள் - 1921



பள்ளி வளாகத்தில் மிஷனெரி பங்களா

மருத்துவம் தெரிந்தவரானபடியால், தாமஸ் தன் மனைவியையும் குழந்தையையும் அங்கு அனுப்பினார். தானும் சில நாட்கள் அவர்களுடன் பண்ணைவிளையிலிருந்தார். கர்த்தர் டக்கர் ஐயரின் பிரயாசங்களை ஆசீர்வதித்துக் குழந்தைக்குச் சுகம் கொடுத்தார். அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை மிகுந்த கஷ்டத்துடனேயே மெய்ஞானபுரம் ஆலய ஆராதனைகளை நடத்தினார். அன்று ஆராதனைக்கு வந்தவர்கள் 1300 பேரே. அது அவருக்கு விசனமாயிருந்தது. தாமஸ் எதிர்பார்த்தது 1500 பேரை. (30.11.1851)

அடுத்த நாளாகிய டிசம்பர் 1-ம் தேதி முதல் 4-ம் தேதி வரை சேகர உபதேசிமாருக்குக் கூட்டங்கள் நடத்தினார். அவர்கள் ஒவ்வொருவருடைய வேத, சித்தாந்த, பொதுவான அறிவைச் சோதித்து, மேலும் போதித்து, பிரசங்கங்கள் செய்யச் செய்து, அவற்றைக் கேட்டு, குற்றங்குறைகளை எடுத்துக் காட்டி, ஆலோசனைகள் கொடுத்து, பள்ளிக்கூட ஆசிரியர்களையும் அவ்வாறே ஒவ்வொருவராகச் சோதித்து, பாடம் நடத்தச் செய்து, குறை காண்பித்து, உதவி செய்து இவ்வாறாக நான்கு நாட்கள் கடின உழைப்பில் ஈடுபட்டார். பனைக்குளம் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தார். தாமஸ் அதை பிதிஷ்டை செய்ய, சார்ஜென்ற் பிரசங்கம் செய்தார். கீழப்புதுக்குடியில் தாமஸ் ஐயரின் முயற்சியால் ஒரு சபை உருவானது.

அரிசிக் காணிக்கை

அரிசிக் காணிக்கை படைக்கும் வழக்கத்தை 1829 – லேயே ரேனியஸ் ஐயர் திருநெல்வேலி C.M.S. ல் ஏற்படுத்தியிருந்தார். சேகர தேவாலயக் கட்டுமானச் சங்கங்கள் துவக்கப்பட்ட காலத்திலிருந்து அக்காணிக்கை அவற்றுக்கு கொடுக்கப்பட்டது. மெய்ஞானபுரம் சேகரத்திலும் அவ்வாறே, செய்யப்பட்டது. பிரகாசபுரம் சபை மூப்பர்களில் இரண்டுபேர் தங்கள் சபையில் சேகரிக்கப்படும் அரிசி காணிக்கை தங்களது ஆலயத் தீப நிதிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதாடினார். மதுரநாயகம் ஐயர் அதை ஏற்கவில்லை. உடனே அவர்கள் கட்சி சேர்த்துக் கொண்டு தங்கள் கட்சிக்காரரை அரிசி காணிக்கைக் கொடுக்கக் கூடாதென்று தடுத்துவிட்டனர். சபை இரண்டாகப் பிரிந்தது. கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதியினர் அக்கட்சியை சேர்ந்துகொண்டு, ஆலயத்துக்குப் போவதையும் நிறுத்திவிட்டனர்.

விட்சர்ச் பன்றிகுளம் மிஷனெரியாக நியமனமாகி அங்கு சென்றார்.

(1852) அதனால் தாமஸ் ஐயருக்கு உதவி தேவைப்பட்டது. எனவே W.C. டார்ளிங் (W.C. DARLING) என்னும், பட்டம் பெறாத ஆங்கிலோ – இந்தியர், மெய்ஞானபுரம் உதவி மிஷனெரியாக அனுப்பப்பட்டு, வந்து சேர்ந்தார். ஜாண்தாமஸ் ஐயர் அவர் வாசம் செய்வதற்காக ஒரு கட்டிடம் கட்டினார். அக்கட்டிடமே பிற்காலத்தில் மிஷன் ஆஸ்பத்திரி (மருத்துவ நிலையம்) யாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடமாகும். இன்றும் அக்கட்டிடம் சிறப்பாக உள்ளது.

டார்ளிங்குக்கும், ஸ்ப்ராட், விட்சர்ச் என்பவர்களைப் போலவே ஆண்கள் விடுதிப் பள்ளித்தலைவராக நியமனமாகி, அக்கலாசாலையையும் கிராமப் பள்ளிக்கூடங்களையும் மேற்பார்வை செய்துவந்தார். ஜாண்தாமஸோடு சேர்ந்து கிராமச் சபை சந்திப்பிலும், சுவிசேஷப் பணியிலும் ஈடுபட்டும் நற்பணி புரிந்தார்.

ரேனியஸ் ஐயரால் மெய்ஞானபுரத்தில் உபதேசியாராக நியமிக்கப்பட்ட மிக்கேல் உபதேசியார் தலைமை உபதேசியாராகவும் மெய்ஞானபுரம் சபையின் பெரிய உபதேசியாராகவும் இருந்தார். ஜாண்தாமஸ் ஐயரும் அம்மாளும் அவரை அதிகமாக மதித்து நேசித்தார்கள்.

வேதாகம உதவிச் சங்கம்

ஜாண்தாமஸ் மெய்ஞானபுரத்திலேயே ஒரு உதவிச் சங்கம் துவக்கப்படுவது நலம் என்று எண்ணினார். 1853 ஜனவரி முதலாம் நாளில் சேகர ஊழியரனைவரும் மெய்ஞானபுரத்தில் கூடி வருடாந்தர விழாவைக் கொண்டாடினபோது, ஜாண்தாமஸ் தன்னுடைய எண்ணத்தை அவர்களுக்குத் தெரிவித்து, ஒப்புதல் பெற்றார். பெப்ருவரி 6ம் நாளில் ஹாங்காங் நகரத்தின் விக்றோரியா அத்தியட்சாதீனத்தின் கண்காணியாரான பிஷப் ஜியார்ஜ் ஸ்மித் மெய்ஞானபுரத்துக்கு வருகை தந்த போது, அவரைச் சந்தித்து கௌரவப்படுத்துவதற்காக ஊழியர் அங்கு கூடின சமயத்தைப் பயன்படுத்தி மெய்ஞானபுரம் சேகர வேதாகம உதவிச் சங்கத்தை நிறுவ, தாமஸ் ஐயர் திட்டமிட்டார்.

6ம் தேதி மிஷனெரிமாரும், ஊழியரும் சபையாரில் ஏராளமான மக்களும் மெய்ஞானபுரம் தேவாலயத்தில் கூடினர். பிஷப் ஸ்மித் தலைமை வகிக்க, ஸ்தோத்திரத்துடனும் ஜெபத்துடனும் மெய்ஞானபுரம் சேகர வேதாகம உதவிச் சங்கம், மார்க்க துண்டுத்தாள் பிரசுர சங்கம், தமிழ்நூல் கழகம் என்ற மூன்று சங்கங்கள் நிறுவப்பட்டன.

ஸ்மித் திரியேக தேவனின் நாமத்தில் அவைகளை ஆசீர்வதித்தார்.

தாமஸ் உடன் ஊழியர்களுக்காக இரண்டு வசதிகளுள்ள குருமனைகளைக் கட்டினார். அவர்களுக்கு அது அதிக சந்தோஷமாயிருந்தது. போதுமான சம்பளமும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

மெய்ஞானபுரம் தேவாலயத்தில் கிராதியறை முதலிய சில பகுதிகள் பணி முடிக்கப்படாமல் இருந்தன. தாமஸ் அதையும் மற்ற வேலைகளையும் முடித்துவிட முயன்றார். ஆனால், போதிய பணமில்லை. மெய்ஞானபுரம் சபையார் ரூ. 300/– சேகரித்துக் கொடுத்தார்கள். அதை வைத்துச் சில சில்லறை வேலைகளை முடித்தார். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்த ஐயருக்கு, எதிர்பாராத விதமாக வேல்ஸ் நாட்டிலிருந்து ஓர் அம்மாள் 100 பவுன் அனுப்பினார். அது ரூ.1000 மாக அவர் கையில் கிடைக்கவே, வேலையைத் தொடர்ந்தார். சீக்கிரமே முடித்துவிடலாம் என்றும் நம்பினார். மேலும் பணம் வருமென்பது அவரது எதிர்பார்ப்பு.

1854ம் ஆண்டு மெய்ஞானபுரம் சபை, சேகரம் இவற்றின் வரலாற்றில் சிறப்பு மிக்க ஓர் ஆண்டு. அவ்வருடத்தில் மெய்ஞானபுரம் சேகரம் வெளியிடங்களுக்குத் தன் சொந்த மக்களை மிஷனெரிகளாக அனுப்பும் சேகரம் என்னும் உயர்வு பெற்றது.

அடுத்த வாரம் ஆறுமுகநேரியில் அச்சங்கத்தின் கிளையொன்று நிறுவப்பட்டது. தாமஸ், ராக்லாந்து, மெடோஸ் என்ற குருமாருடன், பவுல் தானியேல் உபதேசியார் அங்கு சென்றார்.

1856ம் ஆண்டு சென்னை பிஷப் தாமஸ் டெல்ட்ரி திருநெல்வேலிக்கு வந்து பல C.M.S., S.P.G. வட்டாரத் தலங்களில் திடப்படுத்தல் ஆராதனைகள் நடத்தினார். மெய்ஞானபுரத்திலும் திடப்படுத்தல் ஆராதனை நடத்தி 400க்கு அதிகமான சிறுவர்க்கு திடப்படுத்தல் கொடுத்தார்.

பின், மெய்ஞானபுரத்தில் நடத்தப்பட்ட அபிஷேக ஆராதனையில் பன்றிகுளம் J.விட்சர்ச், பாளையங்கோட்டை H.டிக்ஸன், C.எவ்ரி, A.டிப், முதலூர் T.H.ஸ்யூட்டர், ஆசீர்வாதபுரம் A.சாமுவேல், ஆழ்வானேரி பரமானந்தம் சிமியோன் ஐயர்மாருக்குக் குருபட்டமும், நாசரேத் அருமைநாயகம் மாசிலாமணி உபதேசியாருக்கும், பெரியநாயகம்

உபதேசியார் (பின்னாளில் இவர் ஆசீர்வாதபுரத்தில் சுமார் 27 ஆண்டுகள் குருப்பணிவிடை செய்தார். இவருடைய குமாரர்களில் ஒருவர் மெய்ஞானபுரத்தில் வைத்திய சுவிசேஷகனாகவும் குருவாகவும் பணிபுரிந்த டாக்டர் M.H. சுக்ஸ்லி ஐயர்). மெய்ஞானபுரம் பவுல் தானியேல் உபதேசியாருக்கும் உதவி குருபட்டமும் கொடுத்தார். அதுவே மெய்ஞானபுரத்தில் நடைபெற்ற முதல் குருபட்டாபிஷேக ஆராதனை. ஜாண் தாமஸ் ஐயரும் அம்மாளும் அத்தியட்சரையும் மிஷனெரிமாரையும் வரவேற்று உபசரித்தனர்.

ஆராதனை மிகுந்த பக்திவிநயமாயிருந்தது. சார்ஜென்ற் ஐயர் பிரசங்கம் செய்தார். ஜாண்தாமஸ் ஐயர், பவுல் தானியேல் உதவி குருப்பட்டம் பெற்றது பற்றி மிகுந்த சந்தோஷம் கொண்டார்.

குருவபிஷேக ஆராதனை முடிந்தபின், அத்தியட்சர் ஆண், பெண் போர்டிங் பள்ளிகளைப் பார்வையிட்டார். சாத்தான்குளம் போர்டிங் பள்ளி மூடப்பட்டுவிட்டபடியால் அதிலிருந்த 21 மாணவர்களும் இப்பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆகையினால் மாணவர் தொகை 70 ஆக உயர்ந்தது. தாமஸ் இப்பள்ளியில் ரூ. 500 செலவில் ஒரு கட்டடம் கட்டத் திட்டமிட்டார். சென்னை சர்ச் மிஷன் சேப்பல் குழுவினர் (Madras Church Mission Chapel Association) அதற்கு ரூ. 200 கொடுத்து உதவினார்கள் W.நைட் ஐயர் மார்ச் 1ம் நாள் (1856) அக்கட்டடத்தின் அஸ்திபாரத்தை ஆசீர்வதித்தார். ஜாண்தாமஸ் ஐயரின் மூத்த குமாரன் டேவிஸ் தாமஸ் அப்பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

எலியட் டக்ஸ்போர்ட் பள்ளியில் 75 பெண்கள் கற்றனர். முதல் முதலாக அரசு ஆய்வாளர் (Inspector) ரிச்சர்ட்ஸ் ஐயர் (Rev.J. Richards) அப்பள்ளியைச் சோதித்து மிகுந்த திருப்தியென்று அறிக்கை எழுதினார்.

பள்ளிக்கூடங்களின் நிர்வாகத்தைத் தன் மூத்த குமாரன் டேவிஸ் தாமஸிடம் (1857 துவக்கம் முதல்) ஒப்படைத்துவிட்டு, இளையமகன் ஜேம்ஸ் தாமஸை ஆண்கள் விடுதிப்பள்ளி தலைமையாசிரியராக்கினார். இருவரும் 1848 முதல் இங்கிலாந்தில் கல்வி கற்று 1856ல் திரும்பி வந்தார்கள். இரண்டு பேருமே தங்கள் தந்தையைப் போன்று சங்கீதப் பிரியராகவும், கின்னரம் (Organ) வாசிப்பதில் நிபுணருமாயிருந்தனர்.

ஜாண்தாமஸ் ஐயர், மெய்ஞானபுரத்திலிருந்து கொண்டு நான்கு பெரிய சேகரங்களை கண்காணித்த முறைகளை நோக்கின எவரும் அவரை

ஒரு மிஷனெரி பிஷப் என்று வர்ணிக்காதிருக்க முடியாது.

மாணவர் மத்தியில் ஊழியம்

மெய்ஞானபுரத்திலிருக்கும் நாட்களிலெல்லாம் ஒரு நாள் ஆண்கள் போர்டிங் பள்ளியிலும், மறுநாள் பெண்கள் போர்டிங் பள்ளியிலும் காலை 10:30 முதல் 11 மணி வரை உயர்ந்த வகுப்பு மாணவ மாணவிகளுக்கு வகுப்புகள் நடத்தி வந்தார்.

1858ம் ஆண்டில் சேகரச் சபையார் கர்த்தருடைய ஊழியத்தில் ஆர்வம் காட்டிப் பற்பல பணிகளுக்காகக் கொடுத்த காணிக்கை முதலியவை தாமஸ் ஐயருக்கு மிகவும் திருப்தியளித்தது. 1858ம் ஆண்டு திருச்சியிலிருந்து ஞானஸ்நான தொட்டி செய்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. சுவிசேஷ ஊழியத்தில் மக்கள் காட்டிய ஆர்வம் தாமஸ் ஐயரை அதிகமாய் மகிழ்வித்தது.

வட திருநெல்வேலிப் பணிக்கு நிரந்தரமாக இரண்டு மிஷனெரி உபதேசிமாரை அனுப்பவும், அவர்களுக்குச் சம்பளம், அலவன்ஸ் முதலியன கொடுக்கவும் மெய்ஞானபுரம் சுதேச மிஷனெரிச் சங்கம் தீர்மானித்தது. அவ்விரு உபதேசிமாரைப் பற்றியும் தாமஸ் அதிக திருப்தி கொண்டார்.

உத்தம உபதேசிமார் அவருக்குக் கிடைத்ததற்கான காரணங்களில் முக்கியமானது, சிறு பிராயத்திலிருந்தே அவர் அவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவிப்பதில் செலுத்தின கவனமாகும். கிராமப் பள்ளிகளில் நல்ல குடும்பங்களைச் சேர்ந்த புத்திக்கூர்மையுள்ள பையன்களில் சிலரைத் தெரிந்து, அவர்களை மெய்ஞானபுரம் போர்டிங் பள்ளியில் சேர்ப்பார். தலத்தில் இருக்கும் நாட்களில் அப்பள்ளியில் தினம் அரை மணி நேரம் வேத பாடம் கற்றுக் கொடுப்பார். மேல் வகுப்பு மாணவர்களை மாலை வேளைகளில் பங்களாத் தோட்டத்தில் வேலை செய்யச் செய்து, தானும் அவர்களுடன் தோட்ட வேலையில் ஈடுபடுவார்.

சில சமயங்களில் அவர்களுடன் விளையாடுவார். வகுப்புகளில் அவர்களுக்குக் கொஞ்சம் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டதால், அவர்கள் அவருடன் ஓரளவு அம்மொழியில் பேசவும் கூடியவர்களாயிருந்தனர். ஆகையால், தோட்ட வேலை முடிந்த பின், அவர்களைப் பங்களாவுக்கு அழைத்துப்போய் தன் குடும்பத்தாருடன் குடும்ப ஜெபத்தில் பங்கு பெறச்

செய்வார். கின்னரம் வாசித்துச் சில ஆங்கில கீதங்கள் பாடினபின், அம் மாணவரிலொருவர் அன்றைய தினத்துக்குரிய வேத பாகத்தை வாசிக்கத், தாமஸ் ஐயர் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து ஜெபித்து, பின்பு அவர்களைப் பள்ளிக்கு அனுப்புவார். இவ்வாறு பள்ளியறையிலும், பங்களா தோட்டங்களிலும், தன் குடும்பத்தோடு பழகும் வேளைகளிலும், ஆலயத்திலும் அம்மாணவரை நன்கறிந்து, இன்னின்னார் இன்னின்ன ஊழியத்துக் கேற்றவன் என்று தன் மனதில் தீர்மானித்துக் கொள்வார்.

தாமஸ் அம்மையாரும் அவ்வாறே அந்நாட்களில் அவர்களுடன் பழகி, அவர்களைப் பற்றிச் சரியானபடி நிதானிப்பதில் அவருக்கு உதவினார். போர்டிங் பள்ளிப்படிப்பு முடிந்த பின், தன் மனதில் திட்டம் செய்தபடி, தாமஸ் அவர்களில் சிலரை, உபதேசியார் பணிக்குப் பயிற்சி பெறுவதற்காகப் பாளையங்கோட்டை பிரிப்பரான்டி நிறுவனத்துக்கும், சிலரை, உபதேசியார் பணிக்கு பயிற்சி பெறுவதற்காகப் பாளையங்கோட்டை ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கும் அனுப்பினார். 1856 வரை மிஷனெரி பயிற்சிப் பள்ளியென்றழைக்கப்பட்டு, அவ்வாண்டு முதல் ட்ரெயினிங் ஸ்கூல் என்றறியப்பட்டு வந்த, இன்றைய பிஷப் சார்ஜென்ற் ஆசிரியப் பயிற்சிக் கூடம் இதுவே. ஈராண்டு பயிற்சிக்குப்பின் அவர்கள் திரும்பி வர, அவர்களை உதவி உபதேசிமாராகவோ, உதவி ஆசிரியராகவோ நியமித்து, அனுபவம் மிகுந்த உபதேசிமார், ஆசிரியர்கள் முதலியவர்களிடம் ஊழியப் பயிற்சி பெறச்செய்து, தனக்கு அவர்களிடமிருந்து நல்ல அறிக்கைகளும், தன் மனதில் நல்ல எண்ணமும் நம்பிக்கையும் உண்டாயின், அவர்களுக்கு சிறு சபைகளிலோ, ஓராசிரியர் பள்ளிகளிலோ பொறுப்பான வேலை கொடுத்துச், சில ஆண்டுகள் கண்காணித்துப் பூரண திருப்தி கொண்ட பின்னரே, உபதேசியார் என்ற பதவியிலோ, ஆசிரியர் என்ற பொறுப்பிலோ அவர்களை நியமிப்பார். உத்தம உபதேசியாருக்குரிய சகல இலட்சணங்களும் ஒருவரிடமுண்டு என்று திட்டவட்டமாக அறிந்த பின்பே அவரை அப்பதவிக்கு உயர்த்துவார்.

உத்தம உபதேசிமாரை ஆக்குவது முதலாவது தேவ கிருபை. இரண்டாவது உயர்வான பயிற்சி. இவ்விரண்டும் நன்கு செயல்பட்டு, அவர்களது ஊழியம் பயனுற நடைபெறுவதும், அவ்வூழியர்தம் பணியில் மேலும் மேலும் சிறப்படைவதும் அவர்களது துணைவியரைப் பொறுத்தது என்னும் உண்மையை நன்கறிந்த ஜாண்தாமஸ்

தம்பதியர் அவர்களுக்குத் தகுந்த மனைவியரைத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவிப்பதிலும் அதிகக் கவனம் செலுத்தினர். ஊழியரைக் கண்டுபிடிக்க ஆண்கள் போர்டிங் பள்ளி எவ்வாறு பயன்படுத்தப்பட்டதோ, அவ்வாறு அவர்களது துணைவிகளைத் தேர்ந்தெடுப்பதில் எலியட் டக்ஸ்ப்போர்ட் பெண்கள் போர்டிங் பள்ளி உபயோகப்படுத்தப்பட்டது. மேரி தாமஸ் அம்மையார் தன்னிடம் படிக்க வந்த மாணவிகளில் பக்தி, அறிவு, புத்திக்கூர்மை, சுறுசுறுப்பு அமர்ந்த சுபாவம், உதவி செய்யும் ஆர்வம், அன்புள்ள இருதயம், தாழ்மை, தன்னடக்கம் முதலிய குணநலன்களுடைய பெண்களை அவர்களது சிறு பிராயத்திலிருந்தே கண்டுபிடித்து, அவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தித், தன் நேரடியான மேற்பார்வையில் பயிற்றுவித்தார்.

உத்தம கிறிஸ்தவ மனைவிகளாக, அன்புள்ள தாய்மாராக, கற்பும் ஒழுக்கமும் கிறிஸ்தவ சீலமுமுள்ள மாதர்களாக, பக்தியுள்ள சபைத் தலைவிகளாக, ஆத்தும ஆதாய ஆர்வமுள்ளவர்களாக, கிறிஸ்தவ அறிவிலும் அன்பிலும் தேறின வழிகாட்டிகளாக, எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் கணவருடைய திருப்பணியில் பூரண ஒத்துழைப்புத் தரும் ஊழியக்காரிகளாக அப்பெண்களிடமிருக்கவேண்டிய உயர் பண்புகளைத் தோற்றுவித்து, அவைகளை வளர்த்தார். ஆண்கள் பள்ளி மாணவரையும் அவர் அறிந்திருந்தாராதலின் இன்னாருக் கேற்றவன் இன்னாள் என்று தீர்மானித்துத், தன் பார்த்தாரின் அபிப்பிராயத்தையுமறிந்து, அவர்களது திருமணத்தை நிறைவேற்றி வைப்பதில் ஊக்கம் கொண்டு செயல்பட்டார். அவ்விதமான திருமணங்கள் அநேகம் நிறைவேறின. ஒரு சில நிறைவேறாமல் போனதுமுண்டு.

1858ம் ஆண்டு முன்பகுதியில், ஆண்கள் போர்டிங் பள்ளியில் 55 மாணவரிருந்தனர். அவர்களில் ஒருவன் தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டான். ஒருவன் படிப்பு முடியும் முன் நின்று கொண்டான். மூவர் எவ்வித எச்சரிப்பினாலும் தண்டனையினாலும் சீர்ப்படுத்தப்படக் கூடாதவர்களாய் இருந்து நீக்கப்பட்டார்கள். எண்வர் பாளையங்கோட்டை பிரிப்பராண்டிக்கு உபதேசிமார் பயிற்சி பெற அனுப்பப்பட்டனர். புதிதாகப் பதினெட்டு மாணவர் சேர்க்கப்பட்டனர்.

பெண்கள் போர்டிங் பள்ளியில் 71 மாணவிகளிருந்தனர். அவர்களில், படிப்பை முடித்த இரண்டு பேர் மெய்ஞ்ஞானபுரம் சேகர ஆசிரியர்களுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டுத், தங்கள் கணவருடன்

ஆசிரியைகளாயினர். ஒரு பெண் உள்ளூர் உதவி உபதேசியாரை மணந்தாள். மற்றொரு பெண் மதுரை அமெரிக்கன் மிஷன் குருவொருவரின் மகனை கலியாணம் செய்தாள். மற்றொருத்தி பன்றிகுளம் உபதேசியாரின் துணைவியாகி அவ்வூர் பெண்கள் போர்டிங் பள்ளிக் கூடத்தில் ஆசிரியையாயமர்ந்தாள். இவ்வளவு மேம்பாடு மிக்க ஆசிரியையைப் பயிற்றுவித்துத் தந்ததற்காக உங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவளாயிருக்கிறேன் என்று பன்றிகுளம் மிஷனெரி விட்சர்ச் ஐயரின் மனைவி சூசன்னா அம்மாள் மேரிதாமஸ் அம்மாளுக்கு இப்பெண்ணைப் பாராட்டி எழுதினார்.

திருப்பணிவிடை ஊழியத்தில் ஐயரவர்களின் பங்கு

1859 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தாமஸ் ஐயர் மெய்ஞானபுரம், சாத்தான்குளம், ஆசீர்வாதபுரம் சேகரங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து கிட்டத்தட்ட எல்லாச் சபைகளையும் சந்தித்து முடித்தார். ஆங்காங்கே மையச் சபைகளை நியமித்து, குறிப்பிட்ட ஒரு நாளில் அதைச் சுற்றிலுமிருந்த சபைகளின் மக்களை அம்மையச் சபை ஆலயத்தில் கூட்டி, வருடாந்தரக் காணிக்கை படைக்கும் பண்டிகையை நடத்தினர். இதற்கு முந்திய ஆண்டுகளிலும் இம்முறை பின்பற்றப்பட்டது. 1858ல் 17 மையச் சபைகளில் அப்பண்டிகை கொண்டாடப்பட்டதில், 1100 ரூபாய் காணிக்கை வரப்பெற்றார். இந்த ஆண்டு (1859) 13 இடங்களில் விழா கொண்டாடப்பட்டது.

குறிப்பிட்ட நாளில் சபைகளிலிருந்து வந்தவர்கள் தங்கள் உபதேசிமாருடன் ஆலயத்தில் கூடினர். ஆராதனை நடத்தி ஐயர் பிரசங்கம் செய்தார். பின் ஒவ்வொரு சபைத் தலைவரும் (அல்லது பிரதிநிதியும்) எழுந்து, முன்வந்து நின்று, கர்த்தருடைய ஊழியத்தைக் கை தாங்க வேண்டியது சபையாரின் பொறுப்பும் உத்திரவாதமும் என்றும், காணிக்கையை மனதாரக் கொடுப்பதிலிருக்கும் சிலாக்கியமும் பாக்கியமும் இன்னதென்றும் குட்டிப் பிரசங்கம் செய்தனர். அது முடிந்தபின், ஒரு மேஜை முன் தாமஸ் ஐயர் உட்கார்ந்து, ஒரு சபையில் காணிக்கை கொடுக்க வேண்டிய குடும்பத் தலைவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலுடன் முன்னால் சென்று, மேஜையின் பக்கத்தில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். பட்டியலில் குடும்பத் தலைவர்களின் பெயர்களுக்கெதிராகக், கடந்த ஆண்டில் அவரவர் கொடுத்தது எவ்வளவு என்பது குறிக்கப்பட்டிருந்தது. அதற்கடுத்தாற்போல், இவ்வாண்டு அவர் கொடுப்பதைக் குறிக்கக் கோடுகள் போடப்பட்டிருந்தன.

ஐயர் அப்பட்டியலைப் பார்த்து, ஒவ்வொரு பெயராக வாசிக்க, பெயர் வாசிக்கப்பட்டவர் முன்னால் வந்து நின்று, கடந்த ஆண்டு செலுத்தின அளவு, அல்லது அதற்கு அதிகமாகத் தன் காணிக்கையைச் செலுத்தினார். அனைவரும் ரொக்க பணமாகவே செலுத்தினர். ஒருவரும் பாக்கி வைக்கவில்லை. யாராவது ஒருவர் வீட்டிலிருந்து வரும்போது இவ்வளவு பணம்தான் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து, அப்பணத்தைக் கொண்டுவந்து, ஆலயத்துக்கு வந்தபின் தான் கொண்டு வந்ததை விட அதிகம் கொடுக்கவேண்டுமென்று விரும்பினால், அப்படிப்பட்டவர் மட்டும், கொண்டுவந்ததைச் செலுத்திவிட்டு, மீதியைப் பின்னால் கொடுக்கும்படி அனுமதிக்கப்பட்டார்.

இவ்வாறே 13 விழாக்களிலும் (1859ம் ஆண்டில்) மூன்று சேகரங்களிலுமிருந்து வந்த காணிக்கை ரூ. 2980-6-4 (ரூ.2980.30) இவ்வாண்டிலும் முந்தின ஆண்டைப்போன்றே ஆலயக் கட்டுமானச் சங்கம், வட திருநெல்வேலி மிஷனெரி சங்கம், வேதாகமச் சங்கம், சுதேச குருமார் சம்பள நிதி முதலியவற்றுக்கும் (இவ்வருடம் மட்டும்) S.P.C.K. சங்கத்துக்கும் இப்பணங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

ஓய்வு நாள் பள்ளிக்கூடம்

ஓய்வு நாள் பள்ளிக்கூடம் இந்த ஆண்டு (1859) தொடக்கத்தில் இருந்து சேகரங்களின் எல்லாக் கிராமச் சபைகளிலும் ஓய்வுநாட்ப் பள்ளிக் கூடங்களை நடத்தும்படி ஊழியர்க்குக் கட்டளை கொடுத்தார். குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கும் பெரியவர்களுக்கு சத்துணவு கொடுப்பதற்குமான எல்லா வாய்ப்புகளையும் உபதேசிமாரும் ஊழியரும் பெற்று, அப்பணியை மனவுவப்புடன் நிறைவேற்றினர். ஆன்மீக ஆகாரம் மட்டுமின்றி சரீரப்பிரகாரமான போஷிப்பும் ஊழியத்தில் அவசியம் என்பதனை இதன்மூலம் ஜாண்தாமஸ் ஐயரவர்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றார். அவர்களது மனைவியர் இதில் அவர்களுக்கு மிகுந்த உதவியாயிருந்தனர். அவ்வூழியரைப் பற்றி அதிக மகிழ்ச்சிகொண்ட ஜாண்தாமஸ், " இருபது வருடங்களுக்கு முன் எனக்கு உதவியாயிருந்த உபதேசிமாருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இப்பொழுதுள்ளவர்களின் வேலைத்திறன் எவ்வளவு அதிக முன்னேற்றமடைந்திருக்கிறதென்று விளங்குகிறது. விரிவடைந்த அறிவும், திட்டமிட்ட பயிற்சியும், அழைப்பை பற்றி அவர்களுக்கிருக்கிற உயர்வான மதிப்பும் அவ்வூழியத்துக்கு அவர்களைத் தகுதி உடையவர்கள் ஆக்கியுள்ளன. இதனால் அவர்களுடைய வேலையை மேற்பார்வையிடும் பாரம் குறைந்து விட்டது.

ஒரே எஜமானைச் சேவிக்கிறவர்கள் என்ற முறையில், அவர்களுடன் அன்புடனும் பட்சத்துடனும் நடந்து, அதே அளவு கண்டிப்பும் காட்டும்போது ஊழியம் தங்கு தடையின்றி நடக்கிறது ". என்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

இவ்வாண்டு (1859) செப்டம்பர் மாதம் 16ம் நாள் சென்னை கல்வி இலாகா இயக்குனரும், டிசம்பரில் சென்னை கண்காணியாரும் மெய்ஞானபுரம் ஆண் பெண் போர்டிங் பள்ளிகளை பார்வையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தனர். மெய்ஞானபுரம், சாத்தான்குளம், ஆசீர்வாதபுரம், கடாட்சபுரம் சேகரங்களின் பள்ளிக்கூட ஆசிரிய, ஆசிரியைகள் அச்சிறுவர் களுக்கு அவர் முன்னிலையில் நடத்திய சோதனைகளில் அவர்கள் கொடுத்த விடைகளை கேட்டு, சகலரையும் பாராட்டினர்.

மெய்ஞானபுரம், சாத்தான்குளம், ஆசீர்வாதபுரம், சேகரங்களிலிருந்த பள்ளிக்கூடங்கள் 71. அவைகளில், 28 ஆண்களுக்கு மட்டும், 37 இருசாரார்க்குமாக நடத்தப்பட்டவை. கற்றுவந்த மாணவ, மாணவிகள் 2203. மூன்று விசாரணை உபாத்திமார்களும் டேவிஸ் தாமஸ்ம் இப்பள்ளிக் கூடங்களின் வேலையை மேற்பார்வை செய்தனர்.

மெய்ஞானபுரம் ஆலயத்தில் காலை, மாலை ஆராதனைகளில் ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகளும் ஒழுங்காக நடைபெற்று வந்தன. காலை மாலை ஆராதனைகளில் பாவ அறிக்கை, கர்த்தருடைய ஜெபம், ஆசீர்வாதம் இவையும் துவக்கத்தில் ஒரு கீதமும், இறுதியில் " ஒன்றாக ஆட்சி செய்கிற " என்னும் திரியேக துதியுமே இடம் பெற்றன. ஞாயிறு தினங்களில் இரு வேளைகளிலும் ஜெப புத்தகத்திலுள்ளபடி வழிபாடு நடத்தப்பட்டது. புதன், வெள்ளிக்கிழமைகளில் லித்தானியா, பாடம், பாடவிளக்கம் இவை மட்டுமே ஆராதனை அம்சங்கள். இவ்வாறு கிறிஸ்தவர்கள் காலையிலும், மாலையிலும் ஆலயம் சென்று கர்த்தரைத் தொழுது கொண்டது கிறிஸ்து நாதருக்கு இந்துக்கள் மத்தியில் சாட்சி பகர்ந்து நின்றது என்று தாமஸ் உறுதி அளித்தார்.

மெய்ஞானபுரம் சபையில் சுமார் அறுபது வாலிபர் தினந்தோறும் மாலை ஆராதனைக்குப் பின் ஆலயத்தில் கூடி, வேதாகமத்தை வாசித்து வருவதைத் தங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை மத்தியான ஆராதனைக்குப் பின் பெரும் பகுதியினர் பின்தங்கி, வேதாகமத்தில் ஓர் அதிகாரத்தை வாசித்து ஆராய்ந்து, பின் வீடுகளுக்குப் போகின்றனர் என்று பெருமிதம் கொண்டார்.

திருமணம் செய்ய வருபவர்கள் தாங்கள் திருச்சபையின் கிரமமான உறுப்பினர்களென்றும், குற்றமற்ற நடத்தையுள்ளவர்களென்றும் சான்றிதழ் கொண்டுவர வேண்டும். கிறிஸ்தவப் பெற்றோருடைய மக்களாயிருப்பின், அவன் (அவள்) வசிக்கும் கிராமத்தில் ஒரு மிஷன் பள்ளிக் கூடம் இருக்குமானால், அவன் (அவள்) வேதம் வாசிக்கவும் கற்றிருக்க வேண்டும் என்ற திட்டம் வகுத்து செயல்பட்டார்.

இதற்கிடையில் அவருடைய மூத்தமகள் மேரி ஜேனின் திருமணம் நடந்தது. (13.6.1860) ஐயரைத் தங்கள் தந்தையென மதித்த மெய்ஞானபுரம் சபையாரும், சேகரங்களின் சபை மக்களும் திரளாகக் கூடி வந்து மணமக்களுக்காக ஜெபித்து, விருந்துண்டு மகிழ்ந்தனர். நெல்லை S.P.G. மிஷனெரிமாரும், (பலர் தங்கள் குடும்பங்களுடன்) வருகை தந்தனர். குருமார், உபதேசிமார், ஆசிரியர் முதலிய ஊழியர்களும் வந்து தேவையான சகல ஒத்தாசைகளையும் செய்து தந்தனர். மேரி ஜேனின் மணவாளன் அந்நாளில் பன்றிகுளம் மிஷனெரியாயிருந்த ஆஷ்ற்றன் டிப் ஐயர். அவர் 1856 ம் ஆண்டு பாளையங்கோட்டைக்கு உதவி மிஷனெரியாக வந்து, 1857–58 ல் டோனாவூரிலும், 1859 லிருந்து (பன்றிகுளம் விட்சர்ச் ஐயரின் விடுமுறை காலத்தில்) பன்றிகுளத்திலும் மிஷனெரிப் பணியாற்றி வந்தவர். முப்பது வயதினர். ஏற்கெனவே அலிஸ் விக்ற்றோரியா ஸ்ற்றேமர் (ALICE VICTORIA STAMMER) என்ற பெண்ணை 1857 செப் 22ம் நாள் மணந்து, ஈராண்டு இல்லற வாழ்க்கை நடத்தியவர். அலிஸ் 1859 ஜுன் 6ம் தேதி இறந்து போகவே, இப்போது ஜேனை மணந்தார். திருமண வைபவங்கள் இனிது நிறைவேறின. விட்சர்ச் 1856 ஜனவரியில் திரும்புவதாயிருந்தபடியால், டிப் ஐயர் மெய்ஞானபுரம் மிஷனெரியாக நியமிக்கப்பட்டார்.

ஆலயத்தின் கல் தளம்

1859ம் 60ம் ஆண்டுகளில், மெய்ஞானபுரம் தேவாலயத்தில் குறைவாயிருந்த பல வேலைகளை முடித்துவிடுவதில் ஜாண்தாமஸ் ஊக்கம் கொண்டார். அக்காலத்தில், சிறந்த பக்தனும் தனவந்தருமான எட்வர்ட் ஸ்றோரி (EDWARD STORY ESQ) என்பவர் திருநெல்வேலி மாவட்டத் தலைமை நீதிபதியாயிருந்தார். அவர் மிஷன் ஊழியங்களில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். மிஷனெரிமாருடன் நட்புக்கொண்டு, அவர்களுடைய பணியைப் பற்றி நன்கறிந்ததுடன், ஆலய பிரதிஷ்டை, ஸ்தோத்திரப் பண்டிகை முதலியவற்றில் நேரில் வந்து

கலந்து மகிழ்வது அவருடைய ஒரு வழக்கம். சுதேசக் கிறிஸ்தவர்கள் மீது, குறிப்பாகக் கிராமச் சபையார் மேல், பற்றும் பாசமும் கொண்டு தன் பொருளால் உதவிகள் பல செய்து வந்தார்.

ஜாண்தாமஸ்க்கும் அவருக்கும் நெடுநாள் நட்பிருந்து வந்தது. ஒரு தடவை அவர் மெய்ஞானபுரத்துக்குச் சென்றபொழுது, ஆலயத்தின் அழகைப் பார்த்து வியந்தவர் உள்ளே சென்றதும், தளம் மண்ணாலாகியிருந்ததைக் கண்டு விசனித்து, கற்றளம் பாவச் செல்லும் செலவைத் தானே கொடுக்க வாக்களித்து, விரைவில் அவ்வேலையைத் தொடங்க வேண்டுமென்று ஜாண்தாமஸ் ஐயரிடம் கேட்டுக்கொண்டார். ஐயரும் உடனே அவ்வேலையைத் தொடங்கி நடப்பித்து முடித்தார். எட்டு மூலைகளுடையனவாய் வெட்டப்பட்டுப் பணி தீர்த்த வெண் பழுப்பு நிறக்கற்களும் கருநிறக் கருங்கற்களும் சேர்த்துப் பதிக்கப்பட்டு முடிவுற்ற அத்தளம் மிகுந்த நேர்த்தியும் அழகுமாயிருந்தது. கண்டோர் வியந்தனர். அத்தளம் நீதிபதி ஸ்ற்றோரியின் அன்பளிப்பு என்பதை என்றும் மறவாதிருக்க, வெண்கலத் தகடொன்றும் ஆலய வாசலண்டை பதிக்கப்பட்டது.

கோபுர வேலையையும் ஜாண்தாமஸ் மேற்கொண்டு, 96 அடி உயரம் வரை அதை வளர்த்தார். அதில் இன்னமும் முடிவுற வேண்டியது கோபுர உச்சிப் பகுதி (Spire) மட்டுமே.

ஆராதனை அழகு பெற ஒரு நேர்த்தியான ஹார்மோனியமும் வாங்கப்பட்டது. (1858) அதன் இன்னிசை மக்களை உற்சாகப்படுத்தினது மல்லாமல், அவர்கள் பாடும்பொழுது சந்தம் கீழிறங்காமல் காத்துக் கொள்ளவும் உதவியாயிருந்தது. மக்கள் முன்னிலும் அதிக எண்ணிக்கையில் ஆராதனைகளுக்கு வரத் தொடங்கினார்கள் ஒரு பெட்டிக்குள்ளிருந்து இவ்வளவு இன்னிசை முழங்குகிறதே என்று அவர்கள் ஆச்சரியத்துடன் அதைப் பார்க்கத்தான் அத்தனை அதிகமாக வந்தனர்.

இந்தியர்களின் கிறிஸ்தவ வழிபாட்டில் கிறிஸ்தவ கீர்த்தனைகள் என்னும் தமிழ் ஞானப்பாட்டுக்களைப் பயன்படுத்துவதின் தேவையையும் மேன்மையையும் முதல் முதல் உணர்ந்தவர் சுரண்டை மிஷனெரியான H.டிக்ஸன் ஐயரே (நவம்பர் 1861) அதை உணர்ந்த பின் அச்சேகரத்தில் கிறிஸ்தவ கீர்த்தனைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் தன் சேகரச் சபைகளில் ஆராதனைகளில் பாட அவர் ஏற்பாடு செய்தார். அதுமுதற்றான்

நல்லைத் திருச்சபையில் கீர்த்தனைகள் வழங்கப்படலாயின. அது ரியந்தம் நம் சபைகளில் (1838 வரை) தமிழில் திருப்பப்பட்ட ஜெர்மன் தேங்களும் (1838 க்குப் பின்) அவற்றுடன் ஆங்கிலத் திருச்சபைக் தேங்கள் தமிழாக்கமாகி ஆராதனைகளில் பயன்படுத்தப்பட்டன.

மெய்ஞானபுரம் தேவாலய வேலை நடந்து கொண்டிருக்கும்போதே ஜாண்தாமஸ் சேகரச் சபைகளில் ஆலயம் தேவைப்பட்ட இடங்களில் அவற்றைக் கட்டுவதில் முனைந்தார்.

ஆண்கள் போர்டிங் பள்ளியில் 1859 லிருந்து ஆங்கிலப் பிரிவு, தமிழ் பிரிவு என்று இரு பிரிவுகளாக நடத்தப்பட்டு வந்தது. ஆங்கிலப் பிரிவில் ஜேம்ஸ் தாமஸ் (தலைமை ஆசிரியர்) ஆபிரகாம், ஞானாயுதம், சுவாமிதாசன் ஆகிய நால்வரும், தமிழ்ப் பிரிவில் வேறு இருவரும், ஆக ஆறு ஆசிரியர் கற்பித்து வந்தனர்.

இவ்வாண்டில் கல்வி இலாக்கா இயக்குநர் – A.J. அர்ப்த்நாட், ஆய்வாளர் – J. ரிச்சர்ட்ஸ் ஐயர், திரு.C. கால்ட்வெல், காள்ஸ் பீயர்ஸ் முதலியவர்கள் வருகை தந்து, சோதனைகள் நடத்தினர்.

பெற்றோர் அற்பக் காரணங்களைக் காட்டித் தங்கள் மக்களின் படிப்பு முடியும் முன் அவர்களை நிறுத்திக் கொள்ளுவதுண்டு. தாமஸ் ஐயர் அதைத் தடுக்கும் நோக்கமாக, எவராவது தன் மகனைத் தகுந்த காரணங் காட்டி மிஷனெரியின் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் நிறுத்துவதானால், அம்மாணவன் பள்ளியில் சேர்ந்த நாள் துவக்கி நிறுத்திக்கொள்ளப்படும் நாள் வரை மாதம் 2 ரூபாய் வீதம் கணக்கிட்டு அத்தொகையைக் கட்டிவிட்டுப் பையனை கூட்டிக்கொண்டு போவேன் என்று ஒப்பந்தக் கையெழுத்திட வேண்டுமென்று திட்டம் செய்தார்.

பெண்கள் போர்டிங் பள்ளியில் 1859 ஆம் ஆண்டு வெளியேறிய மாணவிகள் பன்னிரண்டு பேர். அவர்களில் ஒன்பது பேர் சேகர ஊழியரைத் திருமணம் செய்தனர். இவ்விதமாக அப்பெண்களுக்குக் கல்வியும் பயிற்சியும் கொடுத்ததின் மேலான நோக்கம் நிறைவேறிவிட்டது. சாதாரண சபையாரின் மனைவிகளாயிருப்பதைக் காட்டிலும், மிஷன் ஊழியரின் துணைவிகளாகும்போது அவர்களது முன்மாதிரியும் செல்வாக்கும் அதிகப் பயனுள்ளவையாயிருக்கும் என்று மேரி தாமஸ் தன் ஆண்டறிக்கையில் கூறியுள்ளார்.

நான்கு சேகரங்களிலுமுள்ள இப்பள்ளிகள் 72. அவற்றில் 17

ஆண்கள், 17 பெண்கள், 38 இருபாலரும் கற்பவை. ஆசிரியரும் அண்ணாவிகளும் 65, ஆசிரியைகள் 22. இவர் மாதத்தில் முதல் திங்கள்கிழமை ஆசிரிய ஆசிரியைகளனைவரும் மெய்ஞானபுரத்துக்கு வர, (நான்கு மணி நேரம்) அவர்களுக்கு வேதாகமம், தமிழ், கணக்கு, புவியியல் பாடங்களும், கற்பிக்கும் முறையும் போதிக்கப்பட்டன. மறுபடியும் அந்த வியாழக்கிழமையில் அவர்கள் வருவர். அன்று சேகரங்களின் விசாரணை உபாத்திமார் முந்தின மாதத்தில், ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் சோதித்துச் சமர்ப்பித்த அறிக்கைகள் வாசிக்கப்பட்டு, ஆசிரிய ஆசிரியைகளின் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டன.

பள்ளிகளில் கற்று வந்த மாணவர் 1324, மாணவிகள் 1043. இத்தனை பிள்ளைகள் படித்தாலும், இன்னமும் படிக்காதவர்கள் ஏராளம். வேதம் வாசிக்கத் தெரியாதவர்களுடைய திருமணம் அனுமதிக்கப்படாது என்று ஜாண்தாமஸ் ஐயர் திட்டம் செய்தபின், அநேக வாலிப ஆண்களும், பெண்களும் வாசிக்கக் கற்கத் தொடங்கினர். இவ்வாறு சபை, பள்ளிக்கூட ஊழியங்கள் நிறைவேறி வந்தன.

ஓயாத உழைப்பினால் ஐயரது உடல்நலமும் சீர்கெடத் தொடங்கியது. எனவே ஐயர் தன் மூத்த மகளையும் (திருமதி. டிப்) இளைய மகள் ஃப்ரான்ஸெஸ் எலிசபெத்தையும் தவிர, தன் மற்ற குடும்பத்தினருடன் மூன்றாண்டு விடுமுறையில் இங்கிலாந்து செல்லத் திட்டமிட்டார்.

1861 ஜனவரி மாதம் ஜாண்தாமஸ் ஐயர் தன் குடும்பத்துடன் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். இந்தத் தடவை அவர் லண்டன் பட்டணத்திலேயே வசித்து, வேல்ஸ் நாட்டுக்கு இரண்டொரு தடவை போய்த் தன் இனத்தவரையும் நண்பர்களையும் சந்தித்துத் திரும்பினார். டேவிஸ் குருத்துவத்துக்கும், ஜேம்ஸ் மருத்துவத்துக்கும் படிக்கலானார்கள். இளைய மகன் எட்வர்டும் உயர்தரக் கலாசாலையிற் சேர்ந்தார்.

இங்கிலாந்தில் அவர் செய்த முதல் வேலை, தன் அரிய நண்பரான ஜாண் டக்கர் ஐயரைச் சந்தித்து, மெய்ஞானபுரம் ஆலய வேலை முழுமை பெறுவதற்காக நன்கொடைகள் கேட்டு மனுவொன்று அனுப்ப வேண்டிக் கொண்டதாகும். டக்கர் ஐயரும் அதற்கிசைந்தார். தொடக்க நாட்களிலேயே சுமார் ரூ. 770/-க்குச் சமமான தொகை கிடைத்தது.

டேவிஸ் குருத்துவப் பயிற்சி முடித்தபின், லண்டன் நகரத்து அத்தியட்சர் அவருக்கு உதவிக் குருவபிஷேகம் கொடுத்தார். அவருடைய திருமணமும் சில நாட்களுக்குள் நிறைவேறியது. மெய்ஞானபுரத்தில் ஆஷ்றன் – மேரி ஜேன் தம்பதியர் ஜாண்தாமஸ்

- மேரி தாமஸ் விட்டுச் சென்ற மிஷனெரி ஊழியத்தை நிறைவேற்றினர். தன்னுடைய மாமனார் செய்த பணியை, வலது, இடதுபுறம் சாயாமல் அப்படியே செய்து வந்தார் டிப் ஐயர். டிப் ஐயர் காலத்தில் காணிக்கை வரவு அதிகரித்தது.

மனமகிழ்ச்சிப் பண்டிகை

ஆண்டுக்கொருமுறை பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியரை மெய்ஞானபுரத்துக் கழைத்து ஆராதனைகள் நடத்தும் வழக்கமிருந்து வந்தது. இந்த வருஷம் அதை முன்னிலும் சிறப்பாகக் கொண்டாட டிப் ஐயர் திட்டம் செய்தார். 1863 ஜூலை 29ம் நாள், வழக்கத்தின்படி, மெய்ஞானபுரம் சேகரக் கிராமப் பள்ளிகளின் மாணவ மாணவிகள் 760 பேரும், அவர்களின் ஆசிரிய ஆசிரியைகளும் கூடி வந்தனர். டிப் அவர்களுக்கு வேதபாடம், கணக்கு முதலியவற்றிலும் விளையாட்டுகளிலும் பந்தயங்கள் வைத்து, மதிய உணவு கொடுத்து, ஸ்தோத்திர ஆராதனை நடத்தி உபதேசித்தார். சிறுவர் சிறுமிகள் அந்த ஆராதனையில் நடந்துகொண்டது ரொம்ப நன்றாயிருந்தது. தங்கள் மொழியில் “ பேரின்பமாம், பூரிப்புண்டாம் மேலோக இன்ப வீட்டில் ” என்ற கீதங்களை மிகவும் இனிமையாகப் பாடினார்கள். பொரிகடலை, இனிப்பு வகைகள் முதலிய தின்பண்டங்கள் கொடுக்கப்பட்ட பின், பரிசுகள் வழங்கப்பட்டன. பின், மாலையில் கலைந்து சென்றனர். இவ்வாறு, பின்னாளில் மனமகிழ்ச்சிப் பண்டிகை யென்றும், ஆனந்தப் பண்டிகை யென்றும், வழங்கப்பட்ட பண்டிகை, முதன் முறையாக மெய்ஞானபுரத்தில் அன்று கொண்டாடப்பட்டது.

கல்கத்தா அத்தியட்சரும் தாயாதீனத் தலைவருமான பிஷப் காட்டன் (Most Rev.G.E.L. Cotton) இவ்வருடத்தில் இப்பள்ளிக்கு வருகை தந்து பாராட்டிப் போனார். அவர் மெய்ஞானபுரம் சேகரத்தைச் சுற்றிப் பார்த்து, நடைபெற்றிருந்த கிறிஸ்தவ மிஷனெரிப் பணியின் மேம்பாடுகளைக் கண்டு வியந்தார். அந்த ஞாயிறன்று (17.1.1863) காலை ஆராதனையின் வெகு எழுப்புதலாக இருந்தது. 1400 இந்தியர் ஆலயத்திலிருந்தனர். வெள்ளை நிற ஆடைகளை அணிந்திருந்த உபதேசிமார், ஆசிரியர், பலநிற சேலைகளை அணிந்த பெண்கள், எளிய வேஷ்டிகளையணிந்த ஆண்கள், சதுரம் சதுரமான வடிவமைப்புகளாக அமர்ந்த பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் எல்லாரும் (என்) பிரசங்கத்தை உன்னிப்பாய்க் கவனித்துக் கேட்டனர். உற்சாகமாக மறுமொழி கொடுத்தார்கள். பாட்டுகள் வெகு வெகு

நேர்த்தி, அமைதியான, இனிமையான, பயபக்தியான இசையில் பாடினர். இந்த மகத்துவமான முறையில் மெய்ஞானபுரத்தை பரிணமித்து, இப்போது இங்கிலாந்திலிருக்கும் மிஷனெரி தாமஸ் மெய்யாகவே ஓர் அசாதாரணமான மனிதராய்த்தானிருக்க வேண்டும். பலதிறப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கிற மிஷனெரி ஊழிய ஆர்வம்! இந்த ஆலயத்தில் காணப்படுகிற கட்டிடக்கலை ஞானம்! இந்தச் சபையார் பாட்டுகள் பாடின நேர்த்தியிலிருந்து விளங்குகிற அவருடைய சங்கீத ஞானம்! அவர் இங்கில்லையே என்று விசனிக்கிறேன் என்றார்.

ஆராதனையில் சங்கீதம் பாடும் வழக்கம்

பாளையங்கோட்டை, நாசரேத், மெய்ஞானபுரம் போன்று, நம் திருநெல்வேலி திருச்சபையின் வேறு அநேக ஆலயங்களிலும், சங்கீதங்களை, வாசிப்பதற்குப் பதில் ஒரு வித மேனாட்டு இசையில் பாடுவது உண்டு. கானம் எனப்படும் இந்த ராகங்கள், சங்கீதங்களின் வசனங்களுக்கு ஏற்ப நீட்டியும் குறுக்கியும் பாடக்கூடியவை. மெய்ஞானபுரம் ஆலயத்தில் ஆர்மோனியம் என்ற வாத்தியம் உபயோகப்படுத்தப்படத் தொடங்கியது முதல் போர்டிங் பள்ளி மாணவர்களுக்குக் கானங்களைக் கற்பித்து, ஆராதனைகளில் சங்கீதங்களைப் பாடும் வழக்கத்தத்தைத் தாமஸ் ஐயர் புகுத்தினார் (1858). கானங்கள் அநேகமுண்டு. அவைகளொவ்வொன்றுக்கும் ஒரு பெயருமுண்டு. தாமஸ்ம், டிப்பும் அநேகக் கானங்களைக் கற்பித்திருந்தனர். போர்டிங் மாணவர்களிடம் ஒரு கானத்தின் பெயரைச் சொன்னால் போதும், உடனே அதை சரியாகவும் இனிமையாகவும் பாடிவிடுவர்!

ஒரு தடவை தூத்துக்குடி சப்கலெக்ற்றர் திரு அண்டர்வுட் மெய்ஞானபுரம் ஆலயத்தில் மாணவர் பாடின கானங்களைக் கேட்டு, நன்றாய்ப் பாடினார்கள் என்று பாராட்டியதுமல்லாமல், அதில் போட்டி வைத்து அநேகக் கானங்களை இசை பிசகாமல் பாடுகிறவர்களுக்குப் பரிசு கொடுக்க ஒரு தொகை கொடுத்தார். டிப் அவ்வாறே அந்த ஜூன் மாதம் ஒரு போட்டி நடத்தினார். முதற்பரிசு பெற்றவர் 52 கானங்களைப் பிழையின்றிப் பாடினான்! சபையாருங்கூட அச்சங்கீத கானங்களை ரசித்துப் பாடினர்.

லார்ட் வார்டன் என்ற கப்பல் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்தது. அதில் திருநெல்வேலிக்குத் திரும்பிப்

பயணப்பட்ட ஜாண்தாமஸ் ஐயர், மேரி தாமஸ் அம்மாள், அவர்களது மூன்றாவது மகன் எட்வர்ட் தாமஸ் ஐயர். அவருடைய மனைவி, ஜாண் பிக்ப்வோர்ட் ஐயர், அவருடைய மனைவி ஆகிய மிஷனெரிக் குடும்பங்கள் பிரயாணம் செய்தனர். டிசம்பர் 19ம் நாள் கப்பல் சென்னை துறைமுகத்தை அடைந்தது.

தாமஸ் ஐயரின் மாட்டு வண்டி பயணம்

ஜாண்தாமஸ் குடும்பத்தினர் அன்றையத் தினமே பெட்டி வண்டி எனப்பட்ட பெரிய மாட்டு வண்டியில் திருநெல்வேலிக்குப் புறப்பட்டனர். வண்டியில் ஐயர், அம்மாள், மகன் டேவிஸ், தாமஸ் ஐயர், மகன் எட்வர்ட், மகள் கேதரைன், மருமகள் திருமதி. டேவிஸ் ஆகிய அறுவருக்கும் இடம் போதுமானதாயிருந்தது. மறுநாள் 20ம் தேதி கூடுவாஞ்சேரி பயணிகள் விடுதியில் தங்கி, மாலையில் செங்கல்பட்டைச் சேர்ந்து மாவட்ட நீதிபதி திரு. பிலிப்ஸ் (Mr.PHILIPS) வீட்டில் இரவைக் கழித்து, மறுநாள் கருங்குளி பயணி விடுதியை அடைந்தனர். ஒரு காலத்தில் கர்நாடக நவாபிடமிருந்த பிரிட்டிஷ் ஸ்தானிகர் (BRITISH RESIDENT with the nawab of the CARNATIC) வாழ்ந்த அக்கட்டிடம் மிகவும் பழுதுற்ற நிலையிலிருந்தது.

24ம் தேதி திண்டிவனம் பயணிகள் விடுதியில் தங்கி, 25ம் நாள் விழுப்புரம் சேர்ந்தனர். அக்காலம் திருடர்களைப் பற்றிய அச்சம் அப்பகுதியில் அதிகமாயிருந்தபடியால் விழுப்புரம் காவல் துறையினர் ஆயுதமணிந்த சிறு போலீஸ் படையொன்றை அவர்களுடன் அனுப்பினர். மணல் நிறைந்த பாலாற்றைக் கடக்க மாடுகள் மிகுந்த சிரமமடைந்தன. ஆற்றைக் கடக்க 2 மணி நேரமானது. மறுநாள் உளுந்தூர் பேட்டையை அடைந்து, தாமஸ் ஐயருக்குக் குளிர் காய்ச்சல் வந்துவிட்டபடியால், இரண்டு நாட்கள் ஓய்வெடுத்துச் சுகமாகி, 28ம் தேதி இருங்களூர் போய்ச் சேர்ந்தனர். கிறிஸ்தியாநகரம் சபையைத் தோற்றுவித்தவரும் அதற்குத் தன் பெயரைத் தந்தவருமான, அவ்வூர் மிஷனெரி கிறிஸ்தியான் கோலாப்வ் (Rev.C.S.KOHLOFF) ஐயரும் அம்மாளும் அவர்களை வரவேற்றுபசரித்தனர். மூன்றாம் நாள் (31.1.1864) தாமஸ் ஐயர் இருங்களூர் ஆலயத்தில் ஓய்வு நாளாராதனையில் அருளுரையாற்றினார்.

பின், திருச்சிக்கு வந்து, பெப்ரவரி 2ம் தேதி அங்கிருந்து பயணமாகி, 5 நாட்களுக்குப் பின், 7ம் தேதி பசுமலையை அடைந்தனர். அங்கிருந்த அமெரிக்கன் மிஷனெரிமார் மிகுந்த அன்புடன் அவர்களை ஏற்றுபசரித்து மகிழ்ந்தனர். திருமங்கலம் வழியாக அவர்கள்

விருதுநகரைச் சேர்ந்தபொழுது இரவு மணி 10 (9.2.1864). மூன்று நாள் பன்றிகுளத்தில் விட்சர்ச் ஐயருடன் தங்கினர்.


மெய்ஞானபுரத்திலிருந்து அவரை எதிர்நோக்கி அங்கு வந்திருந்த சபையாரிருவரைக் கண்டு தாமஸ் குடும்பத்தினர் மிகுந்த மகிழ்வெய்தினர். மறுநாள் (13.2.1864) பாளையங்கோட்டையை நோக்கிப் புறப்பட்டு இரவு 11 மணிக்கு சார்ஜென்ற் ஐயரின் பங்களாவையடைந்தனர். ஞாயிறன்று தாமஸ் பாளையங்கோட்டை ஆங்கில ஆலயத்தில் பிரசங்கித்துத் திங்கட்கிழமை மாலை குப்பாபுரத்தைச் சேர்ந்து, அங்குள்ள பங்களாவில் தங்கினர்.

குப்பாபுரம் சபையார் தந்தை தாயாரைக் கண்ட மகிழ்ச்சி கொண்டனர். 16ம் தேதி செவ்வாய்க்கிழமை மெய்ஞானபுரத்துக்கும் வண்டிகளிலேயே புறப்பட்டனர். வழிநெடுக்க ஒவ்வொரு ஊரிலும் அமோக வரவேற்புகளைப் பெற்றுச் சபையாரை ஆசீர்வதித்து, மெய்ஞானபுரத்தை நெருங்கினர்.


தாமஸ் ஐயருக்கு வரவேற்பு

கிறிஸ்தவ சபையார் சுமார் ஆயிரம் பேர் வண்டிகளைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரத்துடன் வரவேற்றனர். ஆலயத்தினருகில் வந்ததும், அனைவரும் வண்டிகளிலிருந்து இறங்கி, வெண் வேஷ்டிகளிலானான பந்தலின் கீழ் நடந்து, பங்களா சென்றனர். பந்தலின் இரு மருங்கிலும் பெண்கள் போர்டிங் பள்ளி மாணவிகள் நின்று வரவேற்புப் பாடல்களை இனிமையாகப் பாடினர். பங்களா விராந்தாவில் டிப் ஐயரும், அம்மாளும், அவர்களுடைய இரு பச்சிளங்குழந்தைகளும், ஃப்ரான்ஸெஸ் தாமஸ் அம்மாளும் அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். தாமஸ் தம்பதியர் தங்கள் பேரக் குழந்தைகளை இப்பொழுதுதான் முதல் முதல் பார்த்தனர். அப்படியே டிப் முதலானவர்கள் வீட்டின் முதல் மருமகளான திருமதி டேவிஸ் தாமஸை முதல் முறையாக கண்டனர். பிரிந்திருந்த குடும்பம் மறுபடியும் ஒன்று சேர்ந்ததினாலுண்டான சந்தோஷம் கரை புரண்டோடியது. தேவாலயத்தில் மணியடித்தது. அனைவரும் ஆலயத்துக்குச் சென்று ஸ்தோத்திர ஆராதனையில் பங்கெடுத்தனர்.

மறுநாள் சேகரங்களின் சபைமக்கள், ஊழியர், குருமார், அவர்களது குடும்பத்தினர், ஆக 1800 பேர் மெய்ஞானபுரத்துக்கு வந்து ஐயரையும் அம்மாளையும் பிள்ளைகளையும் வரவேற்றனர். பின் நடந்த

ஆலயத்தின் மத்திய, பக்கவாட்டுத் தோற்றம்



ஆலயம் சென்று திரும்பும் பள்ளி மாணவர்களுடன்
உவால்ஷ் அம்மையார்



பழைய மிஷனெரி பங்களா,
தற்போதைய மேரிதாமஸ் விடுதி



ஆலயத்தின் பக்கவாட்டுத் தோற்றம்

ஸ்தோத்திர ஆராதனையில், அவர் அவர்களை ஆசீர்வதித்தார். அடுத்த நாளாகிய 18ம் தேதி டிப் ஐயர் தன் குடும்பத்துடன், தான் புதிதாக மாற்றப்பட்டிருந்த டோனாவூருக்கு மிஷனெரியாகச் சென்றார்.

டிப் ஐயர் டோனாவூருக்குப் போனபின், ஆண்கள் பள்ளியின் மேற்பார்வையை தாமஸ் ஐயர் தன் கடைசி மகனான எட்வர்ட் தாமஸிடம் கொடுத்தார். எட்வர்ட் தலைமை ஆசிரியரானார். உதவி ஆசிரியர் இருவர், அண்ணாவி ஒருவர். முந்தின ஆண்டு டிப் ஐயர் துவக்கியிருந்த பள்ளிக்கூடச் சிறுவர் விழா இந்த ஆண்டிலும் நடத்தப்பட்டது. மெய்ஞ்ஞானபுரம், பிரகாசபுரம் சேகரங்களின் விழா மெய்ஞ்ஞானபுரத்தில் கொண்டாடப் பட்டபொழுது 745 பிள்ளைகள் கலந்துகொண்டனர்.

அம்புரோஸ் பள்ளி

1865 ஆம் ஆண்டில் சிறந்து விளங்கிய சபை வெள்ளாளன் விளைச் சபை, அவ்வூரின் உபதேசியார் வேதநாயகம் தாமஸ் என்பவர். இவருடைய மூத்த குமாரன் அம்புரோஸ் தாமஸ் ஐயர். அவர் மெய்ஞ்ஞானபுரம் ஆண்கள் போர்டிங் பள்ளியை உயர்தரக் கல்விச் சாலையாக உயர்த்தி அதன் முதல் தலைமை ஆசிரியரானார். அவருடைய பெயராலேயே அப்பள்ளி அம்புரோஸ் மேல் நிலைப்பள்ளி என்று அழைக்கப்படுகிறது. இளைய குமாரன் ஆங்கிலேயேத் திருச்சபையின் முதல் இந்திய கண்காணியாரான காலஞ்சென்ற தோர்ணக்கல் மகா கனம் அசரியா அத்தியட்சரவர்கள். உபதேசியார் வேதநாயகம் தாமஸ் மூலம் இரட்சகரின் பிள்ளையாகி, அவரிடமே ஞானஸ்நானம் பெற்றவர். 1859ம் ஆண்டு முதல் வெள்ளாளன்விளையில் உபதேசியாராக நியமிக்கப்பட்டு உத்தம பணிவிடையாற்றி வந்தார்.

1866க்குப் பின், ஜாண்தாமஸ் ஐயர், மெய்ஞ்ஞானபுரம், சாத்தான்குளம், ஆசீர்வாதபுரம் சேகரங்கள் பொருளாதாரத்தில் விரைவில் தன்னாதரவும் நிறைவும் காணவேண்டுமென்று அதற்காக முன்னிலும் தீவிரமாக உழைக்கலானார். ஒவ்வொரு சபையும் தன் தன் உபதேசியாருடைய சம்பளத்தைக் கொடுக்க கூடியதாகவும், தன் தன் சபைப்பணி, ஆலயப்பணி, ஆராதனைப்பணி இவற்றுக்கான செலவு தொகைகளைத் தானே சமாளித்துக் கொள்கிறதாகவும் விளங்க வேண்டுமென்று வற்புறுத்தி, ஊக்கப்படுத்தினார்.


மக்களுக்குள் காணப்பட்ட இரண்டு குறைகள் அவருக்குத் துவக்கம்

முதலே பெரும் பாரமாயிருந்தன. அவை எடுத்ததற்கும் பொய் சொல்லுதல், அல்லது உண்மையை மறைத்தல், மாய்மாலம் பண்ணுதல் என்பதும், பண ஆசையுமாகும். இந்த இரண்டுக்கும் எதிராக அவர் ஒரு யுத்தமே நடத்தி வந்தாரெனலாம்.


கிறிஸ்தவர்களுக்குள்ளிருந்து இத்தீமையை வேரோடு களைந்துவிட, அவர் பல முயற்சிகளையெடுத்தார். அவற்றிலொன்று போர்டிங் பள்ளிகளிலும் கிராமப் பள்ளிகளிலும் சிறு பிராயத்திலிருந்தே உண்மை பேச போதிப்பதுடன் பயிற்சிப்பதுமாகும், கொலை, களவு, விபசாரம் போன்ற பெரும் பாவங்களைப் போல, பொய் பேசுதலும் ஒரு பெரிய பாவம் என்ற போதனையைச் சபைகளில் போதிக்கவும் அப்பாவத்தை விட்டு விடாதவர்களை ஞானஸ்நானத்துக்கோ நற்கருணைக்கோ சிபாரிசு செய்யாதிருக்கவும், ஊழியர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். உபதேசிமார்களிடத்தில் பொய் காணப்பட்டாலோ, உடனே வேலை நீக்கம் தான்! மறு பரிசீலனையே கிடையாது.


பண ஆசையை மேற்கொள்ளுவதற்கு ஒரே வழி கொடுக்கப் பழகுவது தான் என்றார் தாமஸ். திருச்சபைக்கும், அதின் பலதிறப்பட்ட பணிவிடைகளுக்காவும் உற்சாகமாகவும் தாராளமாகவும் காணிக்கைகள் கொடுக்க வேண்டுமென்பதும், அது கிறிஸ்தவர்களுடைய கடமை என்பதும் அவரால் வற்புறுத்தப்பட்ட உபதேசங்களை உபதேசிமாரும், தாங்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து, சபையாரும் தங்களைப் பின்பற்றி ஈகைக் குணத்தில் வளர, அவர்களுக்கு உபதேசித்து, ஊக்குவிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

அந்நாட்களில் தாமஸ் ஐயரின் மனதைக் கிலேசத்தால் நிரப்பிய ஒரு சம்பவம் விசாரணை உபதேசியார் மிக்கேல் பிள்ளையின் மரணம் (2.9.1867). ரோமன் கத்தோலிக்க மதத்தில் 1800ம் ஆண்டு பிறந்த மிக்கேல், பாளையங்கோட்டையில் ஹாப்வ் ஐயர் நடத்திய பள்ளியில் பயின்றுவரும் நாளில், தன் மதத்தைத் துறந்து சுவிசேஷக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து (1817), ரேனியஸ் ஐயரின் செமினெரியில் கற்று (1822-26) அவரால் நெடுவிளை (மெய்ஞானபுரத்தில்) உபதேசியாராக நியமனம் பெற்றார் (1826) ஈராண்டுகள் கழித்து சவரியாயி என்ற மாதை மணந்தார். வாழ்நாள் முழுவதும் மெய்ஞானபுரத்திலேயே இருவரும் ஊழியம் செய்தனர். கிறிஸ்துவுக்காக மிகுந்த துன்பங்களை சகித்து, மெய்ஞானபுரம், பாவநாசபுரம், சாந்தபுரம் சபைகளை வளர்த்தனர்.



கம்பீர ஒலி எழுப்பும் ஆலயமணி





While we bless God, and adore the riches of His Grace, for many instances of mercy and goodness; We cannot but feel deeply humbled on account of our own unprofitableness and short comings.— Truly if our God were not a gracious God, and withal full of tender mercies He would long since have removed us from this Sphere of action, in which, alas! we have acquitted ourselves so inefficiently.—

ஜாண்தாமஸ் ஐயரவர்களின் அழகிய கையெழுத்துப் படிவம்



The height of the tower (Gopuram) is 184 feet. The Church was renewed spending several thousands of Rupees and the centenary was celebrated on the last three days of December 1937.

REV JOHN THOMAS

On the last day of December 1869 when I was 10 years old I went to Megnanapuram with my brother-in-law and sister Mr. and Mrs. Paul to pay a visit to Father Thomas I never saw such grand fireworks (பாணவேடிக்கை) in my life before. On the New Year Morn vast number of Christians were crowded in his bungalow with garlands, sweets, plantains &c. to pay him their respects. I was also given a lime to give to him. My flap of hair and my dress attracted him and he made much of me and gave me as many limes as my two hands could hold. Although it took place 68 years ago it appears as if happened yesterday.

The foundation stone of St. Paul's Church was laid in 1884 on or about the site of a former "Hindu—Kovil," the foundation for the massive stone being laid 16 feet deep on solid rock.

Rev John Thomas was the founder and when the Church was dedicated one of his sons and one of the daughters of Bishop Caldwell, together with several Indian children, were baptised.

ஜாண்தாமஸ் ஐயரவர்களைப் பற்றி
Rev. Y.G.பொன்னல்லின் கருத்துக்கள்!

ஜாண்தாமஸ் ஐயரும் அம்மாளும் அவர்களை மதித்து நேசித்து வந்தனர். ஐயர் அவரை மெய்ஞானபுரம் பெரிய உபதேசியாராகவும் விசாரணை உபதேசியாராகவும் உயர்த்தினார். சபைகள் சம்பந்தமான சகல காரியங்களிலும் அவரை நம்பிப் பாராட்டினார்.

ஜாண்தாமஸ் ஐயர், தன் சபை மக்கள் தங்களை ஒறுத்து, கிறிஸ்தவ ஈகைக் கடமையை நிறைவேற்றப் போதித்தார். மக்களும் போதனைக்குச் செவி சாய்த்தனர். கடந்த ஆண்டில் (அதாவது 1867ல்) என் சபை மக்கள் தாங்களாக மனப்பூர்வமாகக் கொடுத்தது ரூ. 4,475-12-9 (ரூ. 4,475.80) ஊழியத்தின் பற்பல வேலைகளுக்காகக் கொடுத்த பணம் இது. இத்தொகையிலிருந்து ரூ. 2000.00 ஐ சுதேசத் திருச்சபை நிதியிற் சேர்த்தேன். அந்த நிதி இப்பொழுது (இச் சேகரங்களில்) ஒரு குருவானவருக்கும் பதினான்கு உபதேசிமாருக்கும் சம்பளம் கொடுத்து வருகிறது என்று தாமஸ் ஐயர் குறிப்பிடுகிறார். மேலும் பணத்தின் மீது கொண்டிருந்த பற்று கிறிஸ்தவ சபையாரிடமிருந்து மறைந்து திருச்சபைப் பற்று அதிகரித்துள்ளது என்றும் மகிழ்கிறார்.

தன் சேகரங்களின் சபைகள் திருச்சபையை ஆதரிப்பதில் காட்டிய ஆர்வம், தாமஸ் ஐயரின் மனதில் ஓர் உற்சாகத்தைத் தந்தது. திருநெல்வேலி சபைகள் ஒரு மிஷனைச் சேர்ந்த சபைகள் என்றிருக்கும் நிலையிலிருந்து ஒரு திருச்சபையாக அதாவது தன் சொந்த மக்களால் ஆதரித்து நடத்தப்பட்டு, தன் காரியங்களைத் தானே நிர்வகித்து, சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றி, கிறிஸ்துவின் ராஜ்ய விருத்திக்கான ஆக்க வேலைகளைச் செய்து வாழும் சபையாகப் பரிணமிக்கும் காலம் நெருங்கி விட்டதை அவர் உணர்ந்தார். மறுபடியும் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் அவரை ஆட்கொண்டன.

சுதேசத் திருச்சபை அமைப்பு

திருநெல்வேலியில் ஒரு குருத்துவப் பயிற்சி நிலையம் தேவையென்றுணர்ந்து, 1846 டிசம்பரிலேயே வெற்றிட் ஐயர் குருப்பட்ட வகுப்பைத் தொடங்கினார். அதில் கற்றுவந்த ஆறுபேரில், ஒருவர் இறந்துவிடவே மற்ற ஐவரும் நான்காண்டுகள் பயிற்சி முடித்து, 1851ல் அபிஷேகம் பெற்றனர். ஆனால் இத்திட்டத்தினாலேற்பட்ட பணச்செலவு, கால விரயம் முதலிய காரணங்களால் திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக, திறமை மிகுந்த உபதேசிமாரில் இரண்டொருவரைத் தேர்ந்தெடுத்து, மிஷனெரிமாரே அவர்களுக்குத் தகுந்த

பயிற்சி கொடுத்து, குருத்துவத்துக்குச் சிபாரிசு செய்வது என்ற திட்டத்தை தாமஸ் ஐயரே தன் ஆலோசனையாக மிஷனெரிமார் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற்றார். அம்முறையில் 1856ல் பவுல் தானியேலும், 1859ல் A. பெரியநாயகம், D.வீரவாகு (இருவரும் தாமஸ் ஐயரின் உபதேசியார்), M. பெரியநாயகம் (சார்ஜென்ற் ஐயரின் உபதேசியார்), ஈசாக்கு ஆபிரகாம் (டக்கர் ஐயரின் உபதேசியார்), J. நல்லதம்பி (விட்சர்ச் ஐயரின் உபதேசியார்), W.T.சத்தியநாதன், J. கொர்னேலியு, D. வேதநாயகம் (ராக்லாந்து ஐயரின் வடதிருநெல்வேலி மிஷனெரி உபதேசியார்) என்பவர்களும் பட்டம் பெற்றனர். அதன்பின் 1862ல் ஒருவர் 1865ல் ஒருவர், 1866ல் நால்வர் குருத்துவர் ஆயினர். தாமஸ் ஐயரின் சுதேசத் திருச்சபை அமைப்புத் திட்டம் நிறைவேறவேண்டுமானால், மேலும் பல குருமார் தேவைப்பட்டனர். ஆகையினால் அவர் தன் சேகரங்களுக்காகவும் பிற வட்டங்களுக்காகவும், தன் சேகர உபதேசிமாரில் பன்னிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் இருந்த இடங்களில் பணி செய்து கொண்டிருக்கும் போதே, அவ்வூழியருக்கு விசேஷப் பயிற்சி கொடுத்துவரத் தொடங்கினார். இத்திருப்பணியில் D.வீரவாகு, டேவிஸ் தாமஸ் என்னும் குருமாரிருவரும் அவருக்குத் தேவையான உதவி செய்துவந்தனர்.

முக்கியத்துவம் வாய்ந்த அப்பணி ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, சேகரங்களின் சபை, பள்ளிக்கூடம், சுவிசேஷ ஊழியம் முதலிய மற்ற வேலைகள் எப்பொழுதும் போலவே நடந்து கொண்டிருந்தன. உடல் நலம் குன்றி, தலைவலி அடிக்கடி தொந்தரவு கொடுத்ததினால் பெலவீனம் மிஞ்சி பல தடவைகள் வியாதிப்பட்டு சோர்வுகள் உண்டானபோதிலும், தாமஸ் தன்னுடைய சுற்றுப் பிரயாணங்களையும், ஆசிரிய ஆசிரியைகளின் வாராந்திரக் கூட்டங்களையும், உபதேசிமாரின் மாதாந்தரக் கூட்டங்களையும் பள்ளிக்கூடச் சோதனைகளையும், சுவிசேஷ ஊழிய முகாம்களையும் ஆண், பெண் போர்டிங் பள்ளிகளில் கற்றுக்கொடுப்பதையும் நிறுத்தவேயில்லை.


இவ்வளவு வேலைகளைச் செய்துவந்தாலும், நிறைவாகா திருந்த மெய்ஞ்ஞானபுரம் தேவாலயக் கட்டிடப் பணிகளையும் 1867, 1868ம் ஆண்டுகளில் மேற்கொண்டு தீவிரமாக அதை முடித்துவிடும் நோக்கத்துடன் உழைத்தார். அத்திருப்பணியும் 1868அக்டோபரில்



பெண்கள் விடுதி மாணவிகள்



சமையல் பணியில் கிறிஸ்தவப் பெண்கள்



அருட்திரு ஜாண்தாமஸ் கல்வியியல் கல்லூரி
நுழைவுவாயில்



எலியட் டக்ஸ்போர்டு பெண்கள்
மேல்நிலைப்பள்ளி நுழைவுவாயில்



பழமை வாய்ந்த


ஆலய ஆர்கன்



ஆர்கன்
நன்கொடையாளர்
பற்றிய
பித்தளை வில்லை



ஆலய கல்தளத்தின் தோற்றம்



கல்தளத்தின் அன்பளிப்பு
பற்றிய பதிவு



ஜாண்தாமஸ் ஐயரவர்கள் மகன் ஃபிரான்செஸ் தாமஸ்



நேப்பியர் பிரபு

முடிந்தது. அதுவரை, இங்கிலாந்திலும், இந்தியாவிலும் தன் நண்பர்களுக்கும், வேறு பலருக்கும், பண உதவிக்காகவும், ஜெபத்துக்காகவும் அவர் எழுதி அனுப்பின கடிதங்களுக்குக் கணக்கில்லை. பணங்களும் வரத்தொடங்கின. அவை வரவர அவர் வெகு கவனமாக அவற்றைச் செலவழித்துக் கொஞ்ச கொஞ்சமாக கோபுரக் கட்டுமானத்தை முடித்தார். ஊசி முனைப் பகுதியைக் (STEEPLE) கட்டி முடித்தது எனக்கு பெரிய ஆறுதலாயிருந்தது. உறுதியும், பாரமற்றதும், அங்கிசைவும் உடையதாய் அழகு நிறைந்து அது அமைந்து விட்டது என்று எழுதுகிறார். (10.11.1868) லண்டன் நகரத்துக் கட்டிடக் கலைஞரான ஹஸ்ஸி (Mr. HUSSEY) என்பவர் வரைந்து, இவ்வூழியத்துக்குக் காணிக்கையாக கொடுத்த வரைபடத்திலிருந்து எள்ளளவும் பிசகாமல் அது கட்டப்பட்டது. அதன் கலையமைப்பு ஆதி ஆங்கிலேயக் கட்டிடக் கலையைச் (Early English Architecture) சார்ந்தது.

நேப்பியர் பிரபு விஜயமும், ஆலய பிரதிஷ்டையும்

1868 அக்டோபரில் திருநெல்வேலி மாவட்டத்துக்கு வருகைதந்து இந்நாட்டில் நடந்துவந்த மிஷனெரி வேலைகளில் அதிக அக்கரை காட்டித், தன் மனைவியுடன் பாளையங்கோட்டை, இடையன்குடி, மெய்ஞானபுரம், நாசரேத் என்னுமிடங்களில் நிறைவேறிய மிஷனெரிப் பணிமுறைகளை நேரில் சென்று பார்க்கத் திட்டம் செய்த, சென்னை கவர்னரான நேப்பியர் பிரபு, அம்மாதம் 9ம் தேதி தன் பரிவாரங்களுடன் மெய்ஞானபுரத்துக்கு வந்தார். கவர்னரையும், நேப்பியர் சீமாட்டியையும், உடன்வந்த கனதனவான்களையும், அதிகாரிகளையும் தாமஸ் ஐயரும், அம்மாளும் பேருவப்புடன் வரவேற்று உபசரித்தார்கள். உபசரிப்புகள் முடிந்தபின் கவர்னர் துரை, நேப்பியர் அம்மாள், மெய்க்காவலர், கலெக்டர், அன்று அங்கு வந்திருந்த மிஷனெரிமார், வேறு அரசு அலுவலர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு, ஐயரும் அம்மாளும் அவர்கள் குடும்பத்தினரும் தேவாலயத்துக்குச் சென்றனர்.


கவர்னர் அதனுள்ளே சென்றதும், அதன் அழகைப் பார்த்து வியந்து நின்றார். தன்னுடைய ஆச்சரியத்தை, திரும்ப திரும்ப வார்த்தைகளில் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார். இந்தியாவில் நான் பார்த்த ஆலயங்கள் அனைத்திலும் இதுவே சிறந்தது என்று புகழ்ந்தார்.

கல்கத்தா நகரத்திலிருக்கும் அத்தியட்சாலயம்கூட அழகில் இதற்கு

நிகரில்லை என்று குறிப்பிட்டார். தாமஸ் ஐயர் நியாயமான பெருமைகொண்டு, அவ்வாலயம் அப்பெருமகனின் கண்களில் அவ்வளவு அழகாகத் தோன்றத்தக்கதாக அதை கட்டி முடிக்க தன்னைப் பயன்படுத்திய கர்த்தருக்குமுன் தன்னைத் தாழ்த்தி, உள்ளத்தில் அவருக்கு நன்றி செலுத்தினார். பின் அனைவரும் பங்களாவுக்குச் சென்று காலை உணவு அருந்தினர்.

அது முடிந்த பிறகு, ஆராதனைக்கு மணி அடித்தது. கோபுர பிரதிஷ்டை வைபவத்திற்காகச் சேகர சபை மக்களும், பள்ளிக்கூடச் சிறுவர்களும், உபதேசிமாரர், ஆசிரியர் முதலிய ஊழியர்களும் அவர்களுடைய குடும்பங்களும் மெய்ஞானபுரத்துக்கு வந்திருந்தமையால் கிராமம் விழாக்கோலம் கொண்டிருந்தது. அனைவரும் ஆலயத்துக்குள் வந்தால் இடம் போதாது. ஆகையினால் முதலாவது சிறுவர் ஆராதனை நடந்தது. ஆயிரம் பள்ளிச் சிறுவர் சதுரம் சதுரமாக உட்கார வைக்கப்பட்டிருந்தனர். அத்தகைய அமைப்பில் அமர்ந்திருந்தவர்களின் ஆசிரியர்கள் அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தனர். கண்கொள்ளா அக்காட்சியைக் கண்ட கவர்னர் கர்த்தரைத் துதித்தார். சிறுவர் ஆராதனை முடிந்ததும், அனைவரும் எழுந்து நிற்க, ஆயிரம் சிறு தொண்டைகளிலிருந்தெழும்பின இனிய குரலில் ஒன்றாக ஆட்சி செய்கிற " திரியேக தேவனாகிய பிதா, குமாரன், ஆவிக்கும், மா ஸ்தோத்திரமுண்டாகவே, ஆமென் " என்று பாடி, மௌன ஜெபம் செய்து, வரிசை வரிசையாகவும் அமைதியாகவும் அச்சிறுவர் வெளியேறினர்.

அதன்பின் ஸ்தோத்திர ஆராதனை நடந்தது. ஆண்களும், பெண்களுமாக 2800 பேர் ஆலயத்தை நிறைத்தனர். ஆலயத்துக்கு வெளியே சுமார் 1200 பேர் இருந்தனர். ஜாண்தாமஸ் ஐயர் ஸ்தோத்திர ஆராதனை நடத்தி கோபுரத்தைப் பிரதிஷ்டை செய்தார். அத்திரள் கூட்டத்தார் ஸ்தோத்திர கீதம் பாடி முடித்தபின், அனைவரும் வெளியே வந்து ஆலயத்தின் முன் திரண்டு நிற்க டேவிஸ் தாமஸ் ஐயரும் கவர்னருடைய அந்தரங்கச் செயலரும் கோபுரத்தில் ஏறி சாரத்தில் தொத்தித் தொத்தி ஊசி முனையின் உச்சிக்குப் போய் நின்றனர். கொத்தனார் உச்சிக் கல்லைக் கொடுக்க அவர்களிருவரும் அதை அதில் வைத்துப் பொருத்தினர். பின் அவர்கள் அங்கிருந்து சைகை காட்டினதும், ஜாண்தாமஸ் ஐயர் உரத்த குரலில் " தேவனுக்கே மகிமையுண்டாவதாக" என்று பாடினார். உடனே 4000 பேர்



மிஷன் ஆஸ்பத்திரி முன்னால் ராய்ட்ஸ் அம்மையார்
கந்தக் கோனார் & ஆசீர்வாத நாடாருடன்



அக்காலத்து குருத்தோலை ஞாயிறு பவனி



ஆலய கோபுரத்தின் மகுடக்கல்



ஆலய கோபுரத்திலிருந்து மெய்ஞ்ஞானபுரத்தின்
நேர்த்தெரு தோற்றம்

கொண்ட அத்திரள் கூட்டத்தார், " தேவனுக்கே மகிமையுண்டாவதாக " என்ற அதே வார்த்தைகளைத் திரும்ப வெகு நேரமாய் உரக்கப் பாடிக்கொண்டே நின்றனர்.

மகுடக்கல்

இந்தியாவிலேயே சிறப்புமிக்க பரிசுத்த பவுலின் ஆலயக் கோபுர பழுது நீக்கும் பணி கர்த்தரின் பெரிதான தயவாலும், புனிதவான் ஜாண் தாமஸ் அவர்களின் ஆசியாலும் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கோபுர உச்சி மட்டும் சாரங்கள் அமைத்து வேலை ஆரம்பமானது. சாரங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்ததால் வெளிப்பக்கமாக ஏறி மகுடக்கல்லை தொட்டுப் பார்க்கும் கிருபை எனக்கும் கிடைத்தது.

அக்கல்லின் அமைப்பையும் அது பொருத்தப்பட்டிருக்கும் விதத்தையும் பார்க்கும்போது, பரிசுத்தவான் ஜாண்தாமஸ் ஐயரவர்களிடம் ஆண்டவரின் பிரசன்னம் எவ்வளவாக இருந்து வழிநடத்தி வந்திருக்கிறது என்பதை நாம் நன்கு உணர முடிகிறது.

நான்கு மாடிகள் மட்டும் கற்களை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி சதுர வடிவில் அமைக்கப்பட்ட இக்கோபுரம், பின்னர் மேற்பகுதி எட்டுத் திசைகளையும் கருத்தில் கொண்டு, எட்டுபட்டை வடிவமாக கூம்பு போல் மேல் உயர்ந்து செல்கிறது. எல்லாவற்றிலும் எட்டுபட்டை வைரத்திற்குப் பட்டை தீட்டியதுபோல அமைந்துள்ளது. நான்காம் மாடிக்குமேல் செங்கற்களும் சுண்ணாம்பும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது.

ஏழாவது மாடியில் மகுடக்கல்லுக்கு கீழே ஏழு கற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றில் கீழிருந்து மேலாக மூன்று கற்கள் மத்தியில் குடையப்பட்டு இரண்டு கற்கள் சேர்த்து எட்டுப்பட்டைகள் தீட்டி பொருத்தப்பட்ட கற்கள் ஆகும். முதல் கல்லின் சுற்றளவு 160 அங்குலம் ஆகும். ஒவ்வொரு கல்லின் உயரம் எட்டு அங்குலம் ஆகும். ஏழாவது கல் இரண்டாகப் பொருத்தப்பட்ட கல் ஆகும். எட்டாவது கல் மகுடக்கல்லின் முகப்பு கல் ஆகும். இது ஒரே கல்லினால் மிகச்சிறப்புடன் பட்டைகள் தீட்டப்பட்ட கல் ஆகும். இக்கல்லின் அடிப்பாகம் 8 பட்டைகளின் சுற்றளவு 60 அங்குலம் மேல்பகுதி மகுடக்கல்லின் உள்ளே சொறுகப்பட்டிருக்கிறது. அதன் சுற்றளவு பட்டைக்கு 5 அங்குலம் வீதம் 80 அங்குலம் ஆகும். மகுடக்கல்லின் சுற்றளவு ஒரு பட்டைக்கு 10 அங்குலம் வீதம் 80 அங்குலம் ஆகும். மகுடக் கல்லுக்கு மேலே உள்ள கல்லும் உள்ளே பொருத்தப்பட்டுள்ளது. மகுடக் கல்லுக்கு மேலே உள்ளக்கல் மேல்பகுதியின் சுற்றளவு பட்டைக்கு 5

அங்குலமாகவும் அமைந்துள்ளது.

காந்தக் கம்பி

இடியைத் தாங்கக் கூடிய காந்த கம்பி நம் ஊர் மக்களால் ஊசிக் காந்தம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இந்த காந்த கம்பி மகுடக்கல்லின் மேல்கல் மகுடக்கல்லுக்குள் சொறுகப்பட்டிருக்கும் இடத்தில் தென்புறமாக கற்களுக்கும், காந்தக்கம்பிக்கும் இணைப்பு இல்லாத வகையில், பீங்கான் குண்டுகள் அமைத்து இரும்பு பட்டைகளின் உதவியுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. நாலரை அடி உயரத்தில் அந்தக் காந்த கம்பி அமைக்கப்பட்டிருக்கிறது. நுனியில் நான்கு திசைகள் நோக்கி நான்கு கம்பிகளும் 5வது கம்பி ஆகாயத்தை நோக்கியும் நிற்கின்றன. காந்தக் கம்பியின் இணைப்பு செம்பு பட்டை மற்றும் சங்கிலியால் செய்யப்பட்டு மகுடக்கல்லிலிருந்து ஆலயத்தின் தென்பகுதியில் உள்ள கீரைக்காடு கிணறு வரை செல்கிறது.


ஆலயமணியும் கோபுர கடிகாரமும்

இனிய நாதம் தரும் பெரிய மணியொன்று இங்கிலாந்திலிருந்து தாமஸ் ஐயரால் தருவிக்கப்பட்டிருந்தது. வரும் வழியில், கப்பற் சிப்பந்திகளின் கவனக்குறைவால் அது கீழே விழுந்து ஒருபுறம் கீறிவிட்டது. ஜாண்தாமஸ் அதை நம் நாட்டுச் சிற்பிகரைக் கொண்டு உருக்கி, மறுபடியும் செய்து முடித்தார். அம்மணியும் அன்று கோபுரத்தில் ஏற்றி ஐயர் பிரதிஷ்டை செய்தார். அன்று முதல் இன்று வரை மிகச்சிறப்பாக இனிய நாதம் தரும் கோவில் மணியோசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு தேவ ஆசீர்வாதத்தினாலும் கிருபையினாலும், சென்னை கவர்னர் நேப்பியர் பிரபுவின் முன்னால், தேவாலயக் கோபுர வேலையும் பிரதிஷ்டையும் நிறைவேறின.


வட்டவடிவமான கடிகாரத்தின் விட்டம் 5 அடி ஆகும். இதன் பெரிய, சிறிய கடிகார முட்கள் முறையே சுமார் 2 1/2 அடி, 2 அடி அளவுகள் கொண்டவை. இவ்வியந்திரத்தில் ஓர் சிறிய கடிகாரம் உள்ளது. இவ்விரு கடிகாரங்களும் ஒரே இயந்திரத்தின் மூலம் இயக்கப்படுகிறது. இதன் பெண்டுலம் 5 3/4 அடி நீளம் கொண்டது. இயந்திரத்தில் உள்ள கடிகாரத்தின் முட்களை சரிபார்த்து திருப்பும் போது வெளிப்புற தோற்றமாக உள்ள கடிகார (பெரிய) முட்களும் இயங்கி சரியாகும்படி உள்ளது. இச்சிறிய கடிகாரத்தின் டயலும் கோபுர வெளித்தோற்ற கடிகாரத்தின் டயலும் ஒன்றுக்கொன்று எதிர் சுழி வரிசையில் கணக்கிடப்பட்டுள்ளது. சிறிய கடிகாரத்தின் விட்டம் 6



ஆலய கோபுர கடிகாரத்தின் முகப்பு டயல்



இயந்திரத்தில் உள்ள டயல்



கோபுர கடிகாரத்தின் இயந்திரம்



ராய்ட்ஸ் அம்மையார் விடுதி மாணவிகளுடன்



ராய்ட்ஸ் அம்மையார் குடும்பத்தினருடன்

அங்குலம். இதன் பெரியமுள் 2 1/2 அங்குலமும், சிறிய முள் 2 அங்குலமும் அளவுகள் கொண்டது.

கடிகார இயந்திரம் இயங்குவதற்கு ஒரு வாரத்திற்கு ஒருமுறை சுமார் 26 சாவி கொடுக்கப்படுகிறது. ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மணி ஒலிப்பதற்கு இரண்டாவது முனையில் சுமார் 85 சாவி கொடுக்கப்படுகிறது. சாவி ஓர் லீவரை பலன் கொண்டு சுற்றுவதன் மூலம் கொடுக்கப்படுகிறது. ஆலய மூன்றாவது மாடியில் உள்ள வெண்கல மணி முதல் மாடியில் இருந்தே இயக்கப்பட்டு மணியோசை எழுப்பப்படுகிறது. மணியானது சுழலும் இரு பின்கள் மூலம் அதன் அகன்ற பாகத்தில் தாங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மணியானது பக்கம் அது அமைக்கப்பட்டுள்ள அமைப்போடு சுழன்று அடிக்கப்படுகிறது. முதல் மாடியில் இருந்து கயிறு இழுக்கப்படுவதன் மூலம் ஓர் சக்கரம் எளிதாக அரைவட்டமாகச் சுழன்று மணியைச் சுழற்றி ஓசையெழுப்புகிறது.

இம்மணியின் வெளிப்புறத்தில் கடிகார இயந்திரத்தில் இருந்து கம்பி மூலம் சுத்தியல் போன்ற அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு மூலம் ஒரு மணிக்கொருமுறை ஒலியெழுப்பும் மணியடிக்கப்படுகிறது. இவ்வெங்கல மணியின் அடி சுற்றளவு 7 அடி. இதன் உயரம் 2 1/2 அடி. இதன் நாக்கின் நீளம் 2 அடி ஆகும். இதன் விட்டம் 2 1/4 அடி ஆகும். மேலும் வெள்ளப்பெருக்கு, தீ விபத்து போன்ற எதிர்பாராத துர் நிகழ்ச்சிகள் நடப்பதை தெரிவிக்கும் வண்ணமாக தொடர்ச்சியாகவும் சிறு இடைவெளி விட்டும் அபாய மணி ஒலி எழுப்புவதும் வழக்கத்திலுள்ளது.

1980 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டலத்தின் 200 வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. பிஷப் ஸ்டீபன் நீல் (Bishop Stephen Neil) துரையும் இங்கிலாந்திலிருந்து விழாவுக்கு வந்திருந்தார்.

திருமண்டல ஆலய மணி ஓசைகளை பெயர் குறிப்பிடாமல் வரிசையாக டேப்பில் பதிவு பண்ணியிருந்தார்கள். டேப் ஓடியதும் மணி ஓசைகள் ஒலித்தன. நம் ஆலய மணி ஒலிக்கும்போது பிஷப் நீல் அவர்கள் நம் ஆலயத்தின் பெயரைக் கூறி புன்முறுவல் பூத்தாராம். 35 ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பின் நம் ஆலய மணி ஓசையை அடையாளம் கண்டு கொள்ள முடிந்ததென்றால் நம் ஆலய மணி நாதத்தின் தனித் தன்மையை நாம் புரிந்து பெருமிதம் கொள்ளலாம்.

ஆலயத்தில் இன்னமும் தேவையாயிருந்தவை. நிரந்தரக்

கூரையும், தூண்களும், மேலாகப் பல சன்னல்களைக் கொண்ட சுவர்களை எழுப்புதல் வேண்டும் (Clerestory) அவைகளுக்கு மேல்தான் கூரை அமையவேண்டும். இவற்றிற்கு ஆகும் செலவு சுமார் ரூ. 5000 என்று கணக்கிட்ட தாமஸ், எவ்வளவு பணம் சேகரிக்கக்கூடுமோ அதைக் கொண்டு எவ்வளவு வேலைகளைச் செய்து முடிக்கக் கூடுமோ அவற்றையும் முடித்து, எனக்குப் பின்வருகிறவர்களுக்கு எவ்வளவு குறைவான பணிகளை விட நேரிடுமோ அவைகளை மட்டுமே விட்டுச்செல்ல வேண்டுமென்று ஆசிக்கிறேன் என்று எழுதினார்.

ஆலயக் கட்டுமானத்தில் தன் வேலை முடிந்துவிட்டது என்று தாமஸ் நினைத்துவிடவில்லை. அவர் எழுதினபடியே பணம் கிடைக்க கிடைக்க தூண்களுக்கு மேல் கட்டப்பட வேண்டியிருந்த கூரை தாங்குச் சுவர்களுக்குத் தேவையான கல், சுண்ணாம்பு முதலியவைகளைச் சேகரித்தார். நான் சோம்பலாயிருந்து விடவில்லை. சரியான காலம் வரும்போது வேலையைத் துரிதமாக முடித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன், தேவையான பொருட்களைச் சேர்த்து வருகிறேன். தூண்களுக்கு மேல் கட்டப்படும் சுவர்களுக்குத் தேவைப்படும் கல், செங்கல், சுண்ணாம்பு தினந்தோறும் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆலயத்துக்குச் சொந்தமான மூன்று வண்டிகளில் இவை வருகின்றன. கற்களைப் பணி தீர்ப்பதில் கல் தச்சர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இருபது ஆண்டுகளுக்கு முன் செய்தது போல எக்காரியத்தையும் சிரமமின்றிச் செய்ய என்னால் முடியவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். முன்போல கஷ்டங்களை இலகுவில் மேற்கொள்ளத்தக்க உடம்பு உரம் என்னிடத்திலில்லை. ஆயினும், இந்த ஆலயத்தை இம்மட்டும் அழகாகச் செய்து முடிக்க எனக்குத் தேவாசீர்வாதம் கிடைத்தது. இதைப் பார்க்குந்தோறும், பார்த்து அதனாலேற்படும் சந்தோஷத்தை அனுபவிக்குந் தோறும், இதைக் கட்டி இம்மட்டும் கொண்டு வரப்பெலன் தந்த சர்வ வல்லமையுள்ள தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் என்று நன்றியுடன் எழுதினார்.

ஐயரவர்களின் மிஷனெரி கடமை

வழக்கம்போல, தன் மிஷனெரிக் கடமைகளையும் தாமஸ் நிறைவேற்றி வந்தார். இவ்வாண்டிலும் (1868) மூன்று சேகரங்களிலும் மூன்று முறை சுற்றுப் பிரயாணங்கள் செய்து, ஆயிரமாயிரமான இந்து, முஸ்லீம், ரோமானித்தர்களுக்கு சுவிசேஷம் கூறினார்.

அவ்வேலைகளின் மத்தியிலும் நாம் முன்னர் கூறியுள்ளபடி, தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிரண்டு உபதேசிமாருக்கும் விசேஷித்த குருத்துவ ஊழியப் பயிற்சி கொடுத்து, அபிஷேகத்துக்கு அவர்களை ஆயத்தப்படுத்தினார். அப்பன்னிருவர் ஆபிரகாம் வேதமுத்து (பிரகாசபுரம்) ஆசீர்வாதம் ஞானமுத்து (ஆறுமுகநேரி), ஞானப்பிரகாசம் மாசில்லாமணி (திருவரங்கனேரி), டேவிட் பேரின்பம் (ஆனந்தபுரம்), ஜாண் சாமுவேல் (சத்தியநகரம்), ஜாண் சிமியோன் (தர்மநகரம்), ஆரோன் வேதமுத்து (நாலுமாவடி), வேதநாயகம் தாமஸ் (வெள்ளாளன்விளை), டேவிட் ஸ்தேவான் (நெடுங்குளம்), பாக்கியநாதன் மாசில்லாமணி (கடாட்சபுரம்), ஜோசப் டேவிட் (மெய்ஞானபுரம்), ரால்ப்வ்ஹாப்பர் (அனுக்கிரகபுரம்).

இவர்களுடன் பண்ணைவிளை சேகர உபதேசிமாரான தாவீது இராஜேந்திரம் (மன்னாரையன்தட்டு), ஆபிரகாம் இராஜேந்திரம் (கொங்குராயர்குறிச்சி), பாளையங்கோட்டை சேகரம் ஈசாக்கு சாமுவேல் (ஆரைக்குளம்) என்ற C.M.S. உபதேசிமாரும், சத்தியநாதன் கிறிஸ்தியான் (இடையன்குடி), தானியேல் ஞானப்பிரகாசம் (புதியம்புத்தூர்), சுத்த சமாதானம் யோசேப்பு (இடையன்குடி), ஞானமுத்து பேதுரு (இடையன்குடி) பெரியநாயகம் சுவாமியடியான் (இடையன்குடி), குருபாதம் இயேசுவடியான் (கூடன்குளம்) என்ற உபதேசிமாரும், தங்கள் மிஷனெரிமாரால் ஆயத்தப்படுத்தப்பட்டார்கள்.

சென்னைக் கண்காணிப்பாளர் ஃப்ரெடரிக் ஜெல் அத்தியட்சர் 1869 ஜனவரி மாதம் திருநெல்வேலிக்கு வந்து பாளையங்கோட்டை தூய திரித்துவ ஆலயத்தில் குருப்பட்டாபிஷேக ஆராதனையை நடத்தத் திட்டம் செய்தார்.

இதற்கிடையில் வட நெல்லை பனையடிப்பட்டியில் குருவாயிருந்த ஜோசப் கொர்நேலியு ஐயரும், இடையன்குடி D. சாமுவேல் ஐயரும் குருப்பட்ட மாணவர்களுக்குப் பரீட்சைகள் நடத்தினர். தாமஸ் ஐயரின் பன்னிரண்டு உபதேசிமாரும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றுத்தேறினர் (1868 செப்ற்) பின் அவர்களை மெய்ஞானபுரத்துக்கு வெகு அருகிலிருந்த பன்னிரெண்டு சபைகளுக்கு மாற்றி, அவர்கள் அச்சபைகளில் உபதேசியார்களாக வேலை செய்துகொண்டே, வாரத்தில் நான்கு நாட்கள் மெய்ஞானபுரத்துக்குச் வந்து தன்னிடம் மேலும் பயிற்சி பெறும்படி தாமஸ் ஐயர் ஏற்பாடு செய்தார். நான்கு மாதங்களாக அவர்கள் அப்பயிற்சியைப் பெற்றுவந்தனர். இந்த வகுப்புகளில் அத்தியட்சர்

குறித்திருந்த பாடங்களை அவர்களுக்குக் கற்பித்தார். ஒவ்வொரு பாடத்திலும் கேள்விகளைக் கொடுத்து, அவர்கள் அவைகளுக்கேற்ற விடைகளை ஆராய்ந்து எழுதிவரச் செய்தார். ஜனவரி மாதம் வகுப்புகள் நிறுத்தப்பட்டன. அம்மாதம் முழுவதும் ஜெபத்தில் செலவிட்டு அவர்கள் ஆயத்தமானார்கள்.

ஜனவரி மாதத்தில் ஜாண் தாமஸ் ஐயர் வியாதிப்பட்டார். சென்னைக்குச் சென்று சிகிட்சை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றாயிற்று. ஆகையால் அவர் கஷ்டமான அப்பிரயாணத்தை மேற்கொண்டு, அம்மாளுடன் சென்னை போய்ச் சேர்ந்தார். அங்கு அவருக்கு தீவிரமாக மருத்துவம் செய்யப்பட்டது. சேகர வேலைகளை டேவிஸ் தாமஸ் நிறைவேற்றி வந்தார். பள்ளிக்கூட மேற்பார்வையை எட்வர்ட் தாமஸ் மேற்பார்த்துக்கொண்டார்.

ஜனவரி 8, 1869 வெள்ளிக்கிழமையன்று சென்னைக் கண்காணியார் பிஷப் ஜெல் மெய்ஞானபுரத்துக்கு வந்து சேர்ந்தார். ஜாண்தாமஸ் ஐயரும் அம்மாளும் சென்னைக்கு சென்றிருந்ததினால், டேவிஸ்தாமஸ் ஐயரும் அவருடைய மனைவியும் அத்தியட்சரையும் அவருடன் வந்திருந்த சேப்ளன் முதலான ஐரோப்பிய குருமாரையும் வரவேற்று உபசரித்தனர். சனிக்கிழமை காலையில் மெய்ஞானபுரம் சேகரத்தைச் சேர்ந்த 379 பேருக்கும், கடாட்சபுரத்தைச் சேர்ந்த 51 பேருக்கும் மெய்ஞானபுரம் ஆலயத்தில் அத்தியட்சர் திடப்படுத்தல் கொடுத்தார். ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையில் பிரசங்கம் செய்தார். பரிசுத்த நற்கருணைப் பந்தியில் 370 பேர் பங்குபெற்றார்கள். மறுநாள் மெய்ஞானபுரத்தை விட்டுப் போகும் முன் அத்தியட்சர் ஆண், பெண் போர்டிங் பள்ளிகளைப் பார்வையிட்டார்.

குருப்பட்டம் பெறுபவரனைவரும் மிஷனெரிமார், குருமார் முதலியோரும் 30ம் தேதி பாளையங்கோட்டையை அடைந்தனர். கண்காணியாரின் பரிசோதகச் சேப்ளன் குருபட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார். விடைகளை மதிப்பிடும் பணி இடையன்குடி கால்ட்வெல் ஐயரிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றே அவர் அதை செய்து முடித்து மதிப்பெண்களை பிஷப்பிடம் சமர்ப்பித்தார். பரீட்சை எழுதினவர்களில் தாமஸ் ஐயரின் பன்னிருவரும் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். உயர்ந்த மதிப்பெண்கள் எடுத்த முதல் ஐவரும் ஜாண்தாமஸின் உபதேசிமாரே. எல்லாரிலும் அதிக

மதிப்பெண்கள் எடுத்தவர் வேதமுத்து ஆபிரகாம் என்பவர். அவர் பிரகாசபுரத்தில் உபதேசியாராயிருந்தார்.

31ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (1869 ஜனவரி 31) பாளையங்கோட்டை திரித்துவ ஆலயம் மக்களால் நிறைந்தது. ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் கூட வெள்ளை நிறத்தில் ஆடைகள் அணிந்து ஆராதனைக்கு வந்திருந்தனர். ஆராதனையில் கலந்து கொண்ட குருமார், அத்தியட்சரின் சேப்ளின் O. டீன் ஐயரைச் (Rev.O.DEANE) சேர்த்து, அறுபது பேர். அபிஷேகம் பெற்றவர்கள் 36 பேர். அவர்களில் உதவிக் குருவானவர்கள் C.M.S. - 15 S.P.G. - 6;) குருப்பட்டம் பெற்றவர்கள் C.M.S. - 8; அவ்வெண்வரில் ஐரோப்பியர் இருவர் (Rev.V.W.H. ARCOURTAND, A.H. LASH) S.P.G. - 7 பேர், அவ்வெழுவரில் ஒருவர் ஐரோப்பியர் (Rev.J.L. WYATT)

சென்னையிலிருந்து அண்மையில் ஊர் திரும்பியிருந்த ஜாண் தாமஸ் ஐயரும் ஆராதனையிலிருந்தார். அதிகப் பெலவீனமாக இருந்த படியாலும், அண்மையில் குதிரையிலிருந்து இரண்டாம் தடவை விழுந்து விட்டதினால் அதிர்ச்சியடைந்திருந்ததினாலும், அவர் அதில் பங்கெடுக்கவில்லை. ஆனால் அவருள்ளம் கர்த்தரை நன்றியுடன் துதிக்கும் துதிகளால் நிரம்பியது. பட்டாபிஷேக ஆராதனையில் வாகைக்குளத்தின் குருவான வேத நாயகம் ஐயர் பிரசங்கம் செய்தார்.

திருநெல்வேலி திருச்சபை வரலாற்றில் மாபெரும் பட்டாபிஷேக ஆராதனையென்று (The Great ordination) வர்ணிக்கப்பட்ட ஆராதனை அது. அதற்கு முன்னும் அதற்குப் பின்னும் அத்தனை பேர் பட்டம் பெற்ற அபிஷேக ஆராதனையெதுவும் நடந்ததில்லை.

ஆராதனை முடிந்தபின் அத்தியட்சரும், சென்னை C.M.S. கமிற்றி செயலர் P.S. ராய்ஸ்ற்றன் ஐயரும் (Rev.P.S. ROYSTON) இரண்டொரு நாட்கள் பின்தங்கி, திருநெல்வேலி சபைகள் ஒரு திருச்சபையாக உருவெடுக்கும் திட்டத்தை நிறைவேற்றினர். அத்திட்டத்தை ஏற்ற C.M.S. தாய்க் கமிற்றியாரும் அதைச் செயலாக்கும்படி கேட்டிருந்தனர். தாமஸ் சார்ஜென்றின் திட்டம் நிறைவேறும் காலம் வந்துவிட்டது.

வட்டச் சபைகளில் தனியாக இயங்கக் கூடிய சபைகளை பாஸ்ற்றரேட்களாக அமைத்து, புதிதாகப் பட்டம் பெற்ற குருமாரை அவற்றில் நியமிப்பதும் அக்குருமாருக்கும் சபைகளே சம்பளம் கொடுப்பதென்றும், ஒரு வட்டத்தில் அவ்வாறு அமையும் பாஸ்ற்றரேட்களை

மேற்பார்க்கும் பொறுப்பு வட்டார மிஷனெரியைத் தலைவராகவும் பொருளாளராகவும் உடைய சுதேசத் திருச்சபை மன்றத்தினது (Native Church Council) என்பதும் அத்திட்டத்தின் சாராம்சங்கள்.

தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளக்கூடிய சபைகள் பாளையங்கோட்டை, மெய்ஞானபுரம் ஆகிய இரு வட்டங்களில் மட்டுமேயிருந்தன. ஆகையினால், அவ்விரண்டிலும் தன்னாதரவு பெறும் நிலையிலிருந்த சபைகளைப் பாஸ்றரேற்றுகளாகப் பிரித்துப் பாளையங்கோட்டை சுதேச திருச்சபை மன்றம் மெய்ஞானபுரம் சுதேச திருச்சபை மன்றம் என்ற இரண்டு மன்றங்களை நிறுவினர். முன்னதில் எட்வர்ட் சார்ஜென்ற் ஐயரும், பின்னதில் ஜாண்தாமஸ் ஐயரும் தலைவர் ஆனார்கள்.

புதிதாக உருவாக்கப்பட்ட மெய்ஞானபுரம் சுதேச திருச்சபை மன்றத்தின் ஆட்சியில் வைக்கப்பட்ட பாஸ்றரேட்களாவன. 1. பிரகாசபுரம், 2. மெய்ஞானபுரம், 3. ஆறுமுகனேரி, 4. திருவரங்கனேரி, 5. அனுக்ரகபுரம், 6. ஆனந்தபுரம், 7. சத்தியநகரம், 8. தர்மநகரம், 9. நெடுங்குளம், 10. நாலுமாவடி, 11. வெள்ளாளன்விளை, 12. லட்சுமிபுரம் இவற்றுடன் கடாட்சபுரம் ஒரு பாஸ்றரேட் ஆனது. அதின் மிஷனெரி ஜாண் தேவசகாயம் ஐயர் 1865ல் காலமான பின், அவ்வட்டம் பாளையங்கோட்டை ஆசிரியப் பயிற்சிப் பள்ளித் தலைவர் தாமஸ் ஸ்பிராய்ட் ஐயரின் மேற்பார்வையில் வைக்கப்பட்டது. இப்போது (1869 முதல்) அது ஒரு பாஸ்றரேட் ஆகி தாமஸ் ஐயரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டது. புதிதாய் உதவிக் குருபட்டம் பெற்ற மாசிலாமணி பாக்கியநாதன் ஐயர் அப்பாஸ்றரேட் குருவாக நியமிக்கப்பட்டார். இப்பாஸ்றரேட்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது மூன்று சபைகளேயிருந்தன. சில மட்டும் ஐந்தாறு சபைகளை உடையன.

ஆசீர்வாதபுரமும், சாத்தான்குளமும் அவ்வாறே தனிப் பாஸ்றரேட்கள் ஆக்கப்பட்டு, மற்றப் பாஸ்றரேட்களைப் போலவே கொஞ்சமான சபைகளை மட்டும் உடையவையாயின. அவையும் மெய்ஞானபுரம் சுதேச திருச்சபை மன்றத்துடன் இணைக்கப்பட்டன.

ஆக, மெய்ஞானபுரம் சேகரத்திலடங்கிய பாஸ்றரேட்கள் பதினைந்து, அவைகளைச் சேர்ந்த சபைகள் 55 மீதிச் சபைகள் 78. அவைகளும் மிஷன் வட்டம் (Missionary District) என்னும் பெயருடன்

தாமஸ் ஐயரின் நேர் மேற்பார்வையில் வைக்கப்பட்டன. அவர் அவற்றின் கண்காணிப்பு மிஷனெரியாக (Superindending Missionary) தன் பணியைத் தொடர்ந்தார்.

திருச்சபை மன்றத்தின் தீர்மானங்கள்

பெப்ருவரி 12ம் தேதி மெய்ஞானபுரம் சுதேச திருச்சபை மன்றத்தின் முதல் கூட்டம் மெய்ஞானபுரம் ஆலயத்தில் கூடினது. குருமாரும், சபைகளின் மூப்பர்களும் வந்திருந்தனர். அதில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம்

திருச்சபை மன்றத்தின் எல்லைக்குள் பணிபுரியும் குருமாருக்குச் சம்பளம் கொடுக்கவும், அவர்களுடைய குடியிருப்புக்காகக் குருமனைகள் கட்டிக் கொடுக்கவும் ஆகும் செலவை, C.M.S.லிருந்து உதவித் தொகையொன்றும் எதிர்பாராமல் திருச்சபை நிதியிலிருந்தே (Native church counsil) கொடுக்க வேண்டும்.

இரண்டாவது தீர்மானம் : மன்றத்தின் நடவடிக்கைகள் ஒரு நடவடிக்கை ஏட்டில் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட வேண்டும். மன்றத்தின் தலைவரான ஜாண்தாமஸ் ஐயர் அதை விளக்கிச் சொல்ல வேண்டும் என்பது.

உறுப்பினரனைவரும் பேசுவதற்குப் பூரண உரிமை இருந்த போதிலும், ஒரு சிலரே பேசவும் வாதங்களில் பங்கெடுக்கவும் செய்தனர்.

இரண்டாவது கூட்டம் ஜுன் 22ம் நாள் நடந்தது. முந்தின கூட்டத்து நடவடிக்கைகளை வாசித்து உறுதி செய்தபின், வரவு செலவுக் கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

இம்மன்றக் கூட்டம் முடிந்தபின், ஜாண்தாமஸ் தன் குடும்பத்துடன் குற்றாலத்திற்குச் சென்று இரண்டு மாதங்கள் ஓய்வெடுத்தார்.

அதன்பின், தாமஸ் அடிக்கடி சோர்வுற்றார். பெலவீனம் மிஞ்சி, உடம்பின் அவதி அதிகரித்தது. குற்றாலத்தில் செலவிட்ட இரண்டு மாதங்கள் அவருக்குச் சற்று நற்சுகமும் உடம்பில் தெம்பும், ஆவியில் உற்சாகமும் ஊட்டின. ஊர் திரும்பினதும் எல்லாச் சபைகளையும் சுற்றிப் பார்க்கவும், புதுக்குருமாரை ஊக்கப்படுத்தவும் வேண்டுமென்று திட்டமிட்டு செப்றெம்பர் மாதத்தில் மூன்றாம் ஞாயிறன்று (19 – 9 – 1869) புறப்பட்டார்.

ஜாண்தாமஸ் ஐயர் தன் சரீர பெலன் குன்றிவந்ததை உணர்ந்தார். முன்னாட்களில் மெய்ஞானபுரம், பிரகாசபுரம், கடாட்சபுரம், ஆசீர்வாதபுரம், சாத்தான்குளம் என்று ஐந்து வட்டங்களாயிருந்தவை, இந்நாளில் (1869ல்) மெய்ஞானபுரம் என்ற ஒரே வட்டமாகியிருந்த,

இப்பெரிய சேகரத்தின் பதினைந்து பாஸ்றரேட்களையும் அவற்றிலுள்ள 78 சபைகளையும், மிஷன் சபைகள் 55 ஐயும், குருமார் பதினைவர், உபதேசிமார், உதவி உபதேசிமார் முப்பத்தி ஆறுபேர் ஆகிய ஊழியரை மேற்பார்க்க இனி தன்னால் முடியாது என்று அறிந்தார். ஆகையால் அவர் சென்னை அத்தியட்சருக்கு எழுதி, பாஸ்றரேட் குருக்களையும் அவர்களது ஊழியத்தையும் கண்காணிப்பதற்குத் தனக்கு ஒரு இந்திய மேற்பார்வை உதவி மிஷனெரி குரு வேண்டுமென்று கேட்டார். அத்தியட்சரும் சாத்தான்குளம் குரு வீரவாகு ஐயரை அப்பதவியில் நியமித்து, மெய்ஞானபுரத்துக்கு மாற்றினார். (பத்தாண்டுகள் கழித்து இவர் மெய்ஞானபுரம் சூப்பரின்றென்டிங் மிஷனெரியானார் (1878)) 1869 ல் காயல்பட்டினத்தில் சுவிசேஷம் கூறப்போன டேவிஸ் தாமஸை அவ்வூர் முஸ்லீம் வாலிபர் நிந்தித்துக் கேலி செய்து, கற்களை வீசி விரட்டினர். ஆயினும் அவர், சற்று அமைதி கிடைத்த ஓரிடத்தில் நின்று, சுருக்கமாக நற்செய்தி கூறித் திரும்பினார். சுவிசேஷம் கேட்டவர்களில் முகமதியரல்லாதார் சிலர் விசுவாசிகளானார்கள்.

ஜாண்தாமஸ் ஐயரின் உடல் நலம் குறைந்து கொண்டே போயிற்று. அந்நாட்களில் அவருக்கு ஆறுதல் அளித்தவைகளில் ஒன்று மெய்ஞானபுரம் ஆலயம், அதின் கோபுரத்தின் அழகை அவர் அடிக்கடிப் பார்த்து அகமகிழ்வார்.

நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக் கொள்வீர்

1869ம் ஆண்டு மே மாதம் 22 ம் தேதி மத்தியான வேளை. எங்கிருந்தோ வந்த ஒரு பயங்கரப் புயல் காற்று. வடகிழக்கிலிருந்து வீசின அச்சண்டமாருதம் மக்கள் அனைவரையும் தங்கள் வீடுகளின் உறைவிடங்கலத்துக்குள் அடைத்துவிட்டது. காற்றோடு மேகங்கள். அவை பெருத்துப் பரவின. ஊழிகாலம் வந்துவிட்டது போன்ற கோலம்! பயங்கர மின்னலும் இடியும்! பங்களாவில் அனைவரும் உள்ளே. டேவிஸ் தாமஸ் மட்டும் வராந்தாவில். அக்காற்று மழையினூடே, கோபுரத்தைப் பார்த்துக் கொண்டே நின்றார். அவர் . . . அப்பப்பா, என்ன பயங்கரமான மின்னல்! . . . . . ஆ, கோபுரத்தின் உச்சியைத் தாக்கிவிட்டதே! கண்களை குருடாக்கும் வெளிச்சம்! காதுகளைச் செவிடாக்கும் இடி! . . . .

இடி விழுந்தது கோபுரத்தின் மேல் கோபுரம் சரிந்து நொறுங்கியதோ

என்று பார்க்க, கூசி மூடின கண்களை நடுக்கத்துடன் திறந்து பார்த்தார் டேவிஸ் தாமஸ் ஐயர். சோவென்று ஊற்றிக் கொண்டிருந்த மழையில், கோரமாக வீசியடித்த புயலில் கெம்பீரமாய் நிமிர்ந்து நின்றது கோபுரம்!

வெகு அண்மையில் விழுந்த இடிச் சத்தம் கேட்டு உள்ளேயிருந்த பங்களாவாசிகள் வராந்தாவுக்கு ஓடி வந்தனர். கோபுரத்தை காட்டினார் டேவிஸ். கோபுரம் என்ற பேச்சுக் குரல் கேட்டு, நோயுற்றவராய்ப் படுக்கையிலமர்ந்திருந்த ஜாண் தாமஸ் ஐயரும் நடுங்கி நடந்து வெளியே வந்து தன் குடும்பத்தாருடன் கோபுரத்தை ஏறிட்டு நோக்கினார். கொட்டிக் கொண்டிருந்த மழை, சீறி வீசிக்கொட்ட மடித்த சூறாவளிக் காற்று. அவற்றினூடே நிமிர்ந்து நின்றது கோபுரம்! குறுகி நின்ற ஜாண்தாமஸ் அதைக் கண்டு நிமிர்ந்து நின்றார். நிமிர்ந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்றார்.

மழையும் ஓய்ந்தது. காற்றும் அமர்ந்தது. வானம் தெளிவானது. சூரிய ஒளி கோபுரத்தின் மேல் படர்ந்தது. சேதம் தெரிந்தது. உச்சிப் பகுதியிலிருந்த ஒரு கல் மட்டும் பெயர்ந்து தரையில் விழுந்திருந்தது. சுண்ணாம்புப் பூச்சு சிறு பாளங்களாகப் பெயர்ந்து தெறித்திருந்தன. மின்னல் கோபுரத்தின் பக்கங்களின் வழியாய் இறங்கின பாதை வெட்டுக் கோடரி (Pickaxe) கொண்டு கரையை வெட்டிக் கோடுண்டாக்கியது போல் மேலிருந்து கீழே வரைக் காட்சியளித்தது. சேதம் அதிகமொன்றுமில்லை. ஜாண்தாமஸ் ஐயரின் மெய்ஞானபுரம் மிஷனெரிப் பணியைப்போல கோபுரம் உறுதியாக நிலைத்து நின்றது. கல் ஒன்றை மட்டுமே அது இழந்திருந்தது. அந்தக் கல் கீழே தரையில் விழுந்து உருண்டோடியிருந்தது.

1870ம் ஆண்டு பிறந்தது. வழக்கம் போல முதலாம் தேதி காலை புது வருஷ ஆராதனை. அதன்பின் போர்டிங் பெண்கள், மிஷனெரிக் குருமாரிருவரையும் அம்மாள்மாரையும் சந்தித்து வாழ்த்துதல், பின் சபையார், குருமார், உபதேசிமார், ஆசிரியர் முதலியோரின் சந்திப்புகள் இவ்வாறு நாள் முழுவதும் மக்கள் தங்கள் தாய்த் தந்தையரான, மிஷனெரிமாரை வாழ்த்தி, ஆசீர்வாதம் பெறும் நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன. தாமஸ் ஐயர் வழக்கம் போலத் தனது மிஷனெரிக் கடமைகளை நிறைவேற்றி வந்தார்.

ஜனவரி மாதம் மத்தி போல் அவருடைய வியாதி திரும்பவும் தலை

காட்டியது. அந்நாட்களில் மிஷனெரி கான்பரன்ஸொன்று பாளையங்கோட்டையில் கூடுவதாயிருந்தபடியால், அவர் அங்கே சென்று ஒரு டாக்டரையும் பார்த்து வரத் திட்டம் செய்தார். அவ்வாறே செய்து, கான்பரன்ஸ் முடிந்த பிறகும், பாளையங்கோட்டையில் சார்ஜென்ற் மற்றும் அம்மாளும் அவரை வெகு அன்புடனும் கரிசனையோடும் கவனித்துக் கொண்டனர். மருத்துவரும் அடிக்கடி வந்து பார்த்து, சிகிட்சை செய்தார்.

தாமஸ் சார்ஜென்றிடம் இந்த வியாதி என் மரணத்தில்தான் முடியுமோ என்று எண்ணுகிறேன் என்றார். தான் விரைவில் இறக்க நேரிடலாம் என்று சார்ஜென்றிடம் சொன்ன தாமஸ், உடனேயே முகமலர்ச்சியுடன் என்னுடைய உடல் நிலை பொதுவாக நன்றாகத்தான் இருக்கிறது. ஆகையினால், கர்த்தர் இன்னமும் கொஞ்ச காலம் என்னை உலகில் விட்டுவைக்கச் சித்தமாயிருப்பாரானால், மருத்துவம் பலனளிக்கும் என்று நம்புகிறேன் என்றார். அவருடைய வியாதியும் கொஞ்சங் கொஞ்சமாக, நீங்கிப் படிப்படியாக சுகம் கிடைப்பது போலிருந்தது. அவருடைய மனைவியும் கூடவே இருந்து பணிவிடை செய்து வந்தார்.

மெய்ஞானபுரம் சேகர குருமார், ஊழியர், சபையார் முதலியவர்கள் அடிக்கடி பாளையங்கோட்டைக்குச் சென்று தங்கள் தந்தையைப் பார்த்துத் திரும்பினர். சேகர ஆலயங்களில் அவருக்காகத் தினந்தோறும் விண்ணப்பங்களும் மன்றாட்டுகளும் ஏறெடுக்கப்பட்டன. போர்டிங் பள்ளிகளில் மாணவ, மாணவிகளும் ஜெபித்து வந்தனர்.

சுகம் கிடைத்தபின் ஜாண்தாமஸ் ஐயரும் அம்மாளும் மெய்ஞானபுரத்துக்குத் திரும்பிவந்தனர். அதன்பின் சில நாட்கள் அவர் ஓய்வெடுத்தார்.

ஐயரவர்களின் மரணம்

மார்ச் மாதம் வந்தது. அத்துடன் வெயிலும் வந்தது. வந்து தாமஸ் ஐயரின் தலைவலியைத் தூண்டிவிட்டது. ஐயர் மறுபடியும் நோயுற்றார்.

சில நாட்களுக்குள் வியாதி முற்றிவிட்டது. ஏற்கனவே அடிக்கடி நோய்வாய்ப்பட்டு, நோவுற்று நலிந்த உடல் அந்த அகோரக் காய்ச்சலைத் தாங்கக் கூடாததாயிருந்தது. அவருடைய உடல் நிலை பற்றிய செய்தி விரைவில் பரவியது. மெய்ஞானபுரத்தையும் சேகரச் சபைகளையும் ஒருவிதக் கவலை தொற்றிக் கொள்ள ஊழியரும் குருமாரும் என்ன நேர்ந்து விடுமோவென்று பயந்து நடுங்கினர். நினைத்துப் பார்க்கவும் அஞ்சினர். அப்படி ஒருநாள் வரக்கூடாதென்று

கடவுளிடம் கெஞ்சினார்.

அந்த நாள் நெருங்கி வந்தது. அதை உணர்ந்தார் தாமஸ். தனக்குப் பின் தான் செய்து வந்த மிஷனெரி ஊழியத்தை யார் எடுத்து நடத்துவார். தன்னுடைய மிஷனெரி ஊழியத்தை முறைகளின்படி நடத்தாவிட்டால் அவ்வூழியத்தின் எதிர்காலம் என்னவாயிருக்கும், தன்னுடைய குடும்பத்தினர் எங்கிருப்பார், என்ன செய்வார் என்றெல்லாம் யோசிக்கலானார். மார்ச் மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை இரவெல்லாம் ஜெபத்துடன் யோசித்து ஒரு முடிவெடுத்தார். அவருடைய எண்ணமெல்லாம் தன்னுடைய சேகரத்தைப் பற்றியதாயிருந்தது.

செவ்வாய்க்கிழமை காலையில் சிரமத்துடன் எழுந்து நாற்காலியில் அமர்ந்து C.M.S. தாய்க் கமிற்றியாருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் அவர் தன்னுடைய அன்றைய உடல் நிலையைக் குறிப்பிட்டுக் கர்த்தர் தன்னை அழைக்கும் காலம் நெருங்கி வந்ததைத் தான் உணர்வதாகத் தெரிவித்து, மெய்ஞானபுரம் சேகர ஊழியத்தைப் பற்றித் தனக்கிருந்த பாரத்தை விளக்கித் தனக்குப்பின் சில ஆண்டுகளாவது தன் மகன் டேவிஸ் தாமஸ் ஐயர் சேகர மிஷனெரியாகப் பணிபுரிவது நலம் என்று தான் நம்புவதாகக் கூறி, அவரையே தன் இடத்தில் நியமிக்கத், தேவ நடத்துதலிருக்குமானால், கமிற்றி மனங்கொள்ள வேண்டும் என்று வேண்டி எழுதினார். அக்கடிதத்தை சென்னை C.M.S. கமிற்றி செயலர் P.S.ராய்ஸ்ற்றன் ஐயருக்கு (Rev.P.S. Royston) அனுப்புமாறு தன் மனைவியிடம் ஒப்படைத்து, களைப்பு மிகுதியினால் படுக்கையில் சாய்ந்தார். அம்மையாரின் கண்கள் பனித்தன.

புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை அவர் உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. ஞாயிற்றுக்கிழமை மெய்ஞானபுரத்தை நெருங்கின. அனைத்து ஆலயங்களிலும் விசேஷ ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. சபையில் முக்கியமானவர்கள், ஊழியர், ஆசிரியர் முதலியவர்களும் கிராமச் சபை மக்களிற் பலரும் பங்களாவுக்குச் சென்று ஐயாவுடைய உடல் நிலையைப் பற்றி விசாரித்துக் கவலை தோய்ந்த முகத்துடன் திரும்பிச் சென்றனர்.

நாசரேத் மிஷனெரி J.M.ஸ்ட்ரான் ஐயர் ஒரு மருத்துவர். அவர் வந்து, இங்கேயே தங்கிக் கூடவேயிருந்து மருத்துவம் செய்து வந்தார். ஐயருடைய உடல் நிலையையறிந்து அவருடைய மக்களனைவரும் வந்து சேர்ந்து விட்டனர். மூத்த மகன் ஜாண் டேவிஸ் தாமஸ் ஐயரும் மனைவியும் குழந்தைகளும் கூடவேயிருந்தனர்.

இளையமகன் ஜேம்ஸ் பயர்ஸ் தாமஸ் ஒரு மருத்துவர். இந்தியாவிலேயேயிருந்த அவரும் வந்து சேர்ந்தார். மூத்த மகள் மேரிஜேன் டிப் ஐயரின் மனைவி. டிப் ஐயர் அக்காலத்தில் விடுமுறையில் இங்கிலாந்துக்கு குடும்பத்துடன் போயிருந்தார். இரண்டாவது மகள் கேதரைனுக்கும் திருமணமாகிவிட்டது. கடைசி மகள் ஃப்ரான்ஸெஸும் மகன் எட்வர்டும் பெற்றோருடன் இருந்தனர்.

திங்கட்கிழமை மார்ச் மாதம் 28ம் தேதி அந்த நாள் அருவும் விடிந்தது. காலையிலிருந்தே தாமஸ் ஐயரின் பெலன் குன்றத் தொடங்கியது. மூச்சு விடுவதும் வாங்குவதும் சிரமம் கொடுத்தது. ஆனால் தெளிந்த அறிவுடனிருந்தார். கஷ்டத்தினூடேயும் மிகுதியான நேரத்தை ஜெபத்தில் செலவிட்டார். சிற்சில வேளைகளில் கண்களைத் திறந்து கவலை படர்ந்த முகத்துடன் அங்கிருந்த அம்மாளையும் பிள்ளைகளையும் பார்த்தார்.

அவருடைய முகத்தில் துக்கமில்லை. துயரமில்லை, கண்ணீருமில்லை, வருத்தமுமில்லை, விசனமத்தியிலும் முகத்தை மலர வைத்தார்.

மார்ச் மாதம் இறுதி நாட்களின் கொடிய வெயில், காலை வேளையாயினும், எரித்துக் கொண்டிருந்தது. மத்தியான வேளைக்கோ இன்னமும் வெகு நேரமிருந்தது. உயர்ந்து, உள்ளே ஓலைப்பாய்களாலும் மேலே பனை ஓலைகளாலும் மேவப்பட்டிருந்த, அந்தப் பெரிய பங்களாவில் வெப்பம் இறங்காமல் கூடுமான மட்டும் கொஞ்சம் இதமாகவேயிருந்தது எனினும், பங்காக்கள் (Punkahs) ஆடிக்கொண்டேயிருந்தன.

காலை ஏழு மணிக்குப் பாளையங்கோட்டையிலிருந்து சார்ஜென்ற் ஐயர் வந்து சேர்ந்தார். அவர் வந்திருக்கிறார் என்ற செய்தியைத் தாமஸ் ஐயருக்கு தெரிவித்தார்கள். உடனே அவருடைய முகம் பிரகாசமடைந்தது. 33 ஆண்டுகளாக திருநெல்வேலியில் C.M.S. ஊழியத்தைச் செய்து வந்த மூத்த தலைவர்களல்லவா இருவரும்? அவர்களுடைய நட்பும் அன்பும் ஆழமானவை. இருவரும் ஒருவரையொருவர் நன்கறிந்தவர்கள். சுகதுக்கங்களிலும், வெற்றி தோல்விகளிலும் சம பங்கெடுத்தவர்கள். கருத்தொருமித்த கர்ம வீரர்.

சார்ஜென்ற் ஐயர் உள்ளே வந்தார். நண்பனருகில் சென்றார். இருவரும் கை குலுக்கிக் கொண்டனர். அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்த

சார்ஜென்ற், தாமஸ் ஐயரின் உயிர் குறைந்துகொண்டே போனதைக் கண்டார். அருமைச் சிநேகிதன் நித்தியத்தின் வாசலில் நிற்பதை அறிந்தார். உயிர்த் தோழனின் உயிர் ஊசலாடுவதைப் பார்த்தார். ஓர் உத்தம ஊழியன் தன் ஓட்டத்தை முடிக்கப்போவதை உணர்ந்தார்.

இன்று மரண நேரம் சமீபித்திருக்கும் இன்றும், தாமஸின் கைகளைப் பற்றிக் கொண்டு, சார்ஜென்ற் இரட்சிப்பின் கன்மலையானவரில் உங்கள் கால்கள் ஊன்றியிருக்கின்றனவா? என்று கேட்டார். தாமஸ் அங்கு சுவரில் படுக்கையினருகில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு அட்டையைக் காட்டினார். அதில், இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும், என்றும் மாறாதவர் என்ற திருவசனம் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது. தன் விரல்களால் அதைச் சுட்டிக் காட்டி, பின்பு டேவிஸ் தாமஸ் பரிசுத்த வேதாகமத்தைத் திறந்து 23ம் சங்கீதத்தை வாசித்தார். சார்ஜென்ற் ஜெபம் செய்தார். மற்றவர்களோடு தாமஸும் சத்தமாக ஆமென் என்றார்.

அதன்பின் அவர் அதிகமாகப் பேசவில்லை. நாடி விரைவாகக் குறைந்தது. மூச்சு விடுவது நேரமாக ஆக கஷ்டமாயிருந்தது. அவர் இடைக்கிடையே அறையிலிருப்பவர்களையும் அங்கு நடப்பவற்றையும் பார்த்தார். அறையில், இந்த வியாதிக் காலம் முழுவதும் அவருக்கு மருத்துவம் செய்த நாசரேத் மிஷனெரி டாக்டர் J.M. ஸ்ட்ரான் ஐயர், பண்ணைவிளை மிஷனெரி J.D. சிம்மன்ஸ் ஐயர், பாளையங்கோட்டை ஆசிரியப் பயிற்சிப் பள்ளித் தலைவர் தாமஸ் ஸ்ப்ராட் ஐயர், பாளையங்கோட்டை சாராற்றக்கர் பள்ளித் தலைவர் A.H. லாஷ் ஐயர், மெய்ஞானபுரம் உதவி மிஷனெரி D. வீரவாகு ஐயர், டேவிஸ் தாமஸ் ஐயர், ஜேம்ஸ் தாமஸ், தாமஸ் அம்மாள் முதலியோர் இருந்தனர். சார்ஜென்ற் சில ஞானகீதங்களையும் திருவசனங்களையும் தெரிந்தெடுத்து, நிறுத்தி நிறுத்தி ஒவ்வொன்றாக வாசித்தார். தாமஸ் அவைகளைக் கேட்டார். அவருடைய அறிவு தெளிவாயிருந்தது. அவ்வசனங்கள் அவருக்கு ஆறுதல் அளித்தன.

சேகர குருக்கள், உபதேசிமார் மற்றும் ஊழியர் முதலியவர்கள் தாமஸ் ஐயரின் கண்காணிப்பிலிருந்த பதினைந்து பாஸ்ற்றரேட்களிலும் மிஷன் பகுதிகளிலுமிருந்து வந்து சேர்ந்தனர்.

பங்களாவில் நிசப்தம். ஆண் பெண் போர்டிங் பள்ளிகளில் நிசப்தம். மெய்ஞானபுரம் கிராமத்தில் நிசப்தம். சேகரத் தந்தையின் ஆவி அமைதியாக ஒடுங்கிக் கொண்டிருந்தது. சார்ஜென்ற் வாசித்த திருவசனங்கள் அவருடைய ஆத்துமாவைத் தேற்றிக்கொண்டிருந்தன. நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

மணி பிற்பகல், மூன்றாவது அழைப்பு வந்தது! பரலோகக் கீத சத்தம் அவர் காதுகளில் தொனித்ததுவோ!

தாமஸ் கண்களைத் திறந்து தனக்கருகிலிருந்தவர்களைப் பார்த்து, நேராகப் படுத்திருந்த தன்னைச் சற்று ஒருக்களித்துப் படுக்க வைக்குமாறு சைகைகளால் தெரிவித்தார். அவர்கள் அவரை இடது புறமாய்ச் சற்று ஒருக்களித்து வைத்தனர். அது அவருக்குக் கொஞ்சம் வசதியாயிருந்தது போல்த் தோன்றியது.

சில நிமிடங்கள் கடந்தன. தென் நெல்லை அப்போஸ்தலன் ஒரு நீண்ட மூச்செடுத்தார் . . . . அவருடைய ஆவி பிரிந்தது.


ஜாண்தாமஸ் ஐயர் தான் நேசித்துச் சேவித்த இரட்சகரின் சந்திதானத்தில் நிற்கும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டத்தில் சேர்ந்து விட்டார்! அங்கு மிகுந்த ஆரவாரம்! இங்கு அமைதி! கண்ணீர்!

மரண வேளையிலும் சாட்சி பெற்ற தொண்டன்


ஐயரவர்களின் மரணப்படுக்கையில் அருகேயிருந்த சார்ஜென்ட் ஐயரவர்கள் (பின் அத்தியட்சரானவர்) கீழ்க்கண்ட சாட்சி கொடுத்தார்கள். (இது பின்னால் எழுதப்பட்டது)

இன்று சரியாக 3 1/2 மணியளவில் கனம் ஜாண்தாமஸ் ஐயரவர்களை இழந்தோம். இத்துயரச் செய்தி கிராமத்தில் தீவிரமாகப் பரவியதும், திரள் கூட்டமான பிள்ளைகளும், பெரியோரும் தொண்டனின் இல்லத்தில் இடம் கொள்ளாமல் போகுமட்டும் கூடினர். கண்ணியத்திற்குரிய பழம்பெரும் தலைவர் தனது 33 ஆண்டு பயன்பெறும் சேவையை இப்பகுதியில் முடித்து மறுமையின் பாக்கியம் அடைந்தார்கள்.

கனம் ஜாண்தாமஸ் ஐயரவர்களின் நுண்ணறிவு, பிறரை மதிக்கும் பண்பு, எக்காரியத்தையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயலாற்றும் தன்மை, எவரையும் தன் வயப்படுத்தும் பெருந்தன்மை ஆகியவை அவர்களது பணிவிடையின் மகுடமாக இருந்தது மட்டுமல்லாமல் பிறரை அப்பணிவிடையில் தொடர்ந்து செல்ல ஊக்குவித்தது எனலாம். கனம் ஐயரவர்களின் சுவிசேஷப்படை முயற்சியின் பலன் நமது கண்களுக்கு மறைவாயிருந்த போதிலும் ஆண்டவரின் வருகையின் நாளில் பிரத்தியட்சமாய் விளங்கும். தன் போதனையின்படியே வாழ்ந்து காட்டும் உத்தமத் திருத்தொண்டன். இந்தியச் சபைக்குச் சுய தேவைப் பூர்த்தி என்றும் எண்ணத்தைப் பின்னிட்டுச் சொன்னார். ஐயரவர்களின் உடலைச் சுமந்து சென்ற 12 குருக்களிலும் கனம் ஐயரவர்களின் பணிவிடையின் ஆவி இரட்டிப்பாய் இறங்க வேண்டும் என நான் ஜெபிக்கிறேன் என்பதே.



ஜாண்தாமஸ் ஐயரவர்கள் மருமகன்
ஆஸ்டன் டிப் ஐயர்



ஜாண்தாமஸ் ஐயரவர்களின் இறுதி காலத்தில்
மருத்துவம் பார்த்த மருத்துவர் **J.M.ஸ்ட்ராச்சர்**



ஜாண்தாமஸ், மேரிதாமஸ்
இணைந்திருக்கும் கல்லறை



எழில்மிகு பூங்காவிடை ஐயரவர்களின் கல்லறை

கனம் ஐயரவர்களின் உடல் ஆலய வளாகத்திற்கு 12 இந்திய குருக்களால் சுமந்து செல்லப்பட்டது. உள்ளூர் குருவானவரால் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு மகத்துவமான தேவாலயத்தின் வடபுறம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

C.M.S. சங்கத்தாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மேரி தாமஸ் அம்மையார், அவரது பிள்ளைகள் மற்றும் பேர பிள்ளைகள் நமது ஆலயத்துக்கு 1899 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி ஒரு கின்னரத்தை (Organ) நன்கொடையாக வழங்கினார்கள்.

திருமதி தாமஸ் அம்மையார் 1899 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4ம் நாளாகிய அவர்களின் மரண நாள் மட்டும் எலியட் டக்ஸ்போர்டு பாடசாலையைத் தொடர்ந்து நிர்வகித்து வந்தனர். அவர்களின் இரு குமாரரும், குமாரத்திகளும் சுவிசேஷ சபை சங்கத்திற்காகப் (C.M.S.) பெரும்பாலும் மெய்ஞானபுரத்தில் பலன் தரும் சேவை செய்தனர். சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன.

ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவங்குகிறவரும், முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். எபி. 12 : 1

பூ உதிரலாம், புல் உலரலாம், நிழல் மறையலாம், தேவனுடைய வசனமோ நிலைத்திருக்கும் என்பதை மெய்ஞானபுரம் ஆலயமும், ஜாண் தாமஸின் வாழ்க்கையும் தெளிவுப்படுத்துகிறது. 28.3.1870 அந்நாளில் தென் நெல்லை அப்போஸ்தலன் தன் பணியை முடித்து அழிவில்லா கிரீடம் பெற்றுவிட்டார். அவரது அப்போஸ்தல பணி நிலைத்துள்ளது. அஞ்ஞானத்திலிருந்து மெய்ஞானத்திற்கும், இருளிலிருந்து ஒளிக்கும், வரவழைக்கப்பட்ட பரிசுத்த ஜனமாக இப்பக்தர் விருப்பப்படி ஆலயங்களை, கல்வி நிறுவனங்களை புதிதாக உருவாக்கும் திருச்சபைகளாக செயல்படுவோம்.

தேவரீருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

வால்ஷ் அம்மா

மெய்ஞானபுரத்தில் ஜாண்தாமஸ் அவர்களின் மனைவி மேரி தாமஸ், மகள் பிரான்ஸஸ் தாமஸ் மற்றும் ராயிட்ஸ், டிரேலியானி, வால்ஷ் போன்ற ஆங்கில பெண் மிஷனெரிமார் தாய்க்குலத்துக்காக தன்னலமற்ற சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். இவர்களில் வால்ஷ் அம்மாவைப் பற்றி சில செய்திகளை தெரிவிப்பது என் கடமை.

தாய்மாரும் தொழில் செய்து வருவாய் ஈட்ட வேண்டும் என்ற உயர் நோக்கு மிஷனெரிமாருக்கு இருந்தது. மெய்ஞானபுரத்தின் இயற்கை சூழ்நிலை பெரிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏற்றதாய் இல்லை. ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் சித்திரத்தையல் தொழில் நம் தாய்மாருக்கு ஏற்றது என அறிந்தனர்.

இந்நிலையில், பெண்களுக்குக் கல்வி புகட்ட வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து தற்போது இயங்கி வரும் பெண் பாடசாலையின் வளாகத்தில் 1844 நான்கு சிறுமிகளைக் கொண்டு எலியட் டக்ஸ்போர்டு பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. அது நாளாவட்டத்தில் எட்டாம் வகுப்பாக உயர்த்தப்பட்டது. எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவிகளை பாளையங்கோட்டை சாராள் டக்கர் பள்ளிக்கு மேல் படிப்புக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

ராயிட்ஸ் அம்மா அவர்களின் முயற்சியால் 1944ல் இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியானது (Highschool). விடுமுறையில் இங்கிலாந்து சென்ற ராயிட்ஸ் அங்கேயே மரணமடைந்தார்கள்.

கெட்ரூட் பெக்கன்ஹாம் வால்ஷ் என்ற ஆங்கில பெண்மணி சமூக சேவையில் நாட்டம் கொண்டவர்கள். கண் ஆஸ்பத்திரி சேவை சிறந்தது என உணர்ந்து மதுரை வந்தனர். ஆனால் ராயிட்ஸ் பணியாற்றிய பெண் பள்ளிக்கு கரஸ்பாண்டன்ட் ஆக அனுப்பப்பட்டனர். வால்ஷ் அவர்களும் நீதிபதி எர்னஸ்ட் என்பவரும் இரட்டைப் பிள்ளைகள். பெக்கன்ஹாம் என்ற பிஷப் வால்ஷின் சகோதரர் மிகவும் அன்புள்ளம் கொண்ட வால்ஷ், மெய்ஞானபுரம் தாய்மாரின் முன்னேற்றத்திற்காக சித்திரத்தையல் தொழிலை சிறப்பாக நடத்தினார்கள்.

ஏறக்குறைய 50 தாய்மார்கள் வால்ஷ் வசித்த பங்களாவின் பரந்த திண்ணையில் அமர்ந்து ஊசியினால் ஆங்கிலேயருக்கு ஏற்ற துணிகளில் சித்திரத் தையல் செய்வார்கள். அவர்கள் மிகவும் சுத்தம் பேண வேண்டும். ஏனெனில் இவர்களால் செய்யப்பட்ட மேஜை விரிப்புகள், தலையணை உறைகள், கைக்குட்டைகள், ஜன்னல்கள் துணிகள் போன்றவை இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. சென்னையில் விக்டோரியஸ் இன்ஸ்டிடியூட் என்ற வியாபார ஸ்தாபனமும் பெங்களூரில் கிரீன் ஷாப் என்ற நிறுவனமும் இந்த சித்திரத்தையல் ஆடைகளை விரும்பி வாங்கி மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன.

தையல் தொழில் செய்த தாய்மாருக்கு நாணயங்களுக்கு நல்ல மதிப்பு உள்ள அக்காலத்திலேயே மாதம் ரூபாய் ஊதியம் அளிக்கப்பட்டது. இதனால் பல குடும்பங்கள் செழித்து முன்னேறின.

குன்னூரில் உலகப் பிரசித்தப் பெற்ற வெறி நாய் கடிக்கு மருந்து தயாரிக்கும் (பாஸ்டியூர் – இன்ஸ்டிடியூட்) நிறுவனத்தின் முக்கிய உறுப்பினர். மெய்ஞானபுர வட்டாரத்தில் வெறிநாய் கடித்தவர்களைக் காப்பாற்ற வால்ஷ் செய்த சேவை போற்றத்தக்கது.

இரண்டாம் உலகப் போரில் ஆகாய விமானங்கள் குண்டு வீசி நாசம் விளைவிக்கும் என்ற பீதி நாடெங்கும் நிலவியது. ஆகாய விமானம் இரைச்சல் கேட்டதும் ஓடோடி தப்புவிக்க பள்ளி வளாகத்தினுள் பதுங்குக் குழிகளை வால்ஷ் அம்மையார் அமைத்து அதற்கான பயிற்சியும் அளித்தனர். பயன்படாத பதுங்குக் குழிகளுக்குள் நல்ல பாம்பு கூட்டமே பதுங்கி வம்ச விருத்தி செய்து கொண்டிருந்தன. ஒரே நாளில் 19 நல்லபாம்புகளை ஊர் மக்கள் கொன்றனர்.

வால்ஷ், சாரணிய (Scout) இயக்கத்தில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். நீல நிற சாரணிய சீருடை அணிந்து மிடுக்குடன் பள்ளிச் சிறுமிகளுடன் நடந்து செல்லும் காட்சி, நம்மையும் சாரணியர் இயக்கத்தில் பங்கு கொள்ள வைக்கும். மிகவும் கவர்ச்சியான கிடைத்தற்கரிய சயாமீஸ் பூனைக் குட்டிகளை வால்ஷ் அம்மையார் ஆசையாக வளர்த்தார்கள். இப்பூனைகள் அவர்கள் வசித்த

பங்களாவினுள் இங்குமங்குமாக ஓடி விளையாடும். பூனைக்குட்டிகள் தேவைப்படுவோர் வால்ஷ்க்கு மனு கொடுக்க வேண்டும். வரிசைக் கிரமமாக பூனை குட்டிகளை இலவசமாக கொடுப்பார்கள். பூனைக் குட்டிகளைப் பெறுவோர் அவற்றை எப்படி பேணி வளர்க்க வேண்டும் என்ற உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்தும் போட வேண்டும்.

வால்ஷ் அவர்கள் வயதான காலத்தில் தான் மரித்தார். தான் மரித்தபின் தனது உடல் பாளையங்கோட்டை குளோரிந்தா ஆலய வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்கிற தன்னுடைய விருப்பத்தை அத்தியட்சாதீனத்துக்கு தெரிவித்தார்களாம்.

28.8.1966 ல் தனது 91 வயதில் மெய்ஞானபுரத்தில் வால்ஷ் மரணமடைந்தார்கள். மெய்ஞானபுரம் பரிசுத்த பவுலின் ஆலய வளாகத்தில் நல்லடக்கம் நடந்தது. மெய்ஞானபுரத்து மக்களுக்கு சேவை செய்த கடைசி ஆங்கில மிஷனெரி வால்ஷ் அம்மையார் அவர்களே. உயர் குடும்பத்தில் பிறந்து வாழ்க்கை வசதிகளைத் துறந்து உற்றார் உறவினரையும் தாய் நாட்டையும் விட்டு வாழ்வதற்கு வசதியற்ற நம் நாட்டிற்கு வந்து தன் வாழ்க்கையையே தியாகம் செய்த இந்த அம்மையாரை மெய்ஞானபுரத்து மக்கள் என்றுமே மறக்கக் கூடாது.

தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.

வேதாகமம்

இவ்விடத்தில் தமிழ் வேதாகமத்தைப் பற்றி எடுத்துரைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் வேதாகமத்தை மொழி பெயர்த்ததில் நம் மெய்ஞானபுரத்துக்கும் ஒரு பெரும் பங்கு உண்டு. கனம் ஜாண்தாமஸ் ஐயரவர்களின் மருமகன் கனம் ஆஸ்றன் டிப் ஐயரவர்கள் தமிழ் வேதாகம மொழி பெயர்ப்பு குழுவில் ஒரு அங்கத்தினர் என்பது நமக்கு கிடைத்த ஒரு பெரிய பெருமை, கிருபை, ஆண்டவரின் ஆசீர்வாதம்.

நமது பரிசுத்த வேதாகமம் அதன் மூல பாஷைகளாகிய எபிரேயு, கிரேக்கு, பாஷைகளினின்று நேராகத் தமிழிலாக்கப்பட்டிருக்கிறது. இவ்வுத்தம காரியத்தை முதன் முதலாவது ஆரம்பித்து முடித்தவர் தென் இந்தியாவின் முதல் சீர்திருத்த சபை மிஷனெரியாகிய தரங்கம்பாடி கனம் பர்தலொமேயு ஸீகன் பால்கு ஐயர். ஆனால் இம்மொழிபெயர்ப்பு நல்ல தமிழில் எழுதப்படவில்லை. வசனமும், அழகாகவும், இனிமையாகவும் இல்லை. எனவே தரங்கம்பாடி மிஷனெரிகளில் பலர் வேறொரு திருப்புதல் செய்யின் நலம் என்றெண்ணி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். 18ம் நூற்றாண்டின் இறுதியில் வெப்பேரி மிஷனெரி கனம் பெப்ரீஷயஸ் ஐயர் இருபது வருஷமாய் (1753 – 1772) மொழிபெயர்ப்பு வேலையிலீடுபட்டு 1772 ஆம் ஆண்டு ஒரு புதிய மொழிபெயர்ப்பை வெளிப்படுத்தினர். இம்மொழிபெயர்ப்பு துவக்கத்தில் அதிகமாய் பாராட்டப்பட்டது. இம்மொழிபெயர்ப்புக்கு தங்கமய மொழி பெயர்ப்பு (Golden Version) என்றொரு பாராட்டுப் பெயரும் உண்டு. ஆனால் பெப்ரீஷயஸ் ஐயரின் மொழிபெயர்ப்பும் சில குறைபாடுகளுடையதாய் விளங்கவே திருநெல்வேலி C.M.S. மிஷனெரி ரேனியஸ் ஐயர் 1820 – 1835 க்குள் ஒரு புதிய மொழிபெயர்ப்பை அச்சிட்டார்.

இம்மொழிபெயர்ப்பில் மூல பாஷையின் கருத்தை தெளிவாக்குவதற்காக ரேனியஸ் தம் சொந்த வார்த்தைகளை உபயோகித்தார். (மூலத்தில் காணப்படாத வார்த்தைகளை) உபயோகித்திருந்தார். ஆகவே அதுவும் தமிழ்நாட்டுக்கு ஒவ்வவில்லை. 1850 ல் யாழ்பாணம் கனம் P. பெர்ஸிவன் ஐயர் செய்து முடித்த மொழிபெயர்ப்பு அரங்கேறவில்லை. எனவே சென்னை வேதாகமக் கிளை சங்கத்தினர் முதலில் ஒரு தற்காலிக மொழிபெயர்ப்பை வெளியிட்டு,

1858ல் முடிவான மொழிபெயர்ப்பைச் செய்து நிறைவேற்றுவதென்று தீர்மானித்துச் சென்னை S.P.G. மிஷனெரி டாக்டர் கனம் பௌவர் (Rev.Dr. Bower) ஐயரது தலைமையில் ஒரு குழுவமைத்தனர். அக்குழுவின் அங்கத்தினர்களின் பெயராவன.

1. கனம் டாக்டர் H. பௌவர் ஐயர் — S.P.G. சென்னை
2. கனம் டாக்டர் W. ட்ராஸி ஐயர் — அமெரிக்கன் மிஷன், மதுரை
3. கனம் டாக்டர் டஸ்பால்டிங் ஐயர் D.D., — யாழ்பாணம்
4. கனம் டாக்டர் J.W. ஸ்கடர் ஐயர் — அமெரிக்கன் டச்சு சீர்திருத்த சபை, வெல்லூர்
5. கனம் டாக்டர் E. சார்ஜன்ட் ஐயர் — C.M.S. பாளையங்கோட்டை
6. கனம் ஆஸ்றன் டிப் ஐயர் — மெய்ஞானபுரம்
7. கனம் T. பிரதர்டன் ஐயர் — S.P.G. நாசரேத்து
8. கனம் டாக்டர் R. கால்ட்வெல் ஐயர் D.D., — இடையன்குடி
9. கனம் J. கில்னர் ஐயர் — வெஸ்லியன் மிஷன், யாழ்பாணம்
10. கனம் A. பர்கஸ் ஐயர் — வெஸ்லியன் மிஷன், சென்னை
11. கனம் C.S. கோலாப் ஐயர் — S.P.G. தஞ்சாவூர்
12. கனம் F. வெய்லிக்ஸ் ஐயர் — L.M.S. திருவாங்கூர்
13. ஸ்ரீ முத்தையா பிள்ளை (H.A. கிருஷ்ணப் பிள்ளையின் தம்பி) — பாளையங்கோட்டை

இக்குழுவினர் 1858 ம் ஆண்டு வேதாகம மொழிபெயர்ப்பை ஆரம்பித்தார்கள். 1861 ஆம் ஆண்டு ஏப்ரல் 29ம் தேதி பாளையங்கோட்டையில் பிரதிநிதிகள் முதல்விசை கூடி நாளொன்றுக்கு ஒன்பது மணி நேரம் விடா முயற்சியாய் ஆறு வாரம் வேலைசெய்து, ஜுன் மாதம் நாலு சுவிசேஷங்களையும், அப்போஸ்தலர் நடபடிகளையும் முடித்தார்கள். இரண்டாவது கூட்டம் 1863ம் ஆண்டு ஜுன் 18ம் தேதி பழனியில் ஆரம்பித்து ஆகஸ்டு 1ம் தேதி முடிந்தது. மூன்றாவது கூட்டம் 1866 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் குற்றாலத்தில் கூடி மூன்று மாதம் வேலை நடந்தது. நான்காவது கூட்டம் 1868 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24 ம் தேதி குற்றாலத்தில் கூடி வேலையை ஆரம்பித்து, அக்டோபர் 23ல் முடித்தார்கள். இந்தக் குழுவுக்கு தலைவராக கனம் டாக்டர் H. பௌவர் ஐயரும், காரியதரிசியாக கனம் டாக்டர் கால்ட்வெல் ஐயரும் செயல்பட்டார்கள்.

சபை வளர்ச்சிக்கு ஜாண் தாமஸ் விதைத்த விதைகள்

1837 – நல்லூரில் ஜெபவீடு கட்டினார்

1838 – குற்றாலம் ஆலயம் கட்டினார்

1839 – மெய்ஞானபுரத்தில் மிஷனெரி பங்களா கட்டி குடியேறினார்

– பிரகாசபுரம் ஆலயக் கட்டுமானத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டார்.

1841 – ஆறுமுகனேரி அருகிலுள்ள சுப்பிரமணியபுரம் சபை உருவாக்கினார்

1842 – நாலுமாவடி ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்.

– இரட்சண்யபுரத்தில் சிற்றாலயம் கட்டினார்

1844 – மெய்ஞானபுரம் டக்ஸ்ப்போர்ட் கட்டிடத்தை பிரதிஷ்டை செய்தார்

– மெய்ஞானபுரம் ஆண்கள் போர்டிங் பள்ளியை நிறுவினார்

1845 – குப்பாபுரம் ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்

1847 – மெய்ஞானபுரம் ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்.

1850 – நாலுமாவடி ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்

1851 – பனைக்குளம் ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்

1852 – திருமலாபுரம் சபையை உருவாக்கினார்

– கீழப்புதுக்குடி சபையையும் பள்ளியையும் உருவாக்கினார்

– மெய்ஞானபுரத்திற்கு உதவி மிஷனெரியாக வந்த W.C. டார்னிங் – க்கு ஒரு வீடு கட்டினார். அதுவே பிற்காலத்தில் மிஷன் ஆஸ்பத்திரியாக பயன்பட்டது.

1857 – அமெத்தவொண்ணாக்குடி ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்

– சிறப்பூர் ஆலயத்திற்கு அஸ்திபாரமிட்டார்

1858 – மெய்ஞானபுரம் ஆலயத்திலுள்ள ஞானஸ்நான தொட்டியை பிரதிஷ்டை செய்தார்

– பூவரசூர் சபையை தோற்றுவித்தார்

– அறியான்மொழி சபையை தோற்றுவித்தார்

1860 – அறியான்மொழியில் சிற்றாலயம் கட்டினார்

– சத்தியநகரம் ஆலயத்தை புதுப்பித்தார்

– சுகநகரம், தோற்குளம், செல்வபுரம் ஆலயங்களை புதுப்பித்தார்

1866 – மீரான்குளம் சபையை ஸ்தாபித்தார்

BIBLIOGRAPHY

1. The Birth of a Bishopric by D.S. George Muller 1980.
2. The Trail of the Tirunelveli church by D.S. George Muller and Rev. V. Joseph Abraham. Published by the literature work standing committee of the Tirunelveli Diocesan Council 1964.
3. பரி. பவுலின் ஆலயம். மெய்ஞானபுரம் நூற்றாண்டு விழா மலர் 1985.
4. The foundation of the Diocese of Tirunelveli by Paul.S. Kadambavanam - 1960.
5. Origins of the Diocese of Tirunelveli by Paul.S. Kadambavanam - 1967. (Revised)
6. நெல்லை அப்போஸ்தலன் ரேனியஸ் by R.S. ஜேக்கப் 1993.
7. பலிபீடத்தின் பணிவிடைக்காரர்கள் by J. ஞானதுரை ராஜரத்தினம்
8. உலகத்தைக் கலக்கியவர்கள் by J. ஞானதுரை ராஜரத்தினம்
9. தென் திருநெல்வேலி அப்போஸ்தலன் மெய்ஞானபுரம் மிஷனெரி ஜாண்தாமஸ் ஐயர் by பேராயர் தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் 1977.
10. திருநெல்வேலி அப்போஸ்தலன் ரேனியஸ் by தே.அ. கிறிஸ்துதாஸ் 1976.
11. மறைய விருந்த மாணிக்க கற்கள் பாகம் I by D.A. கிறிஸ்துதாஸ் ஐயர்.
12. மறையவிருந்த மாணிக்க கற்கள் பாகம் II by D.A. கிறிஸ்துதாஸ் ஐயர்.
13. Memoir of the Rev. John Thomas by Rev. A.H. Grey Edwards 1904.
14. மெய்ஞானபுரத்தில் திருத்தொண்டாற்றிய மிஷனெரி கனம் ஜாண் தாமஸ் ஐயரவர்களுடைய வாழ்க்கை சுருக்கம்
15. கிறிஸ்துவுக்காக 2000 வரை by Rev. Appadurai, 2000
16. 150 வது பிரதிஷ்டை விழா மலர் by மெய்ஞானபுரம் பொது மகமைச் சங்கம்



ஆல்ட்டரில் உள்ள திருமேஜை



கருங்கல்லால் ஆன ஞானஸ்நான தொட்டி



பரிசுத்த பவுலின் ஆலய எழில்மிகு ஆல்டர் தோற்றம்